7278

# அற்புதமான வானம்

சிறுவர் சிந்தனைக் கதைகள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221

RS. 200. 00
01. 06. 2011

# அற்புதமான வானம்


குறிப்பு எண்
ACC. No. 7278
அ.க. 500
01/06/2011


சிறுவர் சிந்தனைக் கதைகள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

மூன்று தசாப்தங்களாக அனர்த்தங்களில் சிக்கி அகதிகளாகி முகாம்களிலும் மூலை முடுக்குகளிலும் முடங்கிக் கிடந்து அல்லலுறும் ஏதிலியர்களையும் அவர்களது சிறார்களையும் அரவணைத்து, ஆதரவளித்து, வாழவைத்துக் கல்விப் பயிர் வளர்த்து வரும் ஒபர்(சிலோன்) நிறுவனத் தலைவி செல்வி.சி.சூரியகுமாரி அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : அற்புதமான வானம்

ஆசிரியர் : ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்)

வகை : சிறுவர் இலக்கியம்.

உரிமை : ஆசிரியருக்கு

அட்டைப் படம் : ச.அ.அருள்பாஸ்கரன்.

முதற்பதிப்பு : 08 - 09 - 2009

வெளியீடு : அருள் வெளியீட்டகம்
37 / 7, மத்திய வீதி, உவர்மலை-
திருகோணமலை.
தொலைபேசி இல: 026-2221507.

கிடைக்குமிடம் : லங்கா புத்தகசாலை.
14.1. டயஸ் பிளேஸ்.
குணசிங்கபுரம்.
கொழும்பு-12.
தொ.பே. இல: 011- 2341942

ISBN : 955-98211-7-2

விலை : ரூபாய் 200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.....


1. அணிந்துரை
2. எனது உரை
3. நமது பூமியும் வானமும்
4. பால்வீதியும் அதன் எல்லைகளும்
5. ஞாயிற்றுத் தொகுதியும் நமது கோள்களும்.
6. கிரகங்கள்
7. ஞாயிறு என்னும் சூரியன்
8. புதன்
9. வெள்ளி
10. புவிக்கோளம்
11. பூமியின் சந்திரன்
12. செவ்வாய் வெளிப்புறக் கோள்கள்
13. வியாழன்
14. சனி
15. யுரேனஸ்
16. புளூட்டோ
17. நாட்களின் பெயர்
18. கிரகக் கடவுளர் கதை
19. சூரியன்
20. சந்திரன்
21. புதன்
22. வெள்ளி
23. பூமி
24. செவ்வாய்
25. வியாழன்
26. சனி
27. யுரேனஸ்
28. நெப்ரியூன்
29. புளூட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. இராசிக் கூட்டங்கள்.
31. நம்முன்னோர் கண்டறிந்த ராசிகள்
32. இராசிகளின் கதைகள்
33. வானமும் சூரியனும்
34. வானமும் சந்திரனும்
35. வானத்தில் சூரியனும் சந்திரனும்.
36. சந்திரப் பெண்
37. சகோதரச் சண்டை
38. நிலாப் பெண்
39. ஹெலியோஸ் சூரியன்
40. சூரியனும் சந்திரனும்
41. சோலும் மானியும்.
42. வானத்தின் கதை
43. கிரேக்க நாட்டில் நிலா.
44. பேரழகி கலிஸ்டா
45. அகப்பை வடிவில் கலிஸ்டா
46. சேணமிட்ட குதிரை
47. திருட்டுச் சகோதரர்கள்.
48. கார்த்திகைப் பெண்கள்
49. அரியட்னாவின் அழகு மகுடம்.
50. கசியோப்பியா விண்மீன் கூட்டம்.
51. அன்னப்பறவை.
52. அரியோன் விண்மீன்.
53. கிரகணங்கள் -சூரிய, சந்திர கிரகணங்கள்
54. கிரகணங்கள் பற்றிய கதைகள்
55. மகாபாரதக் கதை
56. மத்திய கிழக்கு நாட்டில்
57. கொலம்பஸ்
58. இந்து சமயத்தில் கிரகணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கேணிப்பித்தன் .ச.அருளானந்தம் அவர்களது 'அற்புதமான வானம்' எனும் சிறுவர் சிந்தனைக் கதைகளைப் படித்தபோது நமது இந்தப் பிரபஞ்சத்தில் இவ்வளவு அற்புதங்கள் கொட்டிக்கிடக்கின்றனவா? என்ற அதிசய எண்ணங்கள் தோன்றின. நான் அருளானந்தம் அவர்களோடு ஒன்றாகக் கற்பித்தவன். நெடுங்காலம் ஒன்றாகப் பழகியவன். அவர் ஆசிரியராக, அதிபராக, கல்விப்பணிப்பாளராகச் சேவையாற்றியவர். கேணிப்பித்தன் என்ற புனைபெயரில் கதைகள். கட்டுரைகள், கவிதைகள் எனப் பலவற்றை எழுதுவார். அவற்றைப் படித்து ரசிப்பதில் எனக்கு இன்பம். தனது சுயமுயற்சியினால் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியானார். இலக்கிய முதுமானிப்பட்டத்தையும் பெற்றார். முன்பள்ளிக் கல்வி என நாம் அழைக்கும் 'ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி அபிவிருத்தி'யில் டாக்டர் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

தனது தகைமையை வெளிச்சொல்லா மாண்பினர். அமைதியாக இருந்து தமிழோடு கல்விப் பணியாற்றுபவர். இதுவரை முப்பத்தொரு நூல்களை எழதி வெளியிட்டுள்ளார். சிறுவருக்கான கதைகள், பாடல்கள், நாவல்கள். கட்டுரைகள் எழுதுவதில் திருகோணமலை மாவட்டத்தில் முதன்மையானவராகத் திகழ்கிறார். 'அற்புதமான வானம்' உண்மையிலேயே அற்புதங்களின் பொக்கிஷமாக விளங்குகிறது. சின்னச் சின்ன வசனங்களால் கவர்ச்சியாகக் கதைசொல்லும் பாங்கால் வாசகர்களை ஈர்த்தெடுத்துச் செல்கிறார். தனது பட்டப்படிப்புக்குப் புவியியலை ஒரு பாடமாகப் படித்து, பாடசாலைகளில் மாணவர்களுக்குப் புவியியலைச் சுவையாகக் கற்பித்தவர். அற்புதமான வானத்தில் புவியியல், வானியல், பௌதீகவியல். இராசாயனவியல், உயிரியல் அத்தனையையும் கலவையாக்கிப் பல உண்மைகளைத் தந்துள்ளார்.

பிரபஞ்சத்தினை அப்படியே தொலைநோக்கி ஊடாக நமக்குக் காண்பிக்கிறார். வாயுக்கோளங்களையும், கற்கோளங்களையும், கிரகங்களின் அமைப்புக்களையும் எடுத்து விளக்கியுள்ளார். விஞ்ஞான ரீதியாக, புவியியல் ரீதியாக செய்திகளைக் கூறியுள்ளார். இந்நூல் புவியியலைக் கற்கின்ற மாணவர்களுக்கு ஒரு அறிவுப் பொக்கிஷமாகத் திகழும் என நம்புகிறேன். அதிசயிக்கத் தக்க செய்திகளைத் தந்த ஆசிரியர், சிறுவர்களைச் சிந்திக்கவும், ரசிக்கவும் எனப் பல கதைகளையும் தந்துள்ளார். வெளிநாட்டுக் கதைகளை நமது மாணவர்கள் தெரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறவேண்டும் என்பது அவரது ஆதங்கமாகும். விஞ்ஞானத்துக்கும். சோதிடக் கலைக்குமுள்ள தொடர்பினைக் கூறுகிறார். கிரகணங்கள் தோன்றுவதற்கான காரணங்களைப் புராண, இதிகாசங்களில் இருந்து காட்டி, அதனால் உலகத்தில் நடந்தேறிய சில நிகழ்வுகளையும் சுட்டியுள்ளார். அத்துடன் விஞ்ஞான ரீதியாக கிரகணங்கள் தோன்றுவதற்கான விபரங்களையும் தந்துள்ளார். பழங்காலத்து மக்கள் எவ்வாறு ராசிகளைக் கண்டறிந்தார்கள் என்பதோடு, அவற்றுக்கான கதைகளையும் தந்துள்ளார். வாசகர்கள் இவ்வாறான நூல்களை வாங்கிப் படிக்க வேண்டும், எழுதத் தூண்டவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டைபறிச்சான்-7<br>மூதூர்

செ. விபுணசேகரம்<br>உதவிக் கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

இந்நூல் நாம் வாழும் உலகத்தைப் பற்றியது. அதனைச் சூழ்ந்துள்ள வானத்தின் அற்புதங்களைக் கூறுவது. வானத்தில் நாம் காண்பவையும், காணாதவை பற்றியும் சொல்வது. நான் படித்துச் சுவைத்து அறிந்தவற்றை நீங்களும் படித்துச் சுவைக்க வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன். உங்கள் அனைவருக்கும் சுவையூட்டும் தகவல்களைத் தருகின்றேன். இந்தப் புதுமையான உலகத்தின் அற்புதங்களை நீங்கள் அறியவேண்டும். அவற்றை உங்கள் நண்பர்களுக்கும் கூறவேண்டும். அவர்களையும் வாசிக்கத் தூண்டவேண்டும். இந்த நூல்களை அனைவரும் வாசிக்கும்படி செய்வது உங்களது கடமையாகும்.

நமது சூழல் எவ்வளவு அழகானது. எத்தனையாயிரம் பொருட்களைக் கொண்டுள்ளது. அவை உயிருள்ளனவாகவும், இல்லாதனவாகவும் உள்ளன. இவற்றை நாம் தினந்தோறும் பார்க்கிறோம். ஆனால் அவைபற்றிச் சிந்திப்பதில்லை. வான்வெளி நீலமாகத் தெரிவதேன்? இரவில் ஒளிவிடும் நட்சத்திரங்கள் பகலில் எங்குபோய் ஓய்வெடுக்கின்றன. பகலில் சூரியனும், இரவில் சந்திரனும் மாறிமாறி வருவதேன்? சூரியன் தேய்வதில்லை. சந்திரன் தேய்ந்து வளர்வதேன்? வானத்தில் எத்தனையாயிரம் நட்சத்திரங்கள் உள்ளன. கிரகங்கள் எப்படிப்பட்டவை? அவற்றை வணங்குகின்ற மக்கள், அவற்றில் என்ன உள்ளன என்பவற்றுக் கெல்லாம் இந்நூல் விடை சொல்வதாக அமைந்துள்ளது. இவற்றைப் பற்றிய தேடலாக எழுந்ததுதான் இந்த நூல். ஒவ்வொரு நாட்டிலும். மொழியிலும் இவ்வாறான கதைகள் உண்டு.

அவற்றைப் பற்றி நீங்களும் அறியவேண்டும். அதற்காகவே இந்தக் கதைகளையும், செய்திகளையும் உங்களுக்குத் தருகிறேன். இவற்றில் உங்களுக்குத் தெரிந்தவைகளும் உண்டு. தெரியாதவைகளும் அடங்கும். வாசித்து மகிழ்வதற்காகவே எழுதியுள்ளேன். வாசிப்பதால் நமது அறிவு விரிவடையும் அல்லவா? தேடல் பிறக்கும். நீங்களும் எழுதலாம். தேடி எழுதவேண்டும். இந்நூலாக்கத்துக்கு உதவியோருக்கும், இணையதளங்கள் மூலம் தகவலைத் தந்தோர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி. படங்களைத் தந்துதவிய எனது மகன் ச.அ.அருள்பாஸ்கரன், செவ்வைபார்த்ததோடு அமையாது அணிந்துரையையும் தந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.விபுணசேகரம் அவர்களுக்கும், பின்னட்டையில் அறிமுகம் செய்யும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.ஒ.குலேந்திரன் அவர்களுக்கும், எனது ஆக்கங்களைச் சந்தைப்படுத்தித் தொடர்ந்து எழுதுமாறு அறிவுறுத்தும் ஸ்ரீலங்கா புத்தகசாலை முகாமையாளரர் திரு.கே. சதீஸ் அவர்களுக்கும், அழகாக அச்சிட்டுதவிய நிசான் பிரின்டர்ஸ் அலுவலர்களுக்கும், வாசகர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி. இந்நூலைப் படிப்பவர்களிடமிருந்து அவர்களது கருத்துக்களை அறிய ஆவலாக இருக்கிறேன். எழுதுங்கள்.

ச.அருளானந்தம் (கேணிப்பித்தன்)
ஆலங்கேணி
கிண்ணியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பூமியும் வானமும்

நாம் வாழும் பூமி விசித்திரமானது. நாம் விரும்பலாம். அல்லது விரும்பாமல் விடலாம். ஆனாலும் நம்மைச் சூழந்து அதிசயங்கள் நடக்கின்றன. இந்தப் பூமியில்தான் உயிரினங்கள் வாழுகின்றன. ஏனைய கிரகங்களில் உயிரினங்கள் வாழ்வதற்கான ஆதாரங்களை விஞ்ஞானிகள் தேடுகின்றார்கள். பூமியும் ஒரு கிரகம்தான். 4.57 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். உயிர் வாழ்க்கைக்கு உகந்த தன்மையைப் பெறுவதற்கு இன்னுமோர் பில்லியன் வருடங்கள் சென்றிருக்கலாம். இவை அறிஞர்களது கருத் தாகும். நமது பூமியில் விலங்குகளும், தாவரங்களும் உள்ளன. இவற்றுக்கு உகந்த காலநிலையும். தேவைகளை நிறைவு செய்வதற்கேற்ற வசதியும், வளங்களும் உள்ளன. 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் ஒருகலத்தினைக் கொண்ட உயிரினங்கள் தோன்றின. 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் டைனோசர் இனங்கள் தோன்றின. 200,000 அயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் இன்றைய மனித இனம் தோன்றியதாக ஆய்வுகள் கூறுகின்றன.




பூமியின் அமைப்பும் விசித்திரமானது. பூமியின் மேற்பரப்பு மாற்றத்திற் குரியது. ஒரு காலத்தில் ஒரே கண்டத் திணிவாக பூமி இருந்தது. அதனை பஞ்சியா என அழைத்தார்கள். ஒரு பகுதி நிலமும், மறுபகுதி நீருமாக இருந்தது. புவிக்கோளவகத்தினுள் பாறைக்குழம்பு கொதி நிலையில் உள்ளது. அசைந்து புரண்டவண்ணம் இருக்கிறது. அதனால் மின்காந்த அலைகள் தோற்றம் பெறுகின்றன. மின்காந்த அலைகள் புவியோட்டைத் தாக்குகின்றன. அதனால் பூகம்பம், நிலநடுக்கம், ஆழிப்பேரலைகள் தோன்றி புவியில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. வெப்பம். வளி, மழை ஆகியவற்றாலும் புவியின் மேற்பரப்பு பாதிக்கப்படுகிறது. ஒன்றாக இருந்த நிலத்திணிவு பிளவுபட்டுப் பிரிகின்றன. வடஅமெரிக்கவும். ஐரோப்பாவும் தொடர்ந்து நகர்கின்றன. உயர் மலைகளும் இருந்த இடத்தில் இருப்பதில்லை. சராசரியாக ஒரு வருடத்தில் 4 சென்ரிமீற்றர் நகர்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. மனித இனம் மட்டுந்தான் சிந்தனைத் திறன்மிக்க செயல்களில் ஈடுபட்டுழைக்கிறது. தனது சூழலை ஆராய்கிறது. அனுபவங்களைப் பயன்படுத்தி வாழ்க்கையைச் செம்மைப் படுத்துகிறது.

பூமி ஒரு சமதளமான தட்டைப்போல் காட்சியளிக்கிறது. அப்படித்தான் நமது முன்னோர்கள் கருதினார்கள். தட்டின்மேல் பெரிய கூரையைப்போல் வானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெரிகிறது அல்லவா? முற்காலத்தில் பூமி மூன்று திமிங்கிலங்களின் மீது உள்ளது என நம்பினார்கள். ஒரு ஆமையின் முதுகில் உள்ளது என்றும் கருதினார்கள். பூமியின் ஓரங்களுக்குச் சென்று திமிங்கிலங்களைப் பார்க்க முடியவில்லை. சிறிது சிறிதாக மனிதர்கள் பயணங்கள் செய்வதற்கு ஆரம்பித்தனர். நடந்தார்கள். விலங்குகளில் பயணம்செய்தார்கள். படகுகளில் கடல்களில் பயணித்தார்கள். வழிதவறி விடாதிருக்க வானத்தைப் பார்த்தார்கள். வானம் அவர்களுக்குக் கைகொடுத்தது. நட்சத்திரங்கள் வானில் கண்சிமிட்டின. வழிகாட்டின. அக்காலத்தில்தான் நட்சத்திரங்களை நம்பினார்கள். 'வழிகாட்டும் நட்சத்திரம்' என்ற சொற்தொடர் தோன்றியது.

பூமியில் நிலநடுக்கம் தோன்றியது. பூமி நடுங்கியது. கடல் பொங்கி பெரும் அலைகளை வீசியது. எரிமலைகள் வெடித்துச் சிதறின. ஆனாலும் சூரியனும். சந்திரனும். நட்சத்திரங்களும் ஒரேமாதிரியாக நகர்ந்து கொண்டிருந்தன. பயணிகள் பலநாட்கள் பயணித்தனர். நட்சத்திரங்கள் தொடுவானத்துக்கு மேல் வருவதைக் கண்டார்கள். பின் கீழிறங்கி மறைவதையும் பார்த்தார்கள். பூமி பிரமாண்டமானது. தட்டையானது. அதனாற்தான் கடல்நீர் அப்படியே கொட்டாமல் நிலைத் திருக்கிறது என நம்பினார்கள். பின்னர் பூமி வட்டவடிவமான ரொட்டியைப் போன்றது. வளைந்துள்ளது என மனிதர்கள் நம்பினார்கள். பின்னர் பூமி அரை உருண்டையானது. சமுத்திரங்கள் அதன்மேல் அப்பியுள்ளன என நம்பினார்கள். சூரியனும். சந்திரனும். நட்சத்திரங்களும் கீழிறங்கி, மறுநாள் எதிர்த்திசையில் வருகின்றனவே. சிந்தித்தார்கள். சூரியனும். சந்திரனும் கிழக்கே உதிக்கத் தாமதமானதில்லை. பூமி அரையுருண்டை வடிவானதல்ல. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் பூமி உருண்டையானது என நம்பினார்கள்.

பூமிக்கு ஈர்ப்புச் சக்தியுண்டு. அதனாற்றான் பூமியில் உள்ள பொருட்கள் கீழே விழாதிருக்கின்றன. சமுத்திரங்களும். மலைகளும் அப்படியே இருக்கின்றன என அறிவுபூர்வமாகத் தெளிந்தனர். பூமியை வலம் வரும் சூரியனையும். சந்திரனையும் ரசித்தார்கள். சந்திரன் புவியின் உபகோள் என்பதைப் புரிந்து கொண்டனர். உண்மையைச் சொன்னவர்களுக்குத் தண்டனையும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்காலத்தில் பிரயாணிகள் நட்சத்திரங்களைப் பார்த்து தாங்கள் செல்லும் திசையைக் கண்டுபிடித்தார்கள் அல்லவா? வெவ்வேறு காலப்பகுதில் வெவ்வேறு உடுக்கோலங்களைக் கண்டார்கள். இதனைப் பார்த்து விவசாயத்தை விருத்தி செய்தனர். உலகிலுள்ள மக்கள் பல்வேறு காரணங்களுக்காக வானை நம்பி வாழ்கிறார்கள். ஆகாயத்தில் கடவுள் இருப்பதாக நம்புகிறார்கள். சக்திவாய்ந்த தெய்வங்கள் இருப்பதாகவும் பலர் நம்புகின்றார்கள். வானில் சொர்க்கம் இருப்பதாகவும் சொல்கிறார்கள். கடவுளரையும், கோள்களையும், உடுக்கோலங்களையும் தொடர்பு படுத்தும் கதைகளை இயற்றினார்கள். விண்வெளியை உருவாக்கியது யார்? விண்வெளியில் உள்ளவற்றை உருவாக்கியது யார்? அவற்றில் எல்லாம் என்ன இருக்கின்றன. மனிதர்கள் இருக்கிறார்களா? உயிரினங்கள் உள்ளனவா? இவை ஒன்றோடு ஒன்று மோதாமல் எப்படிச் சுழன்று வருகின்றன. எண்ணிப்பார்க்கவே ஆச்சரியமாகத் தெரிகிறது. இல்லையா?

வானத்தை அண்ணார்ந்து பாருங்கள். எப்படி இருக்கிறது? நமது வானம் அற்புதமானது. பகற்பொழுதில் நீலமாக இருக்கிறது. மேகக்கூட்டம் வெண்பஞ்சுபோல் பறந்துதிரியும். இரவினில் கருமையாகத் தெரிகிறது. மழைக்காலத்தில் இருண்டு கிடக்கும். வெயிற்காலத்தில் அற்புதமாகவிருக்கும். பகலில் நீலவானில் சூரியன் உலாப்போகும். வெப்பத்தைத் தந்து உலகை இயக்கும். சூரியனை நாம் கண்களால் பார்க்க முடியாது. கண்கள் கூசும். வெற்றுக் கண்ணாடியில் குப்பி விளக்கின் புகையைப் படியவைக்கலாம். அதனூடாகப் பார்த்தால் சிவந்த கோளமாய்த் தெரியும். இது நவீன தொழில்நுட்ப விஞ்ஞான யுகம். இப்போது சூரியனைப் பார்ப்பதற்குப் பலவகைச் செயற்கைப் பொருட்கள் உலாவருகின்றன. அவற்றின் ஊடாகப் பார்க்கலாம். ஆனால் சந்திரன் அவ்வாறல்ல. வெற்றுக் கண்களால் நாம் பார்க்கலாம். இரவில் நிலவின் ஆட்சி நடக்கும். நட்சத்திரங்கள் மின்விளக்குப் போடும். நிலவின் ஒளி இன்பத்தைத் தரும். சந்திரனின் உள்ளே கருமையான மறுக்கள் தெரியும். இரவெல்லாம் கண்சிமிட்டும் நட்சத்திரங்கள் பகலானதும் எங்கே ஓடி மறைகின்றன.?

வானில் நிலவு ஒரேமாதிரியாக இருப்பதில்லை. பிறையாக இருக்கும். பின் வளர்ந்து பூரண சந்திரனாகப் பிரகாசிக்கும். அதன்பின் படிப்படியாகத் தேய்ந்து மறைந்து போகும். அமவாசை தோன்றும். அமவாசையின் பின் கூனற்பிறை எட்டிப்பார்க்கும். ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டு செல்லும். முதற் பதினைந்து நாட்கள் வளர்பிறையாகத் தெரியும். அதனைத் தொடர்ந்து பூரணச்சந்திரன் வரும். அதனை முழுநிலவு அல்லது நிறைமதி என்கிறோம். பின்னர் தேய்பிறையாகும். இதற்கெல்லாம் பல கதைகள் உண்டு. கிரேக்கர்கள், ரோமானியர்கள். பபிலோனிர்கள், எகிப்தியர். சீனர். இந்தியர் போன்ற பலநாட்டு மக்களிடையேயும் பல்வேறு கதைகள் உலா வருகின்றன.

இரவில் வானம் அழகாக இருக்கும். பல அளவுகளில் நட்சத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்சிமிட்டும். பெரியனவாகவும், சிறியனவையாகவும் தெரியும். நட்சத்திரக் கூட்டம் இரவில் உலா வரும். அவை பகலில் எங்கே செல்கின்றன. ஓடி ஒளிந்து கொள்கின்றனவா? சில மாலை நேரத்தில் தெரியும். இன்னும் சில காலை வேளைகளில் தெரியும். சில நட்சத்திரங்கள் மிக நெருங்கி இருக்கும். சில வெகுதூரத்தில் இருக்கும். சில பிரகாசமாக ஒளிவிடும். சில மங்கலாகத் தெரியும். எத்தனை ஆயிரம் கோடி நட்சத்திரக் கூட்டங்கள் வானில் தெரிகிறன. அவற்றுள் கிரகங்களும் உள்ளன. நாம் வாழும் பூமியும் ஒரு கிரகந்தான்.

வானம்தான் மனிதர்களுக்கு ஆசிரியன். சூரியனும் சந்திரனும் காலத்தைக் காட்டிக் கற்றுக் கொடுத்தன. நாட்காட்டிகளான கலண்டர்களை வகுத்துக் கொள்ள உதவின. பூமி தன்னை ஒருமுறை தனது அச்சில் சுற்றிவருவதால் இரவுபகல் உருவாவதைக் கண்டார்கள். சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றி வரும் காலத்தைக் கணித்தார்கள். பூமி சூரியனைச் சுற்றி வருவதை அவதானித்தார்கள். நாள், கிழமை, மாதம் வருடம் ஆகியவற்றைக் கணிக்க வானம் உதவியது. பருவகாலங்களை அறியச் செய்தது.

ஆயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன் சூரியக் குடும்பம் தோன்றியதாக விஞ்ஞானிகள் கூறுவார்கள். நமது உலகமும் கிரகங்களும் சூரியனை மையமாகக் கொண்டு வலம் வருகின்றன. நமது சூரியக்குடும்பம் பால் வெளியில் உள்ளது. பால்வெளியில் நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றைத் தாரகைகள் அல்லது உடுக்கள் எனவும் அழைப்பார்கள். இவை தனியாகவும், கூட்டங்கூட்டமாகவும் பரந்துள்ளன. சில கூட்டங்கள் சிறிதாகவிருக்கும். இவற்றை இணைத்துப் படங்களை வரைந்தார்கள். அவர்களுக்குப் பரிட்சையமான பற்பல உருவங்கள் தோன்றின. இச்சிறிய கூட்டங்களை ஒன்றிணைத்துப் பெரிய கூட்டமாக இணைத்துப் பார்த்தார்கள். அவற்றுக்கும் பெயரிட்டார்கள். அவைகள்தான் ராசிகள் ஆகும் அவற்றை வரைபடமாகத் தயாரித்தார்கள். கிரேக்கர்கள் 48 வகையான தாரகைக் கூட்டங்கள் உண்டு என்றனர். சிலர் இன்னும் 40 வகையானவை உண்டு என்றனர். ஆனால் பின்னர் பன்னிரண்டு ராசிக்கூட்டங்களை அறிஞர்கள் ஏற்றுள்ளார்கள்.


கடலோடிகள் அவற்றை கடற் பயணங்களுக்குப் பயன்படுத்தினார்கள். சோதிடர்கள் மனித வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கண்டறிந்தார்கள். வானியல் ஆய்வாளர்கள் நெருங்கியுள்ள தாரகைகளை இணைத்துப் பார்த்தார்கள். பற்பலவிதமான உருவங் களைக் கண்டார்கள். ஒவ்வொரு உருவங்களுக்கும் பெயரிட்டார்கள். கிரகங்களையும். நட்சத்திரங்களையும் கொண்டே பழங்கால மக்கள் திசைகளை அறிந்தார்கள். சூரியன் உதிக்கும் திசையினைக் கிழக்கு என்றார்கள். மறையும் திசையினை மேற்கு என்றார்கள். சூரியனை மையமாக வைத்தே நாட்களைப் பெயரிட்டார்கள். ஞாயிறு என்பது சூரியனைக் குறிக்கும் நாள். திங்கள் என்பது சந்திரனைக் குறிக்கும் நாள். மற்றைய நாட்கள் சூரியனோடு தொடர்புடைய கிரகங்களைக் குறிக்கின்றன. இவை யாவும் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இரவு வேளையில் ஓய்வாக இருக்கும் போது வானத்தைப் பாருங்கள். அற்புதங்களைக் காண்பீர்கள். ஆகாயத்தில் பால்வீதி பரந்து கிடக்கும். மின்மினிப் பூச்சிகள்போல் நட்சத்திரங்கள் நிறைந்திருக்கும். இந்த மின்மினிப் பூச்சிகள் மிகப்பிரகாசமானவை. மிகப்பிரகாசமான நட்சத்திரங்கள் அழகான வடிவமைப்புடன் நமது கண்களுக்கு காட்சியளிக்கும். ஒரு தாளும் பேனாவும் தேவை. வானில் தெரியும் நட்சத்திரப் புள்ளிகளைத் தாளில் குறியுங்கள். புள்ளிகளை இணைத்துப் பாருங்கள். நாம் அதிசயிக்கும் வண்ணம் உருவங்கள் வரும். மனிதர்கள், விலங்குகள், எத்தனைவிதமான உருவங்கள் தெரியும். செய்து பாருங்கள். புதுப்புதுக் கற்பனைகள் உருவாகும். ஒவ்வொரு உருவங்களுக்கும் ஒவ்வொரு கதைகள் உண்டு.
வானம் அற்புதமான கதைப்புத்தகம். அது கூறும் கதைகள் ஆயிரம் உண்டு. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு வகையான கதைகள். அவற்றைப் பற்றி அறிய வேண்டும்.

பண்டையக் கிரேக்கர்கள் ஒலிம்பஸ் மலையில் கிரேக்கக் கடவுள்கள் இருப்பதாக நம்பினார்கள். கடவுளர்கள் சக்தியும் வல்லமையும் வாய்ந்த மனித உருவிலேயே இருப்பதாக நம்பினார்கள். இந்துக்களின் கடவுளரும் மிகச் சக்திவாய்ந்த மனித உருவத்திலேயே காட்சி கொடுத்தனர். இமயமலையில் இந்துக்கடவுள் இருப்பதாக நம்பினார்கள். வானத்தின் அற்புதங்களைப் பார்ப்போம். கீழே படங்களைக் கவனியுங்கள். இவற்றை ஒரு தாளில் வரைந்து புள்ளிகளை இணையுங்கள். உருவங்கள் உருவாகும். பெயர்களைத் தேடி எழுதுங்கள்.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்வீதியும் அதன் எல்லைகளும்




படத்தில் காட்டப்பட்டுள்ளதை அவதானியுங்கள். நமது விண்வெளி தெரிகிறது. ஒரு பிரகாசமான பகுதியில் நீள்வட்டம் தெரிகிறதல்லவா? வெள்ளைப் புள்ளிகளைக் கவனியுங்கள். அவற்றை இணைத்துள்ள கோடுகளையும் கவனியுங்கள். அவற்றின் பக்கங்களில் உள்ள உருவங்களையும் அவதானியுங்கள். ஒவ்வொரு உருவத்துக்கும் ஒவ்வொரு பெயருண்டு. அவை நம்முன்னோர் இட்ட பெயர்கள். அந்த உருவங்கள்தான் ராசிக் கூட்டங்கள். புள்ளிகளைத் தொட்டு நீள்வட்டமாகச் செல்லும் கோடு தெரிகிறதா? அந்தக் கோட்டுக்குள் மத்தியிலே தெரிவது சூரியன். சூரியனைச் சுற்றி நமது பூமியும் ஏனைய கோள்களும் வலம்வருகிறன. வெளிச்சமாகத் தெரியும் பகுதிதான் பால்வீதியாகும். ஒரு வெள்ளுடுத் தொகுதியை பால்வீதி என அழைப்பார்கள்.

பால்வீதி பரந்துபட்டது. நமது பால்வெளிக்கு அப்பாலும் ஆயிரக்கணக்கான பால்வீதிகள் உள்ளன. இவற்றையெல்லாம் சேர்த்துப் பிரபஞ்சம் என அழைப்பார்கள். பிரபஞ்சம் மிகப்பழமையானது. பிரபஞ்சம் விரிந்து பரந்துள்ளது. அதற்கு எல்லையில்லை. பிரபஞ்சத்தில் விண்மீன்கள் குவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவியலாகப் பரந்துள்ளன. அவற்றை வெள்ளுடுத் தொகுதிகள் என்று சொல்வார்கள். சில வெள்ளுடுத் தொகுதிகள் மிகவும் அழகானவை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஒவ்வொரு வெள்ளுடுத் தொகுதியிலும் பில்லியன் கணைக்கான விண்மீன்கள் உள்ளன. நாம் பிரபஞ்சத்தில் உலா வந்தால் நாம் வாழும் பூமியையே கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடுவோம். ஒரு பில்லியன் என்பது 1,000,000,000 ஆகும். நமது வெள்ளுடுத் தொகுதியில் மட்டும் 100 பில்லியனுக்கும் அதிகமான விண்மீன்கள் உள்ளனவாம். பிரபஞ்சம் மிகப்பழமையானது. 14 பில்லியன் ஆயிரம் பழமையானது. பிரபஞ்சம் மாபெரும் வெடிப்புடன் ஆரம்பமானதென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அந்த வெடிப்பினை 'மாபெரும் வெடிப்பு' (the big bang) எனக் கூறுவார்கள். நமது வெள்ளுடுத் தொகுதியின் எல்லைகளில் தாரகைக் கூட்டங்கள் சேர்ந்து அமைந்துள்ளன. தாரகை என்பது நட்சத்திரங்கள்தான். வெள்ளைப் புள்ளிகளாகத் தெரிபவை அனைத்தும் நட்சத்திரக் கூட்டங்கள். நெருக்கமாக உள்ள தாரகைகளைப் பாருங்கள். நமது முன்னோர்கள் அவற்றை இணைத்துப் பார்த்தார்கள். அழகான உருவங்கள் உருவாகின. விநோதமான விலங்குகள், உயிரினங்கள் பொருட்கள் என்பன தெரியும். அந்த உடுக்கூட்டங்களை 'ராசிகள்' என அழைத்தனர். அவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தார்கள். அவை சமதூரத்தில் நீள்வட்டப் பாதையில் அமைந்திருந்தன. ஆச்சரியமாக இருந்தது. பன்னிரெண்டு ராசிகளாகப் பிரித்தனர். இவற்றை நமது முன்னோர்கள் ஆராய்ந்தார்கள். இவற்றின் ஆதர்சண சக்தியின் ஆட்சிக்குள் பூமி சிக்கியுள்ளதை அறிந்தனர். உலகில் உள்ள உயிர்களின் மேலும் இவை ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்த ஆராய்ச்சியைத்தான் 'வானியல் ஆய்வு' என விஞ்ஞானிகள் கூறுவார்கள். 'சோதிடக் கலை' எனச் சோதிடர்கள் கூறுவார்கள்.

பால்வெளி இரவில் பிரகாசமாக இருக்கும். பால்வெளி வீதியில் சூரியன் நடுவினிலே காட்டப்பட்டுள்ளது. சூரியனைச் சுற்றி நாம் வாழும் பூமி வலம்வருகிறது. நமது சூரியக் குடும்பத்தில் சூரியனைச் சுற்றி ஒன்பது கிரகங்கள் உள்ளன. சூரியனுக்கு மிக அண்மையில் புதன் உள்ளது அதனைத் தொடர்ந்து வெள்ளி, பூமி, பூமியின் துணைக்கோளான சந்திரன், செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்ரியூன், புளுட்டோ ஆகியன உள்ளன. அவை சூரியனை மையமாகக் கொண்டு நீள்வட்டப் பாதையில் சுழல்கின்றன. பூமி சூரியனை மையமாகக் கொண்டுள்ளது. தன்னைத்தானே சுற்றிய வண்ணம் வலம்வருகிறது. அதனால் இரவு பகல் உருவாகிறது. சூரியனை மையமாகக் கொண்டு வலம் வருவதால் பருவகாலங்கள் உருவாகின்றன.. இரவு வேளையில் நிலவு பிரகாசிக்கிறது. சந்திரன் நமது பூமியின் துணைக் கோள் என்பார்கள். சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறது. நமது பூமிக்கும், சந்திரனுக்கும் இடையே ஈர்ப்புச் சக்தியுண்டு. சந்திரனின் ஈர்ப்பினால்தான் புவியில் வற்றுப் பெருக்கு ஏற்படுகிறது எனக்கூறுவர். வானில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உண்டு. அவை சிறியனவாகவும். பெரியனவாகவும் தெரிகின்றன. சில பிரகாசமாகத் தெரியும். சில மங்கலாகத் தெரியும். இவற்றை எல்லாம் விஞ்ஞானிகள் ஆராய்கின்றனர்.

## ஞாயிற்றுத் தொகுதியும் நமது கோள்களும்

சூரியனைச் சுற்றிக் கோள்கள் நீள்வட்டப்பாதையில் வலம்



வருகின்றன. இச்செய்தியை ஏலவே பார்த்தோம். அத்துடன் அவற்றோடு சேர்ந்த துணைக் கோள்களான சந்திரர்கள், எண்ணிலடங்காத ஆகாயக்கற்கள், கோளப்போலிகள், வால் வெள்ளிகள் போன்றனவும் வலம் வருகின்றன. இவற்றை ஞாயிற்றுத் தொகுதி என்றும், சூரியக் குடும்பம் என்றும் சொல்வார்கள். சூரியனை மையமாகக் கொண்டு இவை இயங்குகின்றன. சூரியனுக்கு அண்மையாக உட்புறமாக நான்கு கோள்கள் வலம்வருகின்றன. இந்த நான்கு கோள்களும் பாறைப் பாங்கானவை. வெளிப்புறமாக நான்கு கோள்களும் வலம் வருகின்றன. இவை வாயுக்கோளங்களாகும். சூரியனைச் சூழ்ந்து ஒன்பது கோள்களும், அத்துடன் அவற்றோடு சேர்ந்த துணைக் கோள்களான சந்திரர்கள், எண்ணிலடங்காத ஆகாயக்கற்கள்,



கோளப்போலிகள், வால் வெள்ளிகள் போன்றனவும் ஞாயிற்றுத் தொகுதியில் வலம் வருகின்றன. படத்தில் இவற்றை அவதானிக்கலாம். ஒன்பது கோள்களையும் "நவக்கிரகங்கள்" என்று சோதிடர்கள் கூறுவார்கள். இவற்றுள் பலவற்றுக் குத் துணைக்கோள்களான சந்திரன்கள் உண்டு. பூமிக்கு ஒரு சந்திரன் உள்ளதை நாமறிவோம். கிரகங்கள் ஒரு வரிசைக்கிரமத்தில் உள்ளன. சூரியனுக்கு அண்மையாக உட்புறமாக வலம்வரும் நான்கு கோள்களும் பாறைப் பாங்கானவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரகங்கள்


நம் முன்னோர்கள் ஒன்பது கிரகங்கள் உண்டு என்று கணித்தார்கள். ஆனால் 2006ம் ஆண்டு சர்வதேச வானியல் ஆய்வு ஒன்றியம் புளுட்டோவை கிரகங்களில் இருந்து நீக்கிவிட்டது. அதாவது கிரகத்துக்குள்ள அந்தஸ்து புளுட்டோவுக்கு இல்லை. ஆதலால் தற்போது எட்டுக் கிரகங்கள்தான் உண்டு எனக் கூறப்படுகிறது. எனினும் சோதிடர்கள் புளுட்டோவை இன்னும் தமது கணிப்பில் வைத்துள்ளார்கள். கிரகங்களைக் கடவுளர்களாகப் பண்டைய மக்கள் போற்றியுள்ளனர். இன்றும் அது தொடர்கிறது.

கிரகங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை. அவை யாவும் சூரியனைச் சுற்றி ஒழுங்கான முறையில் நீள்வட்டப் பாதையில் வலம் வருவதையும் அறிந்தோம். அவற்றின் வரிசைக் கிரமத்தில் ஒவ்வொரு கிரகத்தினைப் பற்றியும் பார்ப்போம். முதலில் சூரியக்குடும்பத்தின் தலைவனான சூரியனைப் பற்றிப் பார்ப்போம்.

## ஞாயிறு எனும் சூரியன்



சூரியனைச் சுற்றிக் கோள்கள் நீளவட்டப்பாதையில் வலம் வருகின்றன. பால்வெளியில் சூரியன் நடுவினிலே காட்டப் பட்டுள்ளது. கோள்களும் அவற்றோடு சேர்ந்த துணைக் கோள்களான சந்திரர்கள், எண்ணிலடங்காத ஆகாயக்கற்கள், கோளப்போலிகள், வால்வெள்ளிகள் போன்றனவும் வலம் வருகின்றன.




இவற்றை ஞாயிற்றுத் தொகுதி என்றும், சூரியக்குடும்பம் என்றும் சொல்வார்கள். சூரியனை மையமாகக் கொண்டு இவை இயங்குகின்றன. சூரியனுக்கு அண்மையாக உட்புறமாக நான்கு கோள்கள் வலம்வருகின்றன அல்லவா? இந்த நான்கு கோள்களும் பாறைப் பாங்கானவை. வெளிப்புறமாக நான்கு கோள்களும் வலம் வருகின்றன. இவை வாயுக்கோளங்களாகும். கிரகங்களின் இராசதானியின் அமைச்சரவையில் சூரியன்தான் அரசன். அவர்தான் மிக முக்கியமானவர். கிரகங்களின் தலைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன்தான். இயற்கையாகவே மிகச் சக்தியுள்ளதும் வெப்பமுள்ளதுமாகும். சூரியனைச் சுற்றி நாம் வாழும் பூமியும் வலம்வருகிறது.

சூரியன் வாயுவினால் ஆனது. சூரியனின் அணுக்கருப் பிணைப்பினால் ஒவ்வொரு செக்கனுக்கும் 700,000,000 தொன் ஹைதரசன், 695,000,000 தொன் ஹீலியமும் 5,000,000 தொன் சக்தியும் காமா கதிரலைகளாக மாற்றப்படுகிறது. இச்சக்தி உறிஞ்சப்பட்டு வெப்பநிலை குறைவடைந்து மேற்பரப்புக்கு பரவும்போது வெளிச்சமாகக் கண்ணுக்குத் தெரிகிறது.



சூரியனின் மேற்பரப்பு ஒளிமண்டலம் எனப்படும். அதன் வெப்பம் 5800 கிலோவாட் ஆகும். சூரியனில் உள்ள புள்ளிகள் 3800 கிலோவாட் வெப்பமுடையன. ஒரு சூரியப்புள்ளி 50,000 கி.மீ விட்டமுடையது. சூரியனின் காந்த வயல்களின் இழுபறியினால் சூரியப் புள்ளிகள் ஏற்படுகின்றன. ஒப்பீட்டளவில் சூரியப்புள்ளிகள் வெப்பம் குறைந்த வையாகும்.

சூரியனின் விட்டம் 1,390,000 கி.மீ. எனக் கணக்கிடப் பட்டுள்ளது. சூரியன் தோன்றி 4.5 பில்லியன் ஆண்டுகளாகும். அரைவாசியளவு ஹைதரசனை அதன் உள்ளீடு பயன்படுத்திவிட்டது. இன்னும் 5 பில்லியன் ஆண்டுகளுக்கு எந்தவிதக் குழப்பமும் இல்லாது சூரியனது பயணம் தொடரும்.



சூரியனின் அடையாளம் வட்டமும் மத்தியில் ஒரு புள்ளியுமுண்டு. அதனைப் படம் காட்டுகிறது. இதுபோன்ற அடையாளம் வேறு எந்தக் கிரகத்துக்கும் இல்லை. சூரிய கதிர்கள் ஒரு புள்ளியில் இருந்து சக்தியைப் பரப்பும். பரந்து சென்ற சக்தி மீண்டும் புள்ளியை நோக்கித் திரும்பும். சூரியன் இல்லாது இவ்வையகத்தில் இயக்கமே இல்லை. சூரியன் தனது ஒளிக்கற்றைகளால் கிரகங்களுக்கு வெப்பம் ஊட்டுகிறது. அவற்றை இயங்கச் செய்கிறது.

சூரியனின் வெப்பமின்றி வாழமுடியாது. நமது அடுப்பைப் போன்றுதான் சூரியனும். அடுப்புக்குக் கிட்டயிருந்தால் சூடு அதிகமாகும். தூரத்திலிருந்தால் குளிரும். சூரியனில் 70% ஐதரசனும், 70% ஹீலியமும் 2% ஏனைய உலோகப் பொருட்களும் உண்டு. ஒவ்வொரு கிரகத்திலும் வெவ்வேறு விதமான வெப்பதட்பநிலை நிலவும். கிரகங்கள் சூரியனை தம் நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகின்றன. சில சூரியனுக்கு நெருக்கமானவை. சில வெகு தூரத்தில் உள்ளன. சூரியனின் பக்கத்தில் உள்ள கிரகங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாகவும், தூரத்தில் உள்ள கிரகங்களுக்குக் குறைவாகவும் சூடேற்றுகிறது. அதற்கேற்ப கிரகங்கள் இயங்கிக் கொண்டிருக்கும்.
சூரியனைச் சுற்றியுள்ளவை.

சூரியனைச் சுற்றி ஒன்பது கோள்கள் வலம்வருகின்றன. சிறிதும். பெரிதுமான கோளப்போலிகளும், பாறைகளும் சுற்றுகின்றன. சூரியனில் இருந்து அவை

| கோள்கள் | தூரம் (00 கி.மீ) | ஆரை (கி.மீ) | திணிவு (கி.கி) | கண்டுபிடித்தவர்கள் திகதி |
|---|---|---|---|---|
| மேக்கியூரி | 57,910 | 2439 | 3.30e23 | |
| வீனஸ் | 108,200 | 6052 | 4.87e24 | |
| பூமி | 149,600 | 6378 | 5.98e24 | |
| மர்ஸ் | 227,940 | 3397 | 6.42e23 | |
| ஜுபிரர் | 778,330 | 71492 | 1.90e27 | |
| சனி | 1,426,940 | 60268 | 5.69e26 | |
| யுரெனஸ் | 2,870,990 | 25559 | 8.69e25 | ஹேர்சல்(Herschel) 1781 |
| பெப்ரியூன் | 4,497,070 | 24764 | 1.02e26 | கேல்(Galle) 1846 |
| புளுட்டோ | 5,913,520 | 1160 | 1.31e22 | ரொம்பா(Tombaugா) 1930 |

சூரியவெப்பத்தினால் புவியில் நிலைமாற்றம் ஏற்படுகிறது. நீர் ஆவியாதலும், ஆவி ஒடுங்கி மழையாகப் பெய்வதும் சூரியனால்தான். மழையின்றேல் இவ்வுலகில் வாழ்க்கையே சூனியமாகிவிடும். வளி வெப்பமடைவதால் விரிவடைகிறது. விரிவடைந்த வளி மேலெழுகிறது. அந்த இடத்துக்குக் குளிர்ந்த வளி விரைகிறது. வளி அசைகிறது. அதனை நாம் காற்று என அழைக்கிறோம்.

ஆதியிலிருந்தே மனிதர்கள் சூரியனைக் கடவுளாக வழிபட்டு வருகின்றனர். சூரியன் உயிரினங்களை வாழவைக்கிறது. வெப்பத்தையும், வெளிச்சத்தையும், வாழ்க்கையையும் கொடுக்கிறது. பொதுவாகக் கிரகங்களைக் கடவுளராக வணங்கும் வழக்கம் இருந்து வருகிறது. கிரேக்கர்களும். ரோமர்களும். கிழக்காசிய மக்களும் இவ்வழக்கத்தைப் பின்பற்றி வருகின்றனர். இந்துக்கள் தைமாதத்தில் பொங்கலிட்டு தைப்பொங்கல் விழாவாகக் கொண்டாடுவார்கள்.

சூரியனுக்கு அண்மையில் உட்புறமாக நான்கு கோள்கள் வலம் வருகின்றன. இந்த நான்கு கோள்களும் பாறைப் பாங்கானவை எனப்பார்த்தோம். அவற்றை வரிசைக் கிரமத்தில் கீழுள்ள அட்டவணை காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| இல | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 01 | மேக்குரி | புதன் |
| 02 | வீனஸ் | வெள்ளி |
| 03 | ஏர்த் | பூமி |
| 04 | மார்ஸ் | செவ்வாய் |

அவ்வகையில் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகியன நீள்வட்டப் பாதையில் வலம் வருகின்றன.

## புதன் ( மேக்கியுரி)

சூரியக் குடும்பத்தில் ஒன்பது கோள்கள் உண்டு என்பது நாமறிந்ததே. சூரியனுக்கு மிகவும் அண்மையில் புதன் உள்ளது. இதனை மேக்கியுரி என கிரேக்கர்கள் அழைத்தார்கள். புதன் சிறிய கிரகமாகும். காலையிலும், மாலையிலும் மங்கலான வெளிச்சத்துடன் பிரகாசிக்கும். புதனுக்கு உபகோள்கள் இல்லை. சூரியனில் இருந்து 57, 910 கி.மீ. தூரத்தில் உள்ளது. அதன் விட்டம் 4,880 கி.மீ. ஆகும்.

புதன் திண்மமான பாறைகளைக் கொண்டது. பகல் நேரத்தில் 400 பாகை செல்சியஸ் வெப்பத்தைக் கொண்டிருக்கும். இரவு நேரத்தில் மிகக் குறைந்த (சய - 185 பாகை செல்சியஸ்) வெப்பம் இருக்கும். போதியளவு வளிமண்டலம் இல்லை. அதனால் ஆகாயக்கற்கள், கோளப் போலிகள், வால் வெள்ளிகள் போன்றனவற்றின் தாக்கத்துக்கு உள்ளாகிறது. எரிமலைவாய்கள் போன்று பாரிய பள்ளங்கள் உள்ளன. இவற்றில் அரைவாசி வால்வெள்ளிகளின் வீழ்ச்சியால் உருவாகின. அவை ஒரு செக்கனுக்கு 85 கிலோமீற்றர் வேகத்தில் வந்து வீழ்கின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. இதில் அதிசயம் ஒன்றுள்ளது. நாம் புதனின் தரையில் நின்றால் மயான அமைதியை அனுபவிக்கலாம். நீங்கள் பெரிதாகச் சத்தமிடலாம். கற்களை வீசலாம். வெடிகூடப் போடலாம். ஆனால் சத்தமே கேட்காது. ஒலியைப் பரப்ப வளிமண்டலம் இல்லை. ஒளி அலைகளையும் கடத்தாது. நமது புவிக்கோளத்தில் சூரியன் தெரியும். புதனிலும் தெரியும். ஆனால் மும்மடங்கு பெரியதாய்த் தெரியும். ஆனாலும் வானம் கறுப்பாகவே தெரியும். நமது புவியில் 45 கிலோ புதனில் 18 கிலோவாக இருக்கும்.




7278

புதனின் மேற்படை பாறைப்பாங்கானது. அதன்கீழ் உருகியநிலையில் பாறைக்குழம்பு உள்ளது. அதனைத் தொடர்ந்து உள்ளீடு உள்ளது. புதனின் உள்ளீடு முக்காற் பகுதி இரும்பைக் கொண்டுள்ளது. அதனால் குளிர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடையும்போது மேற்படை அதிகமாகச் சுருங்குகின்றது. ஒரு அப்பிள் பழத்தின் உள்ளீடான தசையின் நீர் வற்றினால் என்ன செய்யும்? அதன் மேல்தோல் சுருங்கும் அல்லவா? அதைப்போல்தான் புதனின் மேற்படை சுருங்கும். இதனால் புதனின் மேற்படை பல விளிம்புகளைக் கொண்டதாக உள்ளது. சில விளிம்புகள் மலைத்தொடர்கள் போல் உள்ளன. சுமார் 500 கி.மீ. நீளமும், 02 கி.மீ. உயரமும் உடையதாயும் உள்ளது. படத்தில் இவ்வாறான விளிம்புகளை அவதானிக்கலாம்.



புதனின் 45 வீதமான மேற்பரப்பை விஞ்ஞானிகள் விண்கலங்களை அனுப்பிப் படம் பிடித்துள்ளார்கள். மரையினர் 10, மெசஞ்சர் ஆகிய விண்கலங்கள் 1974, 1975 ஆகிய காலப்பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. 2004ல் நாசா மெசஞ்சர் விண்கலத்தை அனுப்பியது.

நமது பூமி தன்னைதானே ஒருமுறை சுற்றிவர 24 மணித்தியாலங்கள் தேவை. ஆனால் புதன் தன்னைத்தானே சுற்றிவர 59 நாட்கள் வேண்டும். இதனால் வித்தியாசமான சூரிய அஸ்தமனத்தைப் பார்க்கலாம். புதன் மிகவேகமாகச் சூரியனை வலம் வருகிறது. புதன் புவியின் ஒரு வருடத்தில் சூரியனை நான்கு முறை சுற்றி வருகிறது. ஒருமுறை வலம் வருவதற்கு 88 நாட்கள் செல்லுகின்றன. நாம் புதனில் இருந்தால் 88 நாட்களின் முடிவில் ஒரு வருடத்தைக் கொண்டாடலாம். நமது பிறந்த நாளைக் கொண்டாட 365 நாட்கள் காத்திருக்கத் தேவையில்லை. புதனில் நான்கு முறை கொண்டாடலாம்.

ஒரு மனிதனின் வாழ்நாட்கள் சராசரியாக 65 ஆண்டுகள் எனக்கொள்ளுவோம். அப்படியாயின் புதனில் ஒரு மனிதனின் வாழ்நாள் சராசரியாக 269 ஆண்டுகள் வரை வாழலாம். புதனில் குடியேறலாம் என்ற எண்ணம் தோன்றுகிறதா? ஒரு காலம் வரலாம். போய்க் குடியேறலாம். புதனில் உள்ள "வெப்பதட்ப" நிலைக்கு நாம் பழக்கப் படவேண்டும். பழக்கப்பட்டால் புதனிலும் வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி ( வீனஸ்)

வீனஸ் எனப்படும் வெள்ளி இரண்டாவது இடத்தில் உள்ளது. புவிக்கு அண்மையில் உண்டு. அடர்த்தியிலும், உருவத்திலும் ஒத்த தன்மை காணப்படுகிறது. அதனால் புவியும், வெள்ளியும் இரட்டையர்கள் எனக் கூறுவார்கள். புவியைப் போல் வளிமண்டலத்தைக் கொண்டுள்ளது. ஆனால் வெப்பமான பொல்லாத நச்சுத்தன்மையுள்ள வாயுவினைக் கொண்டுள்ளது. அத்துடன் புவியினது வளிமண்டல அமுக்கத்தினை விடவும் 90 மடங்கு சக்திவாய்ந்தது. அதனால் வளிமண்டலச் சமநிலையைத் தகர்த்துவிடுகிறது. அதிக வெப்பத்தைக் கொண்டது. வெள்ளியில் வெப்பம் 500 பாகை செல்சியஸ் அளவுக்குக் கீழ் செல்வதில்லை. வெள்ளியில் ஆய்வினைச் செய்வதற்கு ரஸ்சியர்கள் சிந்தித்தார்கள். 1982ல் வெனறா 14 (Venera 14) என்ற விண்கலத்தை அனுப்பினார்கள். விண்கலம் வெற்றிகரமாக வெள்ளியில் தரையிறங்கியது. தரையைப் படம்பிடித்து அனுப்பியது. ஆனால் 57 நிமிடங்களில் விண்கலம் உருகி உருக்குலைந்துவிட்டது.



புதனைப் போன்றே வெள்ளியும் காலைவேளையில் தெரியும். மாலையில் தொடுவானத்தில் மிகப்பிரகாசமான நட்சத்திரம் போல் தென்படும். நன்கு இருட்டத்தொடங்கியதும் கண்ணைக் கூசும்வண்ணம் பிரகாசமாக ஒளிவீசிக் கீழிறங்கும். இதனைக் காலை நட்சத்திரம் என்றும், மாலை நட்சத்திரம் என்றும் மக்கள் ரசித்து நேசித்து வருகிறார்கள். கிரேக்கர் அதனை அப்ரோடைற் என அழைத்தார்கள்.

சூரியனில் இருந்து 108 மில்லியன் கி.மீ. தூரத்தில் உள்ளது. 12,100 கி.மீ விட்டத்தைக் கொண்டுள்ளது. நமது புவியைப் போல் வெள்ளியும் தன்னைத்தானே சுற்றுகிறது. புவி 24 மணிநேரத்தில் ஒரு சுற்றினை முடித்துவிடும். ஆனால் வெள்ளி ஒரு முறைசுற்ற 243 நாட்கள் எடுக்கும். நமக்கு ஒரு பகல் 12 மணித்தியாலங்களைக் கொண்டது. ஆனால் வெள்ளியில் 243 நாட்கள் பகலாக இருக்கும். அதேபோல் இரவும் 243 நாட்கள் இருக்கும். நம்மைப்போன்ற கும்பகர்ணர்களுக்கு வெள்ளி மிகவும் பிடித்த கிரகமாகும் அல்லவா? நன்றாகத் தூங்கலாம். பூமி சூரியனைச் சுற்றிவர 365 நாட்கள் அதாவது ஒரு வருடம் எடுக்கும். வெள்ளி சூரியனைச் சுற்றிவர 225 நாட்கள் எடுக்கும். ஒரு பகல் ஒரு வருடத்தைவிடவும் 18 நாட்கள் அதிகமாக இருக்கும். நல்ல வேடிக்கை அல்லவா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியில் வளிமண்டலம் தடிப்பாக இருக்கும். மேலே உள்ள மேகக்கூட்டம் 300 கி.மீ. வேகத்தில் விரைந்து செல்லும். பூமியில் வானம் நீலமாகத் தெரியும். ஆனால் அதே வானம் வெள்ளியில் மஞ்சள் நிறத்தில் தெரியும். வெள்ளியில் எரிமலைகள் உள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இது வானத்தின் மிகப்பிரகாசமான கோளாகும். இக்கோளம் சிறுமுகிற் கூட்டங்களால் மூடப்பட்டுள்ளது. சூரியகதிர்கள் பட்டு வெளிச்சத்தைத் தெறிக்கச் செய்கிறது. சூரியனுக்கும், சந்திரனுக்கும் அடுத்து வீனஸ் பிரகாசமானது. பளபளக்கும் அழகைக் கொண்டுள்ளது. ரோமர்களின் அன்புக்குப் பாத்திரமான பெண்தெய்வம் வீனஸ் ஆகும். வெள்ளிக்கு வீனஸ் என்ற பெயரை ரோமர்கள் இட்டு அழைத்தார்கள். நமது கிழமை நாட்களில் வெள்ளியும் ஒன்று. அல்லவா?

## புவிக்கோளம்



பூமியும் ஒரு கிரகம்தன். 4.57 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். சூரியனிடத்தில் இருந்து மூன்றாமிடத்தில் உள்ளது. அதிகம் அழகான கோளமாகப் பூமி திகழ்கிறது. அதில் தான் நாம் வாழுகிறோம். அண்ட வெளியில் இருந்து பார்த்தால் நமது பூமி நீல நிறமாகவும், வெள்ளி நிறமாகவும் பளபளக்கும். முக்கால் பகுதி நீரினையும், மிகுதி நிலத்தினையும் கொண்டுள்ளது. பிரபஞ்சத்தில் இந்தக்கிரகத்தில் மட்டுந்தான் உயிரினங்கள் உண்டு. வேறு கிரகங்களில் உயிரினங்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பூமியை 'காயா' என்றும், 'ரெறா' பூமிமாதா' என்றும் அழைப்பார்கள்.



பூமியின் 71% பகுதி நீரினால் சூழப்பட்டுள்ளது. பூமி ஒரு சமதளமான தட்டைப்போல் காட்சியளிக்கிறது. தட்டின்மேல் பெரிய கூரையைப்போல் வானம் தெரிகிறது அல்லவா? முற்காலத்தில் பூமி மூன்று திமிங்கிலங்களின் மீது உள்ளது என நம்பினார்கள். பூமியின் ஓரங்களுக்குச் சென்று திமிங்கிலங்களைப் பார்க்க முடியவில்லை. சிறிது சிறிதாக மனிதர்கள் பயணங்கள் செய்ய ஆரம்பித்தனர். விலங்குகளில் பயணம்செய்தார்கள். படகுகளில் கடல்களில் பயணித்தார்கள். வழிதவறி விடாது இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தைப் பார்த்தார்கள். அக்காலத்தில்தான் நட்சத்திரங்களை நம்பினார்கள். 'வழிகாட்டும் நட்சத்திரம்" என்ற சொற்தொடர் தோன்றியது.

பூமியில் நிலநடுக்கம் தோன்றியது. பூமி நடுங்கியது. கடல் பொங்கி பெரும் அலைகளை வீசியது. எரிமலைகள் வெடித்துச் சிதறின. ஆனாலும் சூரியனும். சந்திரனும். நட்சத்திரங்களும் ஒரேமாதிரியாக நகர்ந்து கொண்டிருந்தன. பயணிகள் பலநாட்கள் பயணித்தனர். நட்சத்திரங்கள் தொடுவானத்துக்கு மேல் வருவதைக் கண்டார்கள். பின் கீழிறங்கி மறைவதையும் பார்த்தார்கள். பூமி பிரமாண்டமானது. தட்டையானது. அதனாற்றான் கடல்நீர் அப்படியே கொட்டாமல் நிலைத் திருக்கிறது என நம்பினார்கள். பின்னர் பூமி வட்டவடிவமான ரொட்டியைப் போன்றது. வளைந்துள்ளது என மனிதர்கள் நம்பினார்கள். பூமி அரை உருண்டையானது. சமுத்திரங்கள் அதன்மேல் அப்பியுள்ளன என நம்பினார்கள்.

சூரியனும். சந்திரனும். நட்சத்திரங்களும் கீழிறங்கி, மறுநாள் எதிர்த்திசையில் வருகின்றனவே. சிந்தித்தார்கள். சூரியனும். சந்திரனும் கிழக்கே உதிக்கத் தாமதமானதில்லை. பூமி அரையுருண்டை வடிவானதல்ல. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப்பின் பூமி உருண்டையானது என நம்பினார்கள். கடலோடிகளாளன கொலம்பஸ், மகலன் உலகை உருண்டை என்பதை நிரூபித்தனர்.

பூமிக்கு ஈர்ப்புச் சக்தியுண்டு. அதனாற்தான் பூமியில் உள்ள பொருட்கள் கீழே விழாதிருக்கின்றன. சமுத்திரங்களும். மலைகளும் அப்படியே இருக்கின்றன என அறிவுபூர்வமாகத் தெளிந்தனர். பூமியை வலம் வரும் சூரியனையும். சந்திரனையும் ரசித்தார்கள். சந்திரன் புவியின் உபகோள் என்பதைப் புரிந்து கொண்டனர்.

பூமி சூரியனில் இருந்து 150 மில்லியன் கி.மீ. தூரத்தில் உள்ளது. பூமியின் விட்டம் 12,756 கி.மீ ஆகும். பூமியின் அச்சு வடதுருவத்திலிருந்து 23.5 பாகை சரிந்துள்ளது. கோளவடிவில் பூமியுள்ளதால் சூரியஒளி ஒரே அளவாக விழுவதில்லை. துருவங்களில் குறைந்த வெப்பமே கிடைக்கிறது. மத்திய கோட்டை அண்டிய நிலப்பரப்பில் அதிகம் வெப்பம் கிடைக்கிறது. வடக்கு நோக்கிச் செல்லச் செல்ல வெப்பம் குறைவடைகிறது. அதேபோல் தெற்கை நோக்கிச் செல்லச் செல்ல வெப்பம் குறைகிறது. பூமி தன்னைத்தானே சுற்றிச் சூரியனையும் சுற்றி வருகிறது. ஒரு சுற்று முடிவதற்கு 365.25 நாட்கள் எடுக்கும். அதனை ஒரு வருடம் என்பார்கள். தன்னைத்தானே சுற்றிவர 23 மணித்தியாலங்களும் 56 நிமிடங்களும் எடுக்கும். அது ஒரு மணித்தியாலத்தில் 107,245 கி.மீ. வேகத்தில் சுழல்கிறது.

பூமியின் சுழற்சி வேகத்தில் இருந்துதான் காலக்கணிப்பை மேற்கொண்டார்கள். பூமி தன்னைத்தானே சுற்றுகிறது. 24 மணித்தியாலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கணக்கிட்டார்கள். தன்னைத்தானே சுற்றும் பூமி சூரியனையும் சுற்றி வந்தது. ஒருமுறை சுற்றிவர 365 நாட்கள் எடுப்பதைக் கணக்கிட்டார்கள். புவியின் இந்தக் கால அளவையே மற்றக்கிரகங்களைக் கணக்கிடப் பயன்படுத்தினார்கள்.

## கிரகங்களில் சூரியனைச் சுற்றிவர எடுக்கும் புவிக்காலம்

பூமி தன்னைத்தானே சுற்றுவதால் இரவு பகல் உருவாகிறது. தன்னைத் தானேசுற்றிக் கொண்டு பூமியையும் சுற்றுவதால் பருவகாலங்கள் உருவாகிறது. ஒரு முறை சூரியனைச் சுற்றிவர 365.26 நாட்கள் (ஒரு வருடம்) எடுக்கிறது இதனை புவியின் காலமாகக் கொள்வார்கள். புவியின் கால அளவைக் கொண்டே ஏனைய கிரகங்கள் சூரியனைச் சுற்றிவரும் காலத்தையும் கணக்கிடுவார்கள். அதனை கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது.


| கிரகம் | காலம் |
|---|---|
| Mercury- மேக்கியுரி | 87.96 புவி நாட்கள் |
| Venus- வீனஸ் | 224.68 புவி நாட்கள் |
| Earth – பூமி | 365.25 புவி நாட்கள் |
| Mars – மார்ஸ் | 686.98 புவி நாட்கள் |
| Jupiter – ஜுபிற்றர் | 11.862 புவி வருடங்கள் |
| Saturn – சற்றேன் | 29.456 புவி வருடங்கள் |
| Uranus – ஜுரேனஸ் | 84.07 புவி வருடங்கள் |
| Neptune – நெப்ரியுன் | 164.81 புவி வருடங்கள் |
| Pluto – புளுட்டோ | 247.7 புவி வருடங்கள் |

பூமியின் சராசரி வெப்பநிலை 14 பாகை செல்சியர்ஸ் (57.2 பாகை பரன்கயிற்) ஆகும்.

பூமியில் சூரியோதயம் மிக அழகாக இருக்கும். அதேபோல் சூரியன் மறையும் போதும் மிகஅற்புதமாக இருக்கும். பூமியின் வடதென் துருவங்களில் நள்ளிரவில் சூரியனைக் காணலாம். நோர்வேயிலுள்ள 'நார்ட்கப்' என்னும் இடத்தில் நள்ளிரவு சூரியனின் அற்புதக் காட்சி. முதற்படத்தில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவீடனின் குருனாவி என்னும் இடத்தில் நள்ளிரவு சூரியனை நடுப்படத்திலும், ஆர்டிக் பிரதேசத்தில் நள்ளிரவு சூரியனால் ஒளியூட்டப்படும் சிற்றாலயத்தை மூன்றாம் படமும் காட்டுகிறது. நள்ளிரவு என்பது உள்நாட்டு நேரப்படி நள்ளிரவு 12 மணியாகும்.
வட,தென் துருவங்களில் 24 மணிநேரமும் தெரியும். ஐக்கிய அமெரிக்கா, கனடா,கிறீன்லாந்து, நோர்வே, சுவீடன், பின்லாந்து, ரஸ்யா,ஐஸ்லாந்து ஆகிய நாடுகளின் வடபகுதிகளில் இவ்வாறு சூரியனைக் காணலாம். ஆர்ட்டிக் வட்டத்தினுள் அடங்கும் நாடுகளில் 73 நாட்கள் சூரியன் மறைவதே இல்லை. நோர்வேயில் உள்ள சுவல்பாட்டில் ஏப்பிரல் 19 தொடக்கம் ஆகஸ்ற் 23 வரை சூரியன் மறைவதில்லை. இதேபோல் தொடர்ந்து இரவும் இருக்கும். துருவங்களில் சூரியன் ஒரேயொரு நாளில் உதிக்கும். ஒரேயொரு நாளில் மறையும்.


பூமியில் 77% நைதரஜனும், 21% ஒக்சியினும், மிகுதி ஆகன், காபநீர் ஒக்சைட்டும் நீரும் உள்ளன. பூமி மின்காந்த பரப்பையும் கொண்டுள்ளது. அத்துடன் பூமியின் வளிமண்டலத்தில் உள்ள நைதரசன் - ஒக்சிஜின் ஆகியன சூரிய கதிர்வீசலில் இருந்து பூமியைக் காக்கின்றது.
பூமி பலபாறைப் படைகளைக் கொண்டுள்ளது. இப்பாறைப்படை பல இராசாயனப் பதார்த்தங்களைக் கொண்டுள்ளது. பாறைப்படை ஒரேதன்மையானதாக இல்லை. கண்டங்களில் தடிப்பாகவும், சமுத்திரங்களில் மெலிதாகவும் உள்ளது. ஏனைய கிரகங்களைப் போல் அல்லாமல் கொதிநிலையிலுள்ள மன்றிலில் பாறைப்படை மிதக்கிறது. பூமியின் மேற்பரப்பு மாறிக்கொண்டே வருகிறது. 250 மில்லியன் வருடங்களுக்கு முன் ஒரே திணிவாக நிலப்பரப்பு இருந்தது. அதனைப் பஞ்சியா என அழைத்தார்கள். புவியின் உள்ளே பாறைக்குழம்பு கொதிநிலையில் உள்ளது. பாறைக்குழம்பு அசைவதால் மின்காந்த அலைகள் பிறக்கின்றன. அவை நிலநடுக்கத்தையும், பூகம்பங்களையும். ஆழிப்பேரலைகளையும் உருவாக்கி நிலத்தின் மேற்பரப்பில் மாற்றங்களை உருவாக்குகின்றன.

பூமியின் பாறைப்படை பல கவசத் தகடுகளால் ஆனது எனப் புவிசரிதவியலாளர்கள் கருதுவர். பல கவசத்தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. மெல்லிய பொருத்துக்களால் புவியின் மக்மா பீறிட்டுப் பாய்ந்து அனர்த்தங்களை விளைவிக்கின்றன. அத்தோடு வெப்பம், காற்று, மழை, நீர். கடலலை போன்றனவும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. பெரிய மலைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே இடத்தில் நிலையாக இருப்பதில்லை. அவை ஒரு வருடத்தில் 4 சென்றிமீற்றர்(1.6 அங்குலம்) வரை நகர்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. உயிரினங்கள் உள்ள இப்பூமியில் 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர்தான் ஒருகல உயிரிகள் தோன்றின.



இப்படத்தில் முறையே மேக்கியுரி, வீனஸ், பூமி, மார்ஸ் உள்ளன.

டைனோசர்கள் 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் தோன்றின. மனிதன் 200,000 ஆண்டுகளுக்கு முன்னர்தான் இப்புவியில் தோற்றம் பெற்றான் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். சூரியனின் வெப்பத்தினால் நீர்நிலைகள் ஆவியாக்கத்துக்கு உள்ளாகின்றன. நீராவி மேலெழுந்து ஒடுங்கி முகிலாகி மழையாக பூமியை வந்தடைகிறது. நீரியல் வட்டம் பூமியில்தான் நிகழ்கிறது. மழை உயிரினங்களை வாழவைக்கிறது.


## பூமியின் சந்திரன்



சந்திரன் எவ்வாறு தோன்றியது? என்பது இதுவரைப் புரியாத புதிராகத்தான் உள்ளது. பூமி உருவாகிய புதிதில் செவ்வாய் போன்ற இன்னுமொரு கோள் பூமியோடு மோதியது. அம்மோதலால் பாரிய சிதைவுகள் வெளியிடப்பட்டு வீசப்பட்டன. துகள்கள் விண்வெளியில் சுழற்சியுற்ற நிலையிலிருந்தன. பூமியைச் சுற்றி ஒரு வளையமாக வலம்வந்தன. காலகதியில் துகள்கள் ஒன்றோடொன்று ஈர்க்கப்பட்டு ஒன்றாயின. சந்திரனாக இன்றைய உருவில் பூமியை வலம் வந்து கொண்டிருக்கிறது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வானில் அதிசயிக்கத்தக்கதாக திரனின் பவனி விளங்குகிறது. சந்திரனின் உருவத்தில் மாற்றம் ஏற்படுவது ஒரு அதிசயமான நிகழ்வாகும். உண்மையில் சந்திரனின் உருவத்தில் மாற்றம் ஏற்படுவதில்லை.

பூமியின் நிழல் சந்திரனை மறைக்கிறது. நன்றாகக் கூர்ந்து பார்த்தால் இதனைப் புரிந்து கொள்ளலாம். சூரியனதும், புவியினதும் சுற்றுகைக்கேற்ப சந்திரனின் தோற்றம் நமக்குத் தென்படும். சூரியனும் சந்திரனும் பூமியின் எதிர்ப்புறம் இருக்கும்போது முழுநிலவாக பூரணைச் சந்திரனாகத் தெரியும். அதேபோல் சூரியனும் சந்திரனும் ஒரே புறம் இருக்கும் போது அமவாசையாக இருக்கும். இவை சூரியனின் ஒளி சந்திரனில் விழும் அளவினால் ஏற்படுகிறது. நம்முன்னோர்கள் சந்திரனின் இந்த மாற்றங்களைக் கணித்தே கலண்டர்களை (நாட்காட்டிகளை) கணித்தார்கள்.



பபிலோனியர்கள் சந்திரனைக் கொண்டு காலத்தைக் கணித்தார்கள். சந்திரனைக் கடவுளாகவும் பண்டைய மக்கள் போற்றியுள்ளனர். சந்திரன் பூமியிலிருந்து 383,000 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. அதன் விட்டம் 3,475 கிலோ மீற்றராகும். சந்திரனில் பவன அமுக்கம் இன்மையால் வாயுக்களும் இல்லை. பூமியில் 100 கிலோ எடை சந்திரனில் 45 கிலோவாக இருக்கும். நாம் விழுந்தால் இருகைகளாலும் தரையைத் தொட்டு எழும்பினால் மேலே எழுந்துவிடலாம். கால்களை நிலைக்குத்தாக ஊன்ற முடியாதிருக்கும். கால்கள் வழுக்கிக் கொண்டிருக்கும்.



சந்திரன் புவியைச் ஒருமுறை முழுமையாகச் சுற்றிவர 27.3 நாட்கள் எடுக்கின்றது. ஆனால் கேத்திர கணித கணிப்பின்படி புவி-சந்திரன்- ஞாயிறு சுற்றுகையில் வேறுபாடு உண்டு. அதனால் சந்திரன் புவியைச் சுற்றிவர 29.5 நாட்கள் செல்கின்றன. சந்திரனின் ஈர்ப்புச் சக்தியினால் புவியின் சமுத்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படுக்கைகளில் வற்றுப் பெருக்கு உருவாகிறது. சந்திரனைப் பெண்ணாக வர்ணிப்பார்கள். சந்திரனுக்கு மட்டுந்தான் மனிதன் சென்றுவந்துள்ளான். இன்றுவரை அமெரிக்காவின் விண் வெளிக்கலமான அப்பலோ மூலம் ஆம்ஸ்ரோங், எட்வின் ஒல்ரின் ஆகியோர் சந்திரனில் காலடிபதித்து வந்துள்ளனர்.

அவர்கள் தங்கள் பயணத்தின் போது சில எச்சங்களை வைத்துவிட்டு வந்தனர். நான்கு பக்கங்களைக் கொண்ட சிறு இதழ், ராஜாளி அல்லது கழுகின் இறகு, ஒரு பைபிள், விண்வெளி உடையுடனான சிறு மனிதனது உருவம் அத்துடன் "உலகத்தின் மனிதர்களாகிய நாங்கள் எல்லா மனுக்குலத்துக்கும் சமாதானம் வேண்டி ஜூலை 1969 ல் இந்த சந்திரனில் வந்து காலடி பதித்து இச்சின்னங்களைவிட்டுச் செல்கிறோம்" என எழுதிய வாசகம் கொண்ட அடையாளத்தையும், வைத்துவிட்டு வந்தனர்.




அவர்களது காலடிப்பதிவு என்றும் அழியாது இருக்கும். ஏனெனில் வளிமண்டலத் தாக்கம் இல்லை. அதனால் காற்று வீசாது. அங்கிருந்து 382 கிலோ கிராம் எடையுள்ள பாறைப் படிவுகளையும், பாறைத்துண்டையும், தம்மோடு ஆய்வுக்காக எடுத்து வந்தனர். இதுவரை 12 அமெரிக்கர்கள் சந்திரனில் இறங்கிப் பார்த்து வந்துள்ளனர். இன்றைய நவீன தொழில்நுட்பக் காலத்தில் இரண்டு நாட்களில் சந்திரனைச் சென்றடையலாம். சுக்கிரனில் இருந்து பார்த்தால் பூமி நீலநிறக் கோளமாகத் தெரியும். நிழலில் இருந்து பார்த்தால் வானத்தில் நட்சத்திரங்கள் தெரியும். வானம் கறுப்பாகத் தெரியும். இரண்டு கிழமைகள் பகலாகவும், இரண்டு கிழமைகள் இரவாகவும் இருக்கும். சந்திரனைக் கவிஞர்கள் பெண்ணாக வர்ணித்துள்ளனர். சந்திரன் இரவுநேரக் கதைகளின் ராணி. மனிதர்கள் பல்வேறு கதைகளை உருவாக்கியுள்ளனர். பின்னர் இக்கதைகளைப் பார்ப்போம்.

## செவ்வாய் (மார்ஸ்)


செவ்வாய் நான்காவதாக உள்ள கோளாகும். இதன் விட்டம் 6,787 கிலே மீற்றராகும். இதனை "மார்ஸ்" என அழைப்பார்கள். மார்ஸ் ரோமரின் போர்க்கடவுளின் பெயரைக் கொண்டு அழைக்கப் படுகிறது. இது "சிவப்புக் கோள்" அல்லது செவ்வாய் என அதன் நிறத்தைக் கொண்டு அழைப்பார்கள். செவ்வாயைப் புவியின் 'சின்னத்தம்பி" என அழைப்பதும் உண்டு. புவியில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளதுபோல் மலைகளும், பள்ளத்தாக்குகளும் உள்ளன. 1877ல் ஒரு விண்வெளி ஆய்வாளர் செவ்வாயில் குறுக்குமறுக்காகக் கோடுகள் இருப்பதான தகவலை வெளியிட்டார். செவ்வாயிலுள்ளவர்கள் கட்டிய கால்வாய்கள் எனப்பலர் நம்பினார்கள். இதனைக் பேர்சிவல் லொவல் என்ற வணிகர் கேள்வியுற்றார்.




மார்ஸில் உள்ளவர்கள் வரட்சியினால் பாதிப்படைகிறார்கள். அதிலிருந்து தம்மைக் காப்பாற்ற கால்வாய்களை அமைத்துள்ளார்கள் என நம்பினார். 1894ல் தனது வணிகத்தை விட்டு விண்வெளி ஆய்வில் ஈடுபட்டார். அதற்காக அரிசோனாவில் விண்வெளி அவதான ஆய்வுகூட நிலையத்தை அமைத்தார். இரவிரவாக ஆராய்ந்தார். ஆனால் கால்வாய்களைக் காணமுடியவில்லை. 1965ல் அமெரிக்கா 'மறினர் 4" என்ற விண்கலத்தை அனுப்பியது. அதிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்கள் நம்பிக்கையிழக்கச் செய்தன. செவ்வாய் ஒரு வரண்ட கிரகம் என்றாகியது.



செவ்வாயில் உள்ள பள்ளத்தாக்குகள் வரண்டு கிடக்கின்றன. "ஒலிம்பஸ் மொன்ஸ்" என்ற எரிமலைச் சிகரம் செவ்வாயில் உள்ளது.

ஞாயிற்றுத் தொகுதியில் மிகப்பெரிய சிகரமாக விளங்குகிறது. நமது பூமியிலுள்ள எவரெஸ்ட் சிகரத்தைப் போல் மூன்று மடங்கு உயரமானது. அதேபோல் 4,800 கிலோ மீற்றர் நீளமான "மறினறிஸ்" பள்ளத்தாக்கும் பிரசித்தி பெற்றது. செவ்வாயில் பலமான தூசிப்புயலும் உண்டு. தூசிப்புயலினால் மணற்குன்றுகள் போல் தூசிக் குன்றுகள் ஏராளம் உண்டு. வெண்பாறைககளும் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவிக்கு ஒரு சந்திரன் இருக்கிறது. ஆனால் செவ்வாய்க்கு இரண்டு சந்திரன்கள் உள்ளன. அவை உருளைக் கிழங்குகள் போன்ற வடிவினை ஒத்தன. இவற்றை பேராசிரியரும் விண்வெளி ஆய்வாளருமான அசாப் ஹோல் கண்டுபிடித்தார். படத்தில் உள்ள தொலைநோக்கி மூலம் இவை கண்டறியப்பட்டன.



இவற்றின் படங்களை 1976ல் "வைக்கிங் 1" எடுத்தனுப்பியது. அதில் ஒன்று மனித முகம்போன்ற தோற்றத்தைக் காட்டியது. ஆனால் 1998ல் "த குளோபல் சேவயர் ஸ்பேஸ்கிறாவ்ற்" எடுத்தனுப்பிய படத்தில் அது இயற்கையான பாறை என்பதைக் காட்டியது. . புவியைப் போல் செவ்வாயிலும் வடதுருவத்தில் பனிப்படிவுகள் உண்டு என ஆய்வுகள் கூறுகின்றன. செவ்வாய் பிரகாசமான செம்மஞ்சள் நிறமானது. அதனால் இக்கிரகத்தை மற்ற நட்சத்திரங்களில் இருந்து இலகுவாகப் பிரித்தறியலாம்.



செவ்வாய் எரியும் நெருப்புத்தணலின் நிறத்தை ஒத்தது. மக்கள் செவ்வாய்க் கிரகத்தைக் கண்டு பயந்தார்கள். இது வானத்தில் தோன்றினால் யுத்தம் அல்லது அதனையொத்த அனர்த்தம் வரலாம் என நம்பினர். ஆனால் சேனைத்தலைவர்கள் செவ்வாயைத் தமது ஆதரவாளனாகக் கருதினார்கள். எதிரியை வெற்றி கொள்ள செவ்வாய் உதவும் என நம்பினார்கள். போர்க் கடவுளாகச் செவ்வாயைப் போற்றினார்கள்.


செவ்வாய் சூரியனைச் சுற்றி வலம் வருகிறது. ஆனால் புவியின் வேகத்தைவிடவும் இருமடங்கு குறைவான வேகத்தில் சுற்றுகிறது. செவ்வாய் எல்லா ஆண்டுகளிலும் தெரியாது. பலசமயங்களில் நமது புவி சூரியனில் இருந்து ஒரு திசையில் இருக்கும். ஆனால் செவ்வாய் வேறுதிசையில் இருக்கும். நமது புவியிருக்கும் பக்கத்தில் இருந்தால் இரவு நேரங்களில் நன்றாகத் தெரியும். புவிக்கு அருகில் வரும்போது பெரியதாகவும், பிரகாசமாகவும் தெரியும். செவ்வாயின் வாயுமண்டலம் பூயிலிருந்தும் வித்தியாசமானது. செவ்வாயில் பின்வருமாறு வாயுக்கள் உள்ளன.

- காபநீரொக்சைட் - 95.32%
- நைதரசன் - 2.7%
- ஆகன் - 1.6%
- ஒக்சிசன் - 0.13%
- தண்ணீர் - 0.03%
- நியோன் - 0.00025 %



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையாக காபநீரொக்சைட் இருக்கிறது. ஏனையன சிறிதளவுதான் உள்ளன. 'வைக்கிங் லாண்டர்' என்ற விண்கலம் அனுப்பிய படத்தின்படி பள்ளத் தாக்குகளில் குளிர்காலத்தில் மெல்லிய நீர்த்தாவரப் போர்வை தெரிகிறது. 'ஹபிள்' விண்வெளித் தொலைநோக்கி ஊடாக 1995 பெப்ருவரி 25 ல் எடுக்கப்பட்ட படங்கள் விஞ்ஞானிகளுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தின. முதல் எடுத்த படங்களைவிட வித்தியாசமான படங்களைப் பார்வையிட்டனர். செவ்வாயில் மேகக்கூட்டம் அதிகமாகத் தெரிந்தன. செவ்வாய்க் கிரகத்தில் பவனத்தின் நீராவி



ஒடுங்கி ஆலிகள் நிறைந்த மேகங்களாக உருவாகின்றன. செவ்வாயில் தற்போது தண்ணீர் இல்லையாயினும், கொள்கையடிப்படையில் நிலநீர் அல்லது நிலத்துக்கடியிலான நீர் வலையமைப்புக்கு உறைபனி பாதுகாப்பாக உள்ளது என ஊகிக்க இடமுண்டு என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். நீண்ட காலங்களுக்குமுன் ஆறுகள், தாவரங்கள் இருந்ததற்கான தடயங்கள் தெரிவதாக ஆய்வுகள் கூறுகின்றன. செவ்வாயில் பதிவுசெய்யப்பட்ட சராசரி வெப்பநிலை -63° C (-81° F) பாகையும் உயர் வெப்பநிலையாக 20° C (68° F) பாகையாகவும், ஆகக்குறைந்தளவு -140° C (-220° F). வெப்பநிலையாகவும் உள்ளது.



2008 மே மாதம் 28ல் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் "பீனிக்ஸ்" விண்கலத்தைச் செவ்வாயின் வடபகுதியில் தரையிறக்கியது. செவ்வாய்த்தரையில் பேர்குளோரைட் உப்பு இருப்பது கண்டறியப்பட்டது. பேர்குளோரைட் 70 பாகை செல்சியர்ஸ் வெப்பநிலையில் நீரைத் திரவமாகப் பேணக்கூடியது. பேர்குளோரைட் அமிலத்திலிருந்து பெறப்படும் உப்பு ஏவுகணைக்கான திண்ம எரிபொருளாகப் பயன்படக்கூடியது. வாணவேடிக்கைப் பொருட்களுக்கான உள்ளீடாகவும் பயன்படுத்தப்படுகிறது. இது செவ்வாயில் மேற்பரப்புக்குக் கீழ் திரவ வடிவில் உப்புநீர் இருப்பதற்கான தடயமாகும். செவ்வாயில் 167 எரிமலைகள் உண்டு. பூமியில் உள்ள எரிமலைகள் 100 மில்லியன் வருட வயதை உடையன. ஆனால் வீனஸின் எரிமலைகள் 500 மில்லியன் வருட வயதையுடையன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளிப்புறமாக உள்ள கோள்கள்

சூரியனுக்கு வெளிப்புறமாக நான்கு கோள்களும் வலம் வருவதாகப் பார்த்தோம். அல்லவா? நான்கு கோள்களும் ஒப்பீட்டளவில் பெரியன. அத்துடன் பெரும்பாலும் வாயுவைக் கொண்டுள்ளன. இக்கிரகங்களை 'வாயு அரக்கர்கள்' எனக் கூறுவார்கள். இவை சந்திரன்களையும், வளையங்களையும் கொண்டுள்ளன. இவற்றின் மேற்பரப்பு வர்ணமயமாகத் தென்படும். மிக அழகான கண்கவர் கோளங்களாகத் திகழ்கின்றன. கிரகங்கள் பின்வரும் வரிசைக்கிரமத்தில் உள்ளன.

| இல | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 01 | ஜூபிற்றர் | வியாழன் |
| 02 | சற்ரேன் | சனி |
| 03 | யுரேனஸ் | யுரேனஸ் |
| 04 | நெப்ரியூன் | நெப்ரியூன் |
| 05 | புளுட்டோ | புளுட்டோ |

## வியாழன் (ஜூபிற்றர்)

கணிதமேதை கலிலியோ கலிலி 1610 ஜனவரி 07ம் திகதி தனது தொலைநோக்கியூடாக இரவு வானைப் பார்த்தார். பெரியதொரு கோளைக் கண்டார். அத்துடன் பூமியினைத் தொடர்ந்து வரும் சந்திரனைப் போல் சில உருவங்களையும் கண்டார். அவை ஜூபிற்றரைச் சூழவுள்ள சந்திரன்களான அயோ, யுரோப்பா, கனிமீடா, கலிஸ்ரோ ஆகியனவாம். இவற்றை கலிலியோவின் சந்திரன்கள் எனவும் அழைப்பார்கள்.

வியாழன் எனப்படும் ஜூபிற்றர் மிகப்பெரிய வாயுக்கோளாகும். சுமார் 1000 பூமிகளை இதற்குள் வைக்கலாம். எப்போதும் சுழன்று வரும் நிறங்களையும் கோலங்களையும் கொண்டது. நான்கு பெரிய சந்திரன்கள் உள்ளன. அத்துடன் 60 க்கும் மேற்பட்ட சிறிய சந்திரன்களையும் வியாழன் கொண்டுள்ளது. அத்துடன் இரண்டு வளையங்களையும் கொண்டுள்ளது. ஜூபிற்றரின் விட்டம் 139,822 கிலோ மீற்றராகும். தனது அச்சில் 3.08 பாகை சரிந்திருக்கிறது. சூரியனில் இருந்து 779 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. நமது புவியில் 45 கிலோ ஜூபிற்றரில் 100 கி.லோவாக இருக்கும். ஹைதரசனையும், ஹீலியம். அத்துடன் மீதேனும் முக்கிய வாயுக்களாக உள்ளன. சூரியனில் இருந்து பெறும் வெப்பத்தைவிடவும் இருமடங்கு வெளியேற்றுகிறது. அதனால் அதன் உள்ளீட்டின் வெப்பம் 30,000 பாகை செல்சியஸாகும்.

புயல் அதிகமாக வீசுவதாக வானியல் அவதானிகள் கருதுவர். நமது கிழமை நாட்களில் வியாழனும் ஒன்று. அல்லவா? இரவு நேரங்களில் கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூசும்படி விளக்கைப் போல் சீராக எரிகிறது.



வியாழன் தனது சந்திரன்களோடு தனது சுற்றுவட்டப்பாதையில் செல்கிறது. இது ஒரு சிறிய "சூரியக் குடும்பம்"போல் பவனிவருகிறது. வியாழன் மிகப்பெரிய கிரகம். ஆனால் நமது சூரியனைவிடப் பலமடங்கு சிறியது. கிரகங்களின் பருமனுக்கேற்ப அதன் ஈர்ப்புச் சக்தி இருக்கும். வியாழனில் ஈர்ப்பு விசையைத் தாங்கிக் கொள்ள முடியாது.

வியாழனில் ஈர்ப்பு விசை அதிகம். வியாழன் புவியைவிடவும் மூன்று மடங்கு வலிமையாகக் கவர்ந்திழுக்கும். நமது கால்களில் நிற்பதே சிரமமாக இருக்கும். வியாழனில் ஒருமாடிக் கட்டிடம் ஐந்து மாடிக்கட்டிடத்தின் பாரத்தைக் கொண்டிருக்கும். வியாழனில் நமது நாட்டில் ஓடும் ரயில்வண்டிகள் வியாழனில் ஓடினால் பாரம் தாங்காது தண்டவாளங்கள் வளைந்து நொருங்கிப் போகும். பஸ் வண்டிகளின் சில்லு முதலியன சுக்குநூறாகி விடும். செவ்வாயில் சிறிதளவு தண்ணீர் உள்ளது. ஜூபிற்ரர் சூரியனில் இருந்து பெறும் வெப்பத்தைப்போல் இரு மடங்கு வெளிவிடுகிறது.

ஜூபிற்ரருக்குப் பல சந்திரன்கள் சிறிதும் பெரிதுமாக உள்ளன. இவற்றுள் மெற்றிஸ், அட்றஸ்ரியா, அமல்டதியா, திபி ஆகிய நான்கு சிறிய சந்திரன்கள் ஜூபிற்ரைச் சுற்றி வருகின்றன. அவற்றுக்கு வெளியே அயோ, யுரோப்பா, கனிமெடி, கலிஸ்ரோ ஆகிய பெரிய சந்திரன்கள் சுற்றுகின்றன.

**கலிஸ்ரோவின் தோற்றம்**



கலிஸ்ரோவை ஆகாயக்கற்கள் தாக்குகின்றன. ஆகாயக்கற்களும், வால்வெள்ளிகளும் ஜூபிற்றரின் உறைபனித் தரையின் மேற்பரப்பைத் தாக்கிப் பள்ளங்களை உருவாக்கிவிடுகின்றன. அப்பள்ளங்களின் கீழ் உப்புநீரைக் கொண்ட சமுத்திரங்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது.



**கனிமெடியின் தோற்றம்**


கனிமெடியின் மேற்பரப்பும் இவ்வாறான வெடிப்புக்களும் பள்ளங்களும் உள்ளன. இவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விண்வெளிக்கற்கள், வால்வெள்ளிகளின் வீழ்ச்சியால் உருவானவையே. அதே வேளை வெப்பத்தினால் சுருங்கி விரிவடைதல் மூலமும் உருவாகியிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. இவ்வாறான படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

இவற்றைத்தவிர இவற்றுக்கு வெளியே லிடா, ஹிமலியா, லிஸ்தியா, எலசா ஆகிய இன்னும் நான்கு சந்திரன்கள் சுற்றுகின்றன. இவற்றையும் தாண்டி அனன்கே, கார்மி. பஸிபி, சினோப் ஆகிய நான்கு சந்திரன்கள் எதிர்த்திசையில் வலம் வருகின்றன. ஜூபிற்றரின் சந்திரன்களையும், வளையங்களையும் படத்தில் காணலாம்.




அயோ, யுரோப்பா, கனிமெடி, கலிஸ்ரோ ஆகிய சந்திரன்களில் கனிமெடி பெரியது. 5,268 கி.மீ. விட்டமுடையது. சூரியத் தொகுதி யில் உள்ள சந்திரன்களில் பெரியது. உண்மையில் மேக்கியுரி, புளுட்டோ ஆகிய கிரகங்களைவிடப் பெரியது. யுரோப்பா நமது பூமியைப்போன்ற தன்மை கொண்டுள்ளது. மெல்லிய தண்ணீர்ப் படலத்தைக் கொண்ட வளியமுக்கம் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

## சனி (சற்ரேன்)



சனிக் கிரகத்தை முதன் முதல் கலிலியோ 1610 ல் தொலைநோக்கியின் உதவியுடன் அவதானித்தார். சனிக் கிரகத்தை ஆராய்வதற்காக 1979 ல் நாசா "பயனியர் 11" விண் கலத்தை அனுப்பியது. பின்னர் வொயஜர் 1. வொயஜர் 2 ஆகியவற்றையும் 2004 ஜூலை முதலாம் திகதி அனுப்பி வைத்தது. அவை சனிக்கிரகத்தை ஆராய்கின்றன.




சனி எனப்படும் சற்றேன் கண்கவர் நிறங்களைக் கொண்டுள்ளது. வியாழனை (ஜூபிற்றர்) விடவும் சற்றுப் பிரகாசம் குறைந்தது. தூசியினையும், மின்னும் ஒளியினையும் கொண்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையங்களைக் கொண்டுள்ளது. அதன் பிரகாசமான ஒளி கண்களைக் கவரும் வண்ணமுள்ளது. சனி 116,464 கிலோ மீற்றர் விட்டத்தினைக் கொண்டது. ஹைதரசன், ஹீலியம், மீதேன் ஆகிய வாயுக்களைக் கொண் டுள்ளது. சனியைச் சுற்றி பல வளையங்கள் உள்ளன. ஒரு தொப்பியின் விளிம்பைப்போல் சனியின் வளையங்கள் கெட்டியானது. கிரகத்தைச் சுற்றிவரும் துகள்களால் ஆனது.



சனி வளையங்கள்

இதன் மிகப்பெரிய வளையம் சுமார் 1,000,000 கிலோமீற்றர் விட்டமுடையது. வளையங்களுக்கிடையே இடை வெளியுண்டு. இதனை 'றொச்சி எல்லை" எனக்கூறுவார்கள். "இடோவாட றொச்சி" என்ற பிரான்ஸ் விண்வெளி ஆய்வாளர் கற்பனையான இடைவெளியைக் கணக்கிட்டார். இந்த இடைவெளிகளில் சந்திரன்கள் உருவாகாது எனக்கூறினார். இடைவெளிக்கு வெளியே சந்திரன்கள் உருவாகக்கூடும் என்றார். 18 உபகோள்களான சந்திரன்களைச் சனி கொண்டுள்ளது. சனிக்கிரகம் "ரைற்றான்" எனப்படும் மிகப் பெரிய சந்திரனைக் கொண்டுள்ளது. நமது கிழமை நாட்களில் சனியும் ஒன்றல்லவா?



சூரியக் குடும்பத்தில் வியாழனுக்கு அடுத்தபடியாகவுள்ள பெரிய கோள் சனிக்கோள்தான். பூமியைவிட 95 மடங்கு பெரியது. தன்னைத் தானே சுற்ற 10.5 மணிநேரம் எடுக்கும். சூரியனைச் சூற்றிவர 29.5 வருடங்கள் எடுக்கும். அதன் விட்டம் சனியின் மத்திய கோட்டில் 75,000 மைலாக உள்ளது. துருவப்பகுதியில் 68,000 மைலாக உள்ளது.

சனியைச் சுற்றி எண்ணிலடங்காத வளையங்கள் வலம்வருகின்றன. அந்த வளையங்களில் தூசுகளும், விண்கற்களும், துணிக்கைகளும், பனிமேவி இடைவெளி களுடன் வேகமாய் சுற்றிவந்து சுடர்விட்டுப் பிரகாசிக் கின்றன.


இந்து சமயப் புராணக்கதைகளில் சனிக்கு முக்கிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நளன் சனியின் பார்வையில் சிக்கி நாடுநகரிழந்து அல்லலுற்றதாகப் புராணம் கூறுகிறது. அரிச்சந்திர புராணமும் சனியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருவிளையாடல் பற்றிக் கூறுகிறது. சனிபகவான் என்று சனிக்குக் கோயில் கட்டிக் கும்பிடுவோர் கீழைத்தேச நாடுகளில் ஏராளம் உண்டு. இவற்றைப் பின்னர் பார்ப்போம்.

## யுரேனஸ்



யுரேனஸை கிரேக்கர்கள் வானத்தின் கடவுள் எனப் போற்றினார். ஜுரேனஸ் சூரியனில் இருந்து ஏழாவது கிரகமாகும். வாயுக்களாலான பெரும் இராட்சதக்கிரகமாகும். யுரேனஸ் மிகத்தூரத்தில் உள்ளதால்

வெறுங் கண்களின் பார்வைக் குத் தென்படாதிருக்கின்றது. 1781ல் இக்கோளினை பிரித்தானிய வானியலாளரான சேர். வில்லியம் ஹேர்ஷல் கண்டுபிடித்தார். ஜுரேனஸின் தென்துருவம் சூரியனுக்கு நேராக இருப்பதை அவதானித்தார். அதனால் ஜுரேனஸ் துருவப்பகுதி ஊடாக அதிக சக்தியைப் பெறுகிறது என்றார். ஜுரேனஸின் வளிமண்டலம் 83மூ ஐதரசனையும், 15மூ ஹீலியமும் 2மூ மீதேனையும் கொண்டுள்ளது.



ஜுரேனஸ் நீலநிறத்தோடு பிரகாசிக்கிறது. காரணம் மேல் வளிமண்டலத்தில் உள்ள சிவப்பு நிறத்தை மீதேன் உறிஞ்சியெடுப்பதாலாகும். ஜுபிரரைப் போல் ஜுரேனசும் வளையங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வளையமும் 10 மீற்றர் விட்டத்தைக் கொண்டது. அப்படி 11 வளையங்களை ஜுரேனஸ் கொண்டுள்ளது

யுரேனஸ் கிரகத்துக்கு 27 சந்திரர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. யுரேனஸின் வளையங்கள் கண்கவர் வண்ணங்களைக் கொண்டதாக இல்லை என்று வானியலாளர்கள் கூறுவார்கள்.

83% ஐதரசனையும், 15% ஹீலியமும் 2% மீதெனையும் கொண்டுள்ளது. ஜுரேனஸ் நீலநிறத்தோடு பிரகாசிக்கிறது. காரணம் மேல் வளிமண்டலத்தில் உள்ள சிவப்பு நிறத்தை மீதேன் உறிஞ்சியெடுப்பதாலாகும். ஜுபிரரைப் போல் ஜுரேனசும் வளையங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வளையமும் 10 மீற்றர் விட்டத்தைக் கொண்டது. அப்படி 11 வளையங்களை ஜுரேனஸ் கொண்டுள்ளது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யுரேனஸ் கிரகத்துக்கு 27 சந்திரர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. யுரேனஸின் வளையங்கள் கண்கவர் வண்ணங்களைக் கொண்டதாக இல்லை என்று வானியலாளர்கள் கூறுவார்கள்.

## நெப்டியூன்




நெப்ரியூன் சூரியனில் இருந்து எட்டாவது கிரகமாகும். கலிலியோ 1612 டிசம்பர் 28ல் முதன்முதலில் அவதானித்தார். பின்னர் 1613 ஜனவரி 27ல் அவதானித்து படங்களை வரைந்தார். முதலில் அதனை ஒரு நட்சத்திரம் என்றே கருதினார். பல ஆய்வுகளின் பின் 1846 செப்தெம்பர் 23ல் நெப்ரியூன் கண்டு பிடிக்கப்பட்டது. சூரியனில் இருந்து 4.55 பில்லியன் கி.மீ. தூரத்தில் உள்ளது. பூமி தனது அச்சில் 23.5 பாகை சரிந்து இருப்பதுபோல், நெப்ரியூனும் 28.32 பாகை சரிந்துள்ளது. நெப்ரியூனின் மத்தியகோடு 49,526 கி.மீ. (30,775 மைல்) விட்டம் கொண்டது. புவியைவிடவும் நான்கு மடங்கு பெரிதானது. மேலேயுள்ள படம் நெப்டியூனையும் பூமியையும் ஒப்பிட்டுக் காட்டுகிறது. நெப்டியூன் பெரிதாகவும், பூமி சிறிதாகவும் உள்ளது.





நெப்ரியூன் தன்னைத்தானே ஒருமுறை சுற்ற 16.11 புவியின் மணித்தியாலங்கள் செல்லும். சூரியனை ஒருமுறை சுற்றிவர 164 புவி வருடங்கள் எடுக்கும். பூமியில் 45 கிலோகிறாம் நெப்ரியூனில் 50 கிலோகிறாமாக இருக்கும். நெப்ரியூனுக்கு 13 சந்திரர்கள் உண்டு. அவற்றுள் ரைற்றான் முக்கியமானது. அதன் படம் இங்கு தரப்பட்டுள்ளது.




நெப்ரியூனில் 80% ஹைதரசனும், 19% ஹீலியமும் சிறிதளவு மீதேனும் உள்ளது. விண்வெளி ஆராய்ச்சி நிபுணர்கள் ஜூரேனஸையும், நெப்டியூனையும் 'ஐஸ்ஜயன்ற்" பனிப் பூதங்கள் எனவும் கூறுவார்கள். நெப்டியூன் உள்பகுதியில் பனியும் பாறையும் கலந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. எல்லாக் கோள்களை விடவும் நெப்டியூனில்தான் கடுமையான காற்று வீசுவதாகக் கூறப்படுகிறது. மணிக்கு 2500 கிலோமீற்றர் வேகத்துக்குக் காற்று வீசுகின்றது. மூன்று வளையங்களும் உள்ளன. வொயஜர் 2 என்ற விண்கலம் 1989 ஆவணி(ஒகஸ்ற்) 25ல் நெப்ரியூனுக்கு பயணித்துள்ளது. நெப்டியூன் ரோமர்களின் கடல் கடவுளாகக் கொள்ளப்படுகிறது.

## புளூட்டோ



புளூட்டோக் கிரகம் ஞாயிற்றுத் தொகுதியுடன் உருவாகியதா? அல்லது ஞாயிற்றுத் தொகுதியினால் கைப்பற்றப்பட்டதா என்பது யாருக்கும் புரியவில்லை. பேசிவல் லொவல்தான் புளூட்டோவை முதலில் அடையாளம் கண்டார். ஆனால் அவரால் சரியாக அதனை நரூபிக்க முடியவில்லை. லொவல் 1894ல் அரிசோனாவில் 'லொவல் வான்வெளி அவதான நிலையத்தை" அமைத்தார். இந்த நிலையத்தின் மூலம்தான் கிளைட் தொம்பா 1930 ல் புளூட்டோவை கண்டுபிடித்தார். கிளைட் தொம்பா படத்தில் காணப்படுகிறார்.



கிளைட் தொம்பா 1997ல் அமரத்துவம் அடைந்தார். புளூட்டோவுக்கு சரோன் என்ற துணைக்கோளான சந்திரனும் உண்டு. புளூட்டோ சூரியனிடமிருந்து வெகு தூரத்தில் உள்ளதால் அதன் தன்மைபற்றி அறிய முடியாதுள்ளது. புளூட்டோவின் விட்டம் 1,430 மைல். தனது அச்சில் சுற்றிவர புவியின் 6 நாட்களும் 9 மணித்தியாலங்களும் எடுக்கும். புளூட்டோவில் ஒரு வருடம், புவியின் 248 வருடங்களாகும்.

புளூட்டோ சூரியகுடும்பத்தில் இருந்து மெதுவாக விலகிவிட்டதாக அண்மைக் கால ஆய்வுகள் கூறுகின்றன. 2006 ஒகஸ்ற் 24ல் 75 நாடுகளின் 2,500 வானியலாளர்கள் கூடிய சர்வதேச வானியலாளர் சங்கம் புளூட்டோவை ஞாயிற்றுத் தொகுதியில் இருந்து நீக்கிவிட்டது..



இந்த முடிவினைப் பலநாடுகள் எதிர்க்கின்றன. கலிபோர்னிய மாநில சபை இதனை வன்மையாகக் கண்டித்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் மெக்சிக்கோ மக்கள் அவை புளூட்டோவை கிரகமாக அங்கிகரிக்கவேண்டும் என்று தீர்மானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றி யுள்ளது. அத்துடன் தொம்பா ஐக்கிய அமெரிக்காவின் இலினோய் மாநிலத்தில் பிறந்தார். தொம்பாவினை நினைவு கூருமுகமாக மார்ச் 13ம் திகதியை ' புளூட்டோ கிரகநாள்" எனக் கொண்டாடவேண்டும் எனவும் தீர்மானித்துள்ளது. ஆனாலும் சோதிடக்கலையில் இன்னும் புளூட்டோவின் பங்களிப்புத் தொடர்கிறது. புளூட்டோவின் தரை அமைவைப் படம் காட்டுகிறது. பிறைவடிவில் சறோன் தெரிகிறது. புள்ளியாகச் சூரியன் தெரிகிறது

## நாட்களின் பெயர்கள்

நமது முன்னோர் நாட்களைக் கிரகங்களின் பெயர்களைக் கொண்டே அழைத்தார்கள். ஒரு கிழமையில் ஏழு நாட்கள் உள்ளன. ஞாயிறு தொடக்கம் சனி வரையுள்ள நாட்களே அவைகள். சூரியக் குடும்பத்துக்குச் சூரியனே தலைவன். சூரியன் இன்றேல் இயக்கம் இல்லை என்பதனை அறிந்திருந்தார்கள். புவியில் பகலில் சூரியனது ஆட்சி நடக்கும். இரவில் சந்திரனின் ஆட்சி நடக்கும். நமது முன்னோர்கள் புத்தியுள்ள திறமைசாலிகள். தேவை கருதித்தான் பொருத்தமான இடங்களில் கிரகங்களை முன்னிலைப் படுத்தியுள்ளார்கள். முதலாவது இடத்தினை சூரியனுக்கு அளித்தார்கள். புவிக்கு இரவில் ஒளி கொடுப்பது சந்திரன். சந்திரன் புவியின் துணைக் கோளாகும். இரண்டாம் இடத்தினைச் சந்திரனுக்கும் ஒதுக்கியுள்ளார்கள். சூரியனின் வெப்பம் உலகத்தை இயக்குகிறது. அதனால் சூரியனின் பெயரை கிழமையின் முதல் நாளாகக் கொண்டார்கள். அதற்கு ஞாயிறு எனப் பெயரிட்டார்கள். இதனைக் கிரேக்க, பபிலோனிய, அரேபிய, சீன, இந்திய நாட்டவரும் ஏற்றுள்ளார்கள்.

இரண்டாவது நாளுக்குத் திங்கள் என்று பெயரிட்டார்கள். திங்கள் என்பது சந்திரனைக் குறிக்கும். அடுத்து வருபவை அனைத்தும் கிரகங்களைக் குறிக்கும். செவ்வாய் நான்காவதாக உள்ள கோளாகும். இதற்கு முன்னுரிமை கொடுத்து மூன்றாம் இடத்தில் வைத்து நாளுக்குப் பெயர் சூட்டினார்கள். சூரியனுக்கு மிக அண்மையில் உள்ளது புதன் எனப்படும் மேக்குரி ஆகும். அடுத்து வியாழன் (ஜூபிற்றர்) கிரகத்தை நினைவு கூர்ந்து பெயரிட்டுள்ளார்கள். வியாழன் மிகப்பெரிய கோளாகும்.. அது பெரிதும் சிறிதுமாகப் பல சந்திரன்களையும் கொண்டுள்ளது. புயல் அதிகமாக வீசும் கிரகமாகும். வெள்ளி எனப்படும் வீனஸ் இரண்டாவது இடத்தில் உள்ளது. இது வானத்தின் மிகப்பிரகாசமான கோளாகும்.. இதனைக் கிழமையின் ஆறாவது இடத்தில் வைத்துப் பெயரிட்டுள்ளார்கள். ஏழாவது நாளாக சனியைக் கொள்வார்கள். சனி எனப்படும் சற்றேன் கண்கவர் நிறங்களைக் கொண்டுள்ளது. தூசியினாலும், மின்னும் ஒளியைக் கொண்ட வளையங்களினாலும் அது பிரகாசமான கண்கவர் ஒளியைக் கெண்டு பிரகாசிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை நன்கு அவதானிக்க வேண்டும். சூரியனில் தொடங்கி சந்திரன், சனிவரையுள்ள கோள்களையும் கிழமை நாட்களாகக் கொண்டுள்ளனர். இவை ஏழும் ஒரு மனிதனுடைய வாழ்வியலைத் தீர்மானிக்கின்றன. இதனைச் சோதிடர்கள் திடமாக நம்புகின்றனர்.

நமது முன்னோர்கள் கிரகங்களைத் தமது வழிபடு தெய்வங் களாகக் கொண்டனர். கிரேக்கர்கள் அவற்றைக் கடவுள்ர்களாக மதித்தனர். உலகத்தின் எல்லா மக்களும் கோள்களைக் கடவுள்ர்களாக ஏற்றனர். இவை யாவும் நமது வாழ்வியலைக் கட்டுப்படுத்தும் வலிமை கொண்டனவாக நம்பினார்கள். கிரகங்களும், இராசிக் கூட்டங்களும் தமது இன்பதுன்பங்களுக்குத் துணைபோவன என நம்பியிருந்தார்கள். அதனால் எழுந்ததுதான் சோதிடக்கலை. கிரேக்கர்களும், பபிலோனியர்களும், அராபிரும், இந்தியர்களும், இலங்கையரும், ஐரோப்பியர்களும், உலகத்து மக்கள் அனைவரும் பொதுவாக கிரகங்களையும், இராசிகளையும் தெய்வங்களாக நம்பி வழிபடுகின்றனர்.

ஏதோ ஒரு வகையில் கிரகங்கள் அவர்களது வாழ்வியலோடு தொடர்பு பட்டதாக இருக்கின்றன. இதிகாச புராண, கர்ணபரம்பரைக் கதைகளில் இவை இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கிரகத்தினையும், இராசியையும் மனிதஉருவில் நடமாடிய வீரதீரமுள்ள கதாநாயக, நாயகிகளாக வர்ணித்து வானிலே வைத்துப் போற்றுகிறார்கள். இவ்வாறான கதைகள் வாசிக்கும்போது சுவையைத் தருவனவாக உள்ளன. இவற்றை எல்லாம் நீங்கள் அறிவதற்காகத்தான் எழுதுகிறேன். தொடர்ந்து வாசிப்போமா?

## கிரகக் கடவுளரின் கதைகள்



சூரியனை மையமாகக் கொண்டு ஏனைய ஒன்பது கிரகங்களும் நீள்வட்டப் பாதையில் வலம் வருகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் இடையே இறுக்கமான ஆதர்ஷண பிணைப்பு இருப்பதை விஞ்ஞானமும், சோதிடக்கலையும் கூறுகிறது. பூமியில் உயிரினங்கள் வாழ்கின்றன. அவைகளுள் மனிதன்தான் சிந்திக்கும் திறனைக் கொண்டவனாகக் கருதப்படுகிறான். மனிதன் தன்சிந்தனைத் திறத்தாலும், அனுபவ ஆராய்ச்சியினாலும், விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டறிகிறான். மெய்ஞ்ஞானத்திலும் ஈடுபட்டுள்ளான்.

- சூரியன்

1. புதன்
2. வெள்ளி
3. பூமி
4. செவ்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


5. வியாழன்
6. சனி
7. யுரேனஸ்
8. நேப்ரியூன்
9. புளுட்டோ.

## சூரியன்

சூரியக் குடும்பத்தின் தலைவனான சூரியன் சக்திமிக்க கடவுளாக உலக மக்கள் போற்றுகின்றனர். சூரியன் ஒரு கிரகமல்ல. அது ஒரு விண்மீன். ஆனால் சூரியக்குடும்பத்தின் அனைத்துக் கிரகங்களுக்கும் வெப்பத்தைக் கொடுத்து இயங்க வைப்பது சூரியன்தான். உலகில் பருவ காலங்களைத் தோற்றுவிக்கிறது. உயிரினங்களுக்கு உயிரூட் டுகிறது. மழை பொழிவதும் வயல் விளைவதும் சூரியனால்தான். வளிமண்டலத்தை அசைத்து காலநிலை மாற்றங்களைத் தருவதும் சூரியன்தான். சூரிய கதிரியக்கத்தினால் தாவரங்கள் ஒளித்தொகுப்பு மூலம் உணவைத் தயாரிக்கின்றன. அதனால் பண்டைய மக்கள் சூரியனைக் கடவுளாகப் போற்றினார்கள். சூரியக்கடவுளின் பல்வேறு உருவங்களைப் படத்தில் காணலாம். நோர்டிக் வெண்கலயுகத்தில் சூரியத் தேரைக் குதிரை இழுத்துச் செல்வதாகச் செதுக்கப்பட்ட சிற்பம் படத்தில் காணப்படுகிறது.



எகிப்தியர்கள் சூரியக்கடவுளை 'றா" என அழைத்தார்கள். எகிப்தில் 'றா" என்னும் சூரியன் தனது படகுத் தோணியில் பயணிக்கும் காட்சி. இச்சின்னம் கிஸா பிரமிட் வளாகத்தில் 1954 மே மாதம் கண்டுபிடிக்கப்பட்டது. இது கி.மு. 2500 வருடங்கள் பழமை வாய்ந்தது. தங்களைக் காப்பாற்றுவதற்காகப் 'றா" பயங்கர இருளில் தோணியில் பயணம் செய்வதாக நம்பினார்கள். அத்தோணியில் "தொத்" எனப்படும் சந்திரன் அவருக்குத் துணை போவதாகவும் நம்பினார்கள். எகிப்தில் சூரியக்கடவுளின் சிலையைப் படம் காட்டுகிறது.



சூரியனைப் பலநாடுகள் ஆண் கடவுளாகப் போற்றுகின்றன. சூரியனைப் பல பண்டைய மனிதர்கள் கடவுளாகப் போற்றினார்கள். இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, தைமூர் நாடுகளில் சில இனமக்கள் தாங்கள் சூரியனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நேரடி வாரிசுகள் எனக்கருதுகின்றனர். சூரியன் சத்திரிய வம்சத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.




இந்துக்கள் சூரியனுக்குக் கோயில் அமைத்து, சிலைவடித்து வணங்கினார்கள். இந்தியாவில் ஒரிசா மாநிலத்தில் கொனாக் நகரில் உள்ளகோயில் காணப்படும் சூரியனுக்குரிய சிலையின் வடிவம் படத்தில் காணப்படுகிறது. சூரியன் சத்திரிய வம்சத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

சூரியகுடும்பத்தின் தலைவனும், இயங்கவைக்கும் தன்மையும் வாய்ந்த சக்தியுடையது அரச வம்சங்களை இவ்வாறு கருதுவர். இராமாயணத்தில் இராமன் சூரியவம்சத்தைச் சார்ந்தவராகக் கூறப்படுகிறது. மகாபாரதக் கதையில் சூரியன் மனிதனாகி வருகிறான். குந்திதேவியை அடைகிறான். குந்திதேவிக்கும் சூரியனுக்கும் பிறந்த பிள்ளைதான் கர்ணன் எனக்கூறப்படுகிறது. சில நாடுகளில் சூரியன் பெண்கடவுளாகக் கொள்ளப்படுகிறது. இன்னும் சூரியனைப் பற்றிய கதைகளை வாசிக்கத் தந்துள்ளேன்.

## சந்திரன்



நமது பூமிக்குச் சொந்தமான சந்திரனைப் பலநாடுகள் கடவுளாகப் போற்றி வணங்குகின்றன. தென்னாசிய நாடுகளிலும், இந்து சமயத்தின் இதிகாச புராணங்களில் சந்திரனுக்கு முக்கிய இடமுண்டு. பலநாடுகளின் இனங்கள் தாங்கள் சந்திரனின் நேரடி வாரிசுகள் எனக்கருதுகிறார்கள். பபிலோனிய, சுமேரிய நாகரீககாலங்களில் சந்திரனுக்குக் கோயில்கள் இருந்தன. கி.மு.2100ல் மொசப்பெத் தேமியாவின் “சிக்குறாற்” கோவிலில் சந்திரக் கடவுளின் திருவிழாக் காட்சி படத்தில் காட்டப் பட்டுள்ளது. ஊர்வலமாக சந்திரக்கடவுள் அவரது கோயிலான “சொர்க்கத்தின் மலை“க்கு எடுத்துச் செல்லப்படுகிறது. பிரித்தானிய அரும் பொருட் காட்சியகத்தில் உள்ள சந்திரக்கடவுளின் கோயிலின் வரைபடம் உள்ளது. அதனைப்படத்தில் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சின்' என அழைக்கப்பட்ட சந்திரக் கடவுள் மத்திய கிழக்கு நாடுகளில் போற்றப்பட்டுள்ளதை வரலாறுகள் கூறுகின்றன. ஏப்ரகாம் காலத்தில் சந்திரக்கடவுளின் வணக்கமுறை பரவி யிருந்தது. ரோமானியர்கள் சந்திரனை 'தயானா' என அழைத்து வணங்கினார்கள். வேட்டைக்குச் செல்லும்போது காவற்கடவுளாகவும். வேட்டைக்கு உதவும் பெண்கடவுளாகத் தயானா விளங்கியது. படத்தில் தயானா தனது வேட்டை நாயுடன் காணப்படுகிறார்.

தயானா இத்தாலியரின் வனதேவதையாகும். ஜுபிற்றர் என்ற சீயஸ் கடவுளுக்கும், லரோனாவுக்கும் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. மூத்தது ஆண். அதற்கு அப்பலோ என்று பெயர் சூட்டினார்கள். இளையது பெண்குழந்தை. அதற்குத் தயானா எனப்பெயர் சூட்டினார்கள். கிரேக்கர்களின் பெண்கடவுளான அர்த்தமீஸ் சந்திரக்கடவுளாகும். அர்த்தமீஸ்தான் ரோமர்களின் தயானா எனக் கொண்டனர். கிரேக்க புராணங்களில் அர்த்தமீஸ் அப்பலோவின் தங்கையாவார். அதேவேளை அர்த்தமீஸ் வேட்டைக்குரிய பெண்கடவுளுமாவார். தாயும் தந்தையும் சீயஸும் லரோனாவும் ஆவார்கள். தயானாவுக்கு கப்புவா என்ற தேசத்தில் கோயில் உண்டு. அதேபோல் ஆபிரிக்காவிலும் கோயில்கள் உண்டு. சந்திர வணக்கம் இன்றும் உள்ளது.



ஆதியில் சந்திரன் பிரதான கடவுளாக விளங்கியது. சந்திரனை 'சின்" எனும் பெயரால் அழைத்தார்கள். சின் கடவுளின் மனைவி 'பெருந்தகைப் பெண்" அவர் பெயர் நிங்கள். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் இருந்தார்கள். ஒரு குழந்தை 'சமாஸ்" என்ற பெருடைய சூரியன். இரண்டாவது 'இஸ்தர்" என்ற பெயருடைய வீனஸ் கிரகம். மூன்றாவது 'நுஸ்கு" எனும் நெருப்புக் கடவுள். 'ஊர்" 'ஹரான்" ஆகிய இடங்களில் கோயில்கள் கட்டப்பட்டன. இவை பபிலோனிய சாம்ராச்சியத்தில் இருந்தன. ஆப்பிரகாம் காலத்தில் சின் கடவுளின் வழிபாடு பெருமளவில் இருந்தது. சின்கடவுள் அறிவும் சூட்சுமப் புத்தியும் கொண்டவராக நம்பினார்கள். அவரே நாட்காட்டியில் தலைவரும் ஆவார். சந்திரனை 'நன்னா" என்று பெருமையோடு அழைத்து வணங்குவார்கள். ஒவ்வொரு மாதமுடிவிலும் சந்திரக்கடவுள் காட்சி கொடுத்து அவர்களுக்காகத் தீர்மானம் எடுப்பார் என நம்பினார்கள். பபிலோனியாவின் இறுதி மன்னன் நபோனிடஸ் கி.பி.550 ல் சந்திரனுக்கான கோயிலைப் புதுப்பித்தான் என வரலாறு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் இளமையும், அழகும் கொண்டவர். ஒரு கையில் சிறு ஆயுதமும், மறுகையில் தாமரைப்பூவையும் வைத்துள்ளார். அவரது தேர் அழகானது. அதில் பத்து அழகிய வெண்குதிரைகள் பூட்டியிருக்கும். இரவு வேளையில் வானவீதில் தேரில் செல்லுவார். மனிதர்களையும், விலங்குகளையும் பல்வேறு உயிரினங்களையும் பாதுகாக்கவே அவர் அவ்வாறு செல்வதாகக் கதைகள் கூறுகின்றன. சிறப்பாக எல்லா முயல்களும் அவர் பாதுகாப்பில் உள்ளனவாம். படத்தில் உள்ள சந்திரனின் சிலை பிரித்தானிய அரும்பொருட்காட்சியறையில் உள்ளது. சந்திரனைப் பற்றிய கதைகளைப் பின்னர் பார்ப்போம்.

## புதன் (மேக்கியூரி)

புதன் (மேக்கியுரி) கிரகங்களின் சாம்ராச்சிய இராசதானியின் அமைச்சரவையில் உரிமையுள்ள வாரிசு எனப்படும். தன்னோடு சேர்ந்திருக்கும் கிரகங்களின் இயல்புகளைத் தன்வசப்படுத்தும் வல்லமையுள்ளது. மேக்குரி வைசிய குலத்தைச் சார்ந்ததாகக் கொள்வர். மேக்குரியின் அடையாளமாக ஒரு வளையத்தில் கௌரவச் சின்னமும், அதில் சிலுவையும் இருக்கும். தெய்வத்தன்மை வாய்ந்த வளையத்தில் உள்ள சின்னம் ஒழுக்கமின்மையைக் காட்டும். எனினும் சிலுவை மாறான வழிகளில் சக்தியை விரையமாக்குவதற்கு எதிரான தன்மையைப் பிரதிபலிக்கிறது.



பண்டைய கிரேக்கப் பயணிகளும், வியாபாரிகளும் புதனை தமது ஆசிரியனாகக் கருதினார்கள். எங்காவது, அவசரமாகப் போக வேண்டுமாயின் புதனிடம் கற்றுக்கொள்ளலாம். வியாபாரிகள் தமது பண்டங்களை அவசரமாக எடுத்துச் சென்று விற்கவேண்டும். விரைவாக எடுத்துச் சென்றால் விரைவாக விற்கலாம். பணமும் சேரும். புதன் வர்த்தகர்களின் ஆதரவாளனாகவும் விளங்கியது. புதனைப் பார்ப்பது கஸ்டம். சூரியனுக்கு மிக அண்மையில் உள்ளதால் சூரியஒளி பார்ப்பதற்கு இடையூறாக இருக்கும். சிலநேரங்களில் காலையில் சூரியனுடன் தோன்றி மறைந்துவிடும். சிலநேரங்களில் மாலையில் தொடுவானத்தில் சூரியன் மறையும்போது பிரகாசமான நட்சத்திரம் போல் தென்படும்.



ரோமர்கள் புதனைக் 'கடவுளரின் தூதன்" என வர்ணித்தார்கள். மேக்குரி என்பது இக்கருத்தைத் தெளிவு படுத்துகிறது. மேக்கியூரி பிரயாணத்துக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரத்துக்கும், விளையாட்டு, கதை சொல்லல், அத்துடன் விலங்கினங்களினதும் கடவுள் என்பார். மாடு, ஆடு, போன்ற விலங்குகள்தான் செல்வங்களாகக் கருதப்பட்டன. புதன் சிறப்பாக தானிய வியாபாரத்துதின் கடவுளாகும். மேக்கியூரிக் கடவுளின் கோயில் கி.மு 495 ரோமாபுரியில் அவன்ரைன் மலைக்கும் பலரைன் மலைக்கும் இடையில் கட்டப்பட்டது. இந்த இடம் வியாபாரத்துக்கு முக்கிய நிலையமாக விளங்கியது. ரோமசாம்ராச்சியத்தில் ஆண்டுதோறும் மே 15 ல் மேக்கியூரிக் கடவுளுக்குப் பெருவிழா எடுக்கப்பட்டது. அந்த விழாவினை மேக்குறெலியா என அழைத்தார்கள். வணிகர்கள் கோயிலின் அருகிருந்த புனித கிணற்றில் இருந்து தண்ணீரைக் குடங்களில் ஏந்தித் தங்கள் தலைகளில் சுமந்துவந்து



மேக்கியூரிக் கடவுளின் தலையில் சொரிவார்கள். முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த ரோமாபுரி எழுத்தாளரான ரசிரஸ் (**Tacitus**) ஜேர்மனியரின் கடவுளான வோரனும், ரோமரின் மேக்கியூரிக் கடவுளும் ஒருவரே என்றார். மேக்கியூரி சில இடங்களில் மூன்று முகங்கள் உள்ளவராக வர்ணிக்கப்படுகிறார். பிரித்தானியாவிலும் மேக்கியூரி கண்டுபிடிப்புக்களினதும் கலைகளினதும் கடவுள் எனப் போற்றப்படுகிறது. சோதிடக்கலையில் முக்கிய இடத்தினையும் வகிக்கிறது. கிரேக்கர்கள் ஹேமிஸ் என் அழைத்தார்கள்.

சிந்தனைக்கும், கற்பனைக்கும் கலைகளுக்கும் கடவுளாக போற்றப்படுபவர். அதனால் கிரேக்கர்கள் புதனைக் ஹேமிஸ் என அழைத்தார்கள். புதன் அழகிய கிரீடத்துடன், பறக்கும் சிறகுகளுடன் உள்ளவராகக் கிரேக்கர்கள் உருவகித்தனர். மேக்கியூரியின் ஒருபுறம் ஆடும், மறுபுறம் சேவலும் காணப்படுவதைப் படம் காட்டுகிறது.

ஜுபிற்றர் என்ற சீயஸ் கடவுளுக்கும், லரோனாவுக்கும் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. மூத்தது ஆண். அதற்கு அப்பலோ என்று பெயர் சூட்டினார்கள். இளையது பெண்குழந்தை. அதற்குத் தயானா எனப்பெயர் சூட்டினார்கள். கிரேக்கர்களின் பெண்கடவுளான அர்த்தமீஸ் சந்திரக்கடவுளாகும். அர்த்தமீஸ்தான் ரோமர்களின் தயானா எனக் கொண்டனர். கிரேக்க புராணங்களில் அர்த்தமீஸ் அப்பலோவின் தங்கையாவார். அதேவேளை அர்த்தமீஸ் வேட்டைக்குரிய பெண்கடவுளுமாவார். தாயும் தந்தையும் சீயஸும் லரோனாவும் ஆவார்கள். தயானாவுக்கு கப்புவா என்ற தேசத்தில் கோயில் உண்டு. அதேபோல் ஆபிரிக்காவிலும் கோயில்கள் உண்டு. சந்திர வணக்கம் இன்றும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி (வீனஸ்)



பபிலோனியர்கள் வெள்ளியை 'இஸ்தர்' என அழைத்தார்கள். கிரேக்க புராணத்தில் அழகுக் கடவுளாக வீனஸ் என்று அழக்கப்படுகிறது. வெண்ணிறக் குதிரைகள் பூட்டிய வெள்ளி ரதத்திலேறி அழகிய வீனஸ் தேவதை வானில் பவனி வருவதாக கிரேக்க புராணம் கூறுகிறது. வீனஸ், கிரகங்களின் சாம்ராச்சியத்தின் இராசதானியில் அமைச்சரவையில் முக்கிய அமைச்சராவார். பிராமண குலத்தைச் சேர்ந்த மேக்குரியின் அடையாளம் ஒருவளையத்தில் சிலுவை கீழ்நோக்கித் தொங்கும். தெய்வீகச் சக்தி நுழையும்போது சரி, பிழை, சமன் செய்து இணைப்பதைப் பிரதிபலிக்கும். வீனஸ் அழகான கண்களும் சுருள்முடியுடன் மஞ்சளும் பச்சையும் கலந்த உடையுடன் அழகாகக் காட்சி தரும் எனக் கூறுவார்கள். ரோமர்களும் வீனஸை காதல் கடவுள் என அழைப்பார்கள். வீனஸின் கோயில் ரோமாபுரியில் கி.மு 2000 ஆண்டில் கட்டப்பட்டது. கி.மு 46ல் ஜூலியஸ் சீசரால் வீனஸ் கடவுளுக்கு புதிதாகக் கோயில் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது. ஜூலியஸ் சீசர் வீனஸ் வழிவந்த இராச வம்சத்தைச் சார்ந்தவர் எனவும் கருதப்படுகிறது. இவர்களின் வழிவந்த ஒகஸ்ரஸ், நீரோ ஆகியோர் வீனஸ் பரம்பரையைச் சேர்ந்தவர்களாக கூறப்படுகிறது. வீனஸை இந்தியச்சோதிடம் சுக்கிரன் என அழைக்கிறது. சுக்கிரனின் சிலை படத்தில் உள்ளது. வீனஸ், ரோமர்களின் அக்கினிக்கடவுளான "வள்கனை"த் திருமணம் செய்தார். அவர்களது மகன்தான் குப்பிற் எனும் மன்மதன் ஆவார். கிரேக்கர்கள் குப்பிற்றை இறோஸ் என அழைப்பார்கள்.



வட அவுஸ்திரேலியாவில் ஆதிவாசிகளான ஜொலுங்கு இன மக்கள் வாழ்கிறார்கள். வீனஸை தமது குடும்ப உறவினர்களோடு தொடர்பு படுத்தும் கடவுளாக வணங்குகின்றார்கள். சூரியன் மறைந்தபின் அதிகாலையில் வீனஸின் உதயத்தின்போது ஒன்று கூடுவார்கள். வீனஸ் உதயங்கொள்ளும்போது நீளமான ஒளிகற்றைக் கோடு பின்னால் தெரியும். அக்கோடு பூமிக்கும் வீனஸுக்கும் தொடர்பினை ஏற்படுத்துவதாக நம்புகிறார்கள். அந்த ஒளிக்கோட்டின் மூலம் இறந்துபோன தங்கள் உறவினர்களின் ஆத்மாக்களுக்குச் செய்தி அனுப்புகின்றனர். "நாங்கள் இன்னும் உங்களை மறக்காது அன்பு காட்டுகிறோம்" என்று பிரார்த்தனை செய்வார்கள். அச்செய்தி இறந்த தமது உறவினர்களுக்குப் போய்ச்சேரும் என்பது அவர்களது நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயா எனும் பூமித் தாய்



கிரேக்கர்கள் பூமியை காயா என அழைத்தார்கள். பிரபஞ்சத்தின் தாய் என வணங்கினார்கள். முதல் இனமான கடவுளர்களையும் மனிதர்களையும் பெற்றெடுத்ததாக நம்பினார்கள். காயாவில் இருந்து வானக் கடவுளான ஜுரேனஸும் நட்சத்திரங்களும் தோன்றின. கடலும், மலைகளும், சமவெளிகளும், நதிகளும் பூமியில் தோன்றின. காயாதான் பெருங்கடவுள் எனப்போற்றினார்கள். உயிரினங்களின் தாய் பூமிதான்.



இந்துக்களும் பூமாதேவி, லோகமாதா எனப்பூமியைப் போற்றுகின்றனர். காயா உலகில் உள்ள உயிரினங்களுக்கு வேண்டிய உணவு, உறைவிடம், பாதுகாப்பு அனைத்தையும் வழங்கிக் காக்கிறது. பூமியைச்சுற்றி வளிமண்டலம் சூழ்ந்துள்ளது. அதனை வாயுபகவான் என இந்துக்கள் போற்றினர். தண்ணீர்க் கடவுள் வருணபகவான். அவர் கடலையும், மழையையும் தருபவர் என்றனர். பொறுமையின் இருப்பிடம் பூமிதான். பூமிதான் உயிரினங்களுக்கு உணவையளிக்கிறது. சூரியனில் இருந்து சக்தியைப் பெற்று தனது குழந்தைகளான அனைத்துக்கும் ஆதரவளிக்கிறது. இராமாயணத்தில் சீதையின் இறுதிவேண்டுகோளை நிறைவுசெய்ய நிலம் பிளந்து அவளை பூமித்தாய் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.
செவ்வாய் (மார்ஸ்)

செவ்வாய் பிரகாசமான செம்மஞ்சள் நிறத்தையுடைய கோளாகும். செவ்வாயின் நிறம் எரியும் நெருப்புத்தணலின் நிறத்தை ஒத்தது. மக்கள் செவ்வாய் கிரகத்தைக் கண்டு பயந்தார்கள். கிரகங்களை மனிதர்கள் வல்லமையுள்ள கடவுளராக ஏற்றனர். மனித உருவங்களாக உருவகித்தே வணங்கினார்கள். சேனைத்தலைவர்கள் செவ்வாயைத் தமது ஆதரவாளனாகக் கருதி வணங்கினார்கள். எதிரியை வெற்றி கொள்ள செவ்வாய் உதவும் என நம்பினார்கள். ரோமானியரின் போர்க் கடவுளாகச் செவ்வாய் விளங்குகிறது. செவ்வாய், கிரகங்களின் இராசதானியின் அமைச்சரவையில் கட்டளை அதிகாரியாவார். தர்மசீலரும், தீயைப்போல் சுடுகின்ற சத்திரியராகவும் உள்ளார். அதன் அடையாளமாக ஒரு வளையம் இருக்கும். அதிலிருந்து அம்பு குறிபார்த்தபடி இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளையம் மறுபிறவியாசையையும். அம்பு அதனைத் தகர்த்தெறிவதையும் பிரதிபலிக்கிறது என்பர். செவ்வாய் செயல்திறன் மிக்க கிரகமாகும். செவ்வாய் குறுகிய தோற்றமும் சிவந்திருக்கும் கண்களையும் உடையது. உறுதியான உடலில் சிவப்புநிற உடையணிந்து பிரகாசமாக இருக்கும்.

## வியாழன் (ஜூபிற்றர்)



கிரகங்களின் இராச்சியத்தின் அமைச்சரவையில் பிரமாவும் குருவும் ஜுபிற்றர் தான். ஜுபிற்றர் பயன்தரக்கூடிய சாத்வீகமானதும், தீயைப்போல் சுடுகின்ற தன்மையையும் கொண்டுள்ளது. ஜுபிற்றரின் அடையாளம் சிலுவையில் ஒரு அரைவட்டம் கொண்ட வடிவாகும். சிலுவையின் சமாந்தரக் கோடு இதனை பிரதிபலிக்கிறது. சிலுவை வலமும், இடமும் சந்திக்கின்றமையே இதன் பிரதிபலிப்பாகும். இந்த அடையாளம் ஆன்மீகமும் சடப்பொருட்களும் கொண்டுள்ள தொடர்பினைக் காட்டுகிறது.

ஜுபிற்றரின் கண்கள் சிவந்திருக்கும். வேதாந்தத்தைக் கற்றவர். அவரது தொனி சிங்கத்தின் தொனியையொத்தது. சாத்வீகத்தில் உறுதிமிக்கவர். ஜுபிற்றரின் உடல் சுத்தமான மஞ்சள் உலோகத்தன்மை வாய்ந்தது. அத்துடன் அகன்ற பிரசித்தமான நெஞ்சையும் உடையவராகக் கருதுவார்கள். ஜுபிற்றர் அதிர்ஸ்டத்தையும், உடல்நலத்தையும், சந்தோசத்தையும், செல்வத்தையும் அறிவையும் கொடுக்கும் கிரகமாகும்.



இத்தாலியர்கள் வியாழனைச் சொர்க்கத்தின் கடவுள் என்று அழைப்பார்கள். மழையையும் தருபவர் என்றும் அவரைப் போற்றுவார்கள். வியாழனை "ஜுபிற்ரர் புளவியஸ்" என்றும் அழைப்பார்கள். இரவையும், பகலையும், பனியையும். காற்றையும், கருமுகிலை இணைத்து மழையையும் தருபவர் என்பர். கோபம்கொண்டு இடிமுழக்கத்தையும் ஏற்படுத்துவாராம்.
ரோமர்களின் முதன்மையான கடவுளாக ஜுபிற்றர் விளங்குகிறார். ஜுபிற்றர் கடவுளர்களின் அரசன். வானத்தினதும், இடிமுழக்கம் ஆகியவற்றின் கடவுளாவார். ரோமாபுரியில் ஜுபிற்றருக்கான கோயில் கி.மு.509 செப்தெம்பர் மாதம் கட்டப்பட்டது. ஜுபிற்றரும் தோரும் ஒருவர்தான். இருவரும் ஒரேயளவு சக்தியை உடைய கடவுளர். "தேர்ஸ்டே" என்பது பழைய ஆங்கிலப்பதமாகும். அதன்பொருள் தோரின் நாள் என்பதாகும். அதிலிருந்துதான் தேர்ஸ்டே வந்ததாம். அதனை தமிழில் வியாழன் என அழைக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனி (சற்ரேன்)



கிரகங்களின் இராச்சிய அமைச்சரவையில் சனி சேவகனாக இருக்கும். சனி தர்மசீலராகவும். குளிர்ச்சியுடையவராகவும். சூத்திர குலத்தவராகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. சனியின் அடையாளமாக ஒரு வளையத்தில் இரு அரைவட்டங்கள் கீழ் நோக்கித் தொங்கும். அது பொருட்களுக்கும், ஆன்மீகத்துக்கும் இடையிலுள்ள தொடர்பை வலியுறுத்துகிறது. சனி ஒரு கதை காவி. சிவந்து உட்குவிந்த கண்களுடன் நரம்புகள் வெளித் தோன்ற கருமேனியுடன் இருக்கும்.



ஆதிகாலத்தில் இருந்தே ரோமர் சற்றேனை (சனி) விவசாயத்துக்கும், அதனோடு தொடர்புடைய செல்வத்துக்கும் காரணகர்த்தாவாக ரோமர் போற்றினார்கள். சனிதான் விவசாயத்தைத் தோற்றுவித்தவர். அவரது அடையாளமாக தாழ்கத்தி ( அறுவடைக்கத்தி) இருக்கும். ரோமாபுரியில் குளிர்காலத்தில் சிறப்பாக டிசம்பர் 17 தொடக்கம் ஏழு நாட்களுக்கு "சற்றனிலா" என்னும் விழா நடைபெறும். அக்காலத்தில் பல்வேறு களியாட்டங்கள் நடைபெறும். அக்காலத்தில் எஜமான்கள் அடிமைகளுக்கு உணவு பரிமாறுவார்கள். ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு உபசாரங்கள் செய்து சற்ரேன் கடவுளுக்குப் பலியிடுவார்கள். கிறிஸ்மஸ் என்னும் நத்தார் விழாவுக்கு சற்றேனிலாவே வழிகாட்டி என்பார்களும் உண்டு. சற்றேனில் இருந்தே "சற்றடே" என்ற சனிக்கிழமை வந்தது. கிரேக்கர்கள் காலக்கடவுள் எனச் சனியைப் போற்றுவர். சற்றேன் நல்ல அனுபவசாலி. அவர் நீண்டதாடியுடன் தேரில் பவனிவருவார் எனக் கிரேக்கர்கள் நம்பினார்கள். உலகநாடுகள் சனியை கடவுளாக வணங்கி வருகின்றன. காலக்கடவுள் கையில் தாழ்க்கத்தியுடன் பவனி வருவதை கிரேக்கர்களின் படம் காட்டுகிறது.






இந்து சமயப் புராணக்கதைகளில் சனிக்கு முக்கிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. சனியின் வாகனமாகக் காகம் விளங்குகிறது. "காகமேறும் தம்பிரானே" எனச் சனியைப் போற்றிப் பாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனியினது தந்தை சூரியன். தாய் சாயா. அதனால் சாயாபுத்திரன் என்ற பெயரும் சனிக்கு உண்டு. சனி குழந்தையாகப் பிறந்தவுடன் கண்விழித்தது. அதே நேரம் சூரியன் கிரகணத்தில் சிக்கிக் கொண்டது. சனி இயமனின் மைத்துனனும் ஆவார். சனி புகழ்பெற்ற ஆசிரியருமாவார்.



சனி ஏமாற்றுபவர்களுக்கும், துரோகம் செய்பவர்களுக்கும் எதிரியாவார். சனி தொல்லை கொடுப்பவராக விளங்குகிறார். அதே நேரம் அதிர்ஸ்டத்தையும் கொடுப்பார். என இந்துக்களின் இதிகாச புராணங்கள் கூறுகின்றன. கறுத்தநிற உடையில் இருப்பார். வில், அம்பு, வாள், கத்தி ஆகிய ஆயுதங்கள் வைத்திருப்பார். அவருடைய முகம் அழகானது. காகத்தில் பவனிவரும் காட்சி அற்புதமானது எனப் புராணங்கள் கூறுகின்றன.

நளன் சனியின் பார்வையில் சிக்கி நாடுநகரிழந்து அல்லலுற்றதாகப் புராணம் கூறுகிறது. அரிச்சந்திர புராணமும் சனியின் திருவிளையாடல் பற்றிக் கூறுகிறது. சனிபகவான் என்று சனிக்குக் கோயில் கட்டிக் கும்பிடுவோர் கீழைத்தேச நாடுகளில் ஏராளம் உண்டு. இந்தியாவில் மும்பையில் டியோனர் என்ற இடத்தில் அழகான சனீஸ்வரர் கோயில் உள்ளது. இலங்கையில் திருகோணமலையில் சனிபகவானுக்குக் கோயில் உண்டு. பக்தர்கள் சனிக்கிழமை நாட்களில் விரதமிருந்து எள்ளெண்ணெய் எரித்து வணங்குவார்கள்.

## யுரேனஸ்





யுரேனஸ் வானமெனும் சொர்க்கத்தின் கடவுளாவார். யுரேனஸை காயா உருவாக்கினாள். பின்னர் யுரேனஸ் காயாவின் கணவரானார். அவர்களுக்குப் பன்னிரெண்டு குழந்தைகள் இருந்தனர். ஆறுபேர் ஆண்களாவர். ஆறுபேர் பெண்களாவர். ஆண்கள் ஒற்றைக் கண்களோடு பிறந்து உலாவந்தனர். யுரேனஸ் அவர்களைப் பாதாள உலகத்தில் பூட்டி வைத்தார். காயா வெறுப்புற்றாள். ஆயுதம் ஒன்றைச் செய்து குறோனஸ் (சற்றேன்) என்ற மகனிடம் கொடுத்து தந்தையாகிய யுரேனஸைக் கொலை செய்வித்தாள் எனக்கதைகள் கூறுகின்றன. யுரேனஸ் சனியின் தந்தையும், ஜூபிற்றரின் தாத்தாவும் ஆவார் எனக் கிரேக்கர்கள் நம்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெப்ரியூன்



கிரேக்க புராணங்களின்படி குரோனோஸ் (சனி எனும் சற்ரேன்) நெப்ரியூனையும், அவரது சகோதரர்களான ஜூபிற்றர், புளூட்டோ ஆகியோரைத் தோல்வியுறச் செய்தார். பின் உலகத்தை மூன்று பகுதிகளாக்கினார். நெப்ரியூன் கடலுக்கு அரசனாகினார். ஜூபிற்றர் வானத்தின் கடவுளானார். புளூட்டோ பாதள உலகத்துக்குக் கடவுளானார். நெப்டியூன் ரோமர்களின் கடல் கடவுளாகக் கொள்ளப் படுகிறது. தண்ணீர்க்கடவுள் என ரோமர்கள் கொண்டாடினர். நெப்ரியூன் கிரகத்தின் நீலநிற வாயுமேகம் மிகப்பழங்கால வானியல் ஆய்வாரள்களுக்குக் கடலின் தோற்றத்தைக் காட்டியதால் நெப்ரியூனைக் கடலின் கடவுளாகக் கொண்டனர். குதிரையோட்டத்திற்கான கடவுள் என ரோமானியர் போற்றினர்.

நெப்ரியூனுக்கு இரண்டு கோயில்கள் ரோமாபுரியில் கட்டப்பட்டன. ஒன்று கி.மு.25ல் கட்டப்பட்டது. நெப்ரியூனுக்கு ஜூலை 23ம் திகதி விழா எடுக்கப்படும். அந்த விழாவை "நெப்ரியூனலா" என அழைப்பார்கள். நெப்ரியூனேலியா விழாவின் போது கோயிலைச் சூழ மரக்கிளைகளினால் பந்தல்களும், கொட்டில்களும் அமைத்து, மக்கள் குழுமிக் கொண்டாடுவார்கள். கடற்படையின் வெற்றியினையும் சேர்த்துக் கொண்டாடுவார்கள். கடற்படையினரின் பயிற்சியின் பின்னர் "மத்தியகோட்டைக்கடத்தல்" எனும் நிகழ்ச்சி நடைபெறும். உரியபயிற்சியினைப் பெற்று வெற்றிபெற்று அதற்கான பட்டத்தைப் பெறவேண்டும். பட்டம் பெறாதவர்கள் நெப்ரியூன் கடவுளின் முன்தோன்றி விளக்கமளிக்கவேண்டும். நெப்ரியூன் கடவுள் தனது மனைவி "அம்பிற்றைற்" உடன்வர, முக்கிய பிரதானிகளுடன் சமுகம் கொடுப்பார். மாலுமிகள் விபரத்தை அவர்முன் சமர்ப்பிப்பார்கள். அவர் அவற்றை அறிந்து அவர்களுக்கு "நெப்ரியூன் புதல்வர்கள்" எனும் பட்டத்தை வழங்குவார்.

நெப்ரியூனைப்பற்றிச் சுவையான கதைகள் பலவுண்டு அதிலொன்று அவரது திருமணம் பற்றியது

நெப்ரியூன் அம்பிறைற்றைக் கண்டதும் காதல் வசமானார். ஆனால் அம்பிறைற் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நெப்ரியூன் தளர்ந்து விடவில்லை. டொல்பினைத் தூதனுப்பினார். டொல்பின் அம்பிறைற்றின் மனதை வசப்படுத்தி நெப்ரியூனின் காதலை ஏற்க வைத்தது. அவர்களுக்குத் திருமணம் நடந்தது. நெப்ரியூன் டொல்பினை நட்சத்திரமாக்கி வானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசிக்க உதவினார் டொல்பின் இன்றும் வானில் நட்சத்திரமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது

## புளூட்டோ



கிரேக்கர்களின் புராணத்தில் ஹேடஸ் என்ற கடவுளரை புளூட்டோ என அழைத்தார்கள். ரோமர்கள் புளூட்டோவை பாதாள உலகத்தின் கடவுளாக போற்றுகிறார்கள். இறந்தவர்களின் உலகத்தின் கடவுளாக புளூட்டோ விளங்குகிறது. சோதிடத்தில் அதன் அடையாளமாகப் படத்தில் காட்டியவாறு உள்ளது. புளூட்டோவை ஹேடஸ் என்றும் அழைப்பார்கள். ஹேடஸ் பாதாள உலகத்தின் கடவுளாவார். ஒருநாள் குப்பிற் என்ற மன்மதனும் ரதி என்ற வீனஸும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களது அம்புகளில் ஒன்று நேராகச் சென்று ஹேடஸைத் தாக்கியது. அவர் மயங்கினார். சற்று நேரத்தில் கண்களைத் திறந்தார். அவரது முதற்பார்வை "பேசர்பீன்ஸ்" மீது விழுந்தது. "பேசர்பீன்ஸ் மீது ஹேடஸ் காதல் கொண்டார். பேசர்பீன்ஸ் ஹேடஸின் மனைவியானார். கிரேக்கர்களின் பாதாள உலகத்தின் பெண்கடவுளானார். பேசர்பீன்ஸின் தாய் காயா தனது மகளை மீட்டுத்தருமாறு சீயஸ் கடவுளரிடம் வேண்டினார். ஆனால் பேசர்பீன்ஸினால் வரமுடியவில்லை. பாதள உலகத்தில் உள்ள உணவினை உண்டுவிட்டாள். அதனால் அவளால் வெளிவரமுடியவில்லை.



பாதாள உலகத்திலேயே அடைபட்டுக் கிடந்தாள். சீயஸ் கடவுள் ஹேடஸ்-க்கும், காயாவுக்கும் இடையில் சமரசம் பேசினார். அதனால் ஒரு உடன்படிக்கை கைச்சாத்தாகியது. அதாவது தாவரங்கள் இலையுதிர்த்துப் பூக்கள் மலரத் தொடங்கும் ஒவ்வொரு வசந்த காலத்திலும், பூமிக்குத் திரும்புவாள். குளிர்காலம் தொடங்கியதும் மீண்டும் பாதாள உலகம் சென்று ஹேடஸோடு சேர்ந்து விடுவாள். இதுதான் அந்த உடன்படிக்கை. எவ்வாறு இறந்தவர்கள் ஹேடஸிடம் பாதாள உலகம் செல்வார்கள் என உங்களுக்கு வியப்பாக இருக்கும் அல்லவா? இறந்தவர்களை மேக்குயூரி பாதுகாப்பாக ஸ்ரிக்ஸ் நதியைக் கடந்து செல்ல படகுகளில் ஏற்றிப் பாதுகாப்பாக ஹேடஸ் இராச்சியத்துக்கு வழியனுப்பி வைப்பார் என்பதை கிரேக்க புராணம் விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிக் கூட்டங்கள்

இரவில் வானம் தெளிவாக இருக்கும்போது வானைப் பாருங்கள். உங்கள் கைகளில் தாளும் பேனாவும் இருக்கவேண்டும். நட்சத்திரங்கள் வானில் பிரகாசிக்கும். உங்களது கைகளில் தொலைநோக்கி இருந்தால் நல்லது. அதனூடாகப் பாருங்கள். நட்சத்திரங்களைப் பார்த்துத் தாளில் புள்ளியிடுங்கள். புள்ளிகளைத் தொடுத்துக் கோடுகளை இணைத்து வரையுங்கள். உருவங்கள் வெளிவரும். ஒவ்வொன்றும் வினோதமானவைகளாகத் தெரியும். மனிதரும், மிருகங்களும், பிராணிகளும், பொருட்களுமாக இருக்கும் இப்படித்தான் நமது முன்னோர்கள் வரைந்து கண்டறிந்தார்கள்.

ஆதிகால மக்கள் மிகவும் சிந்தனை மிக்கவர்கள். பால்வெளியை ஆராய்ந்தார்கள். நட்சத்திரங்களின் போக்கையும், அவற்றின் பிரகாசங்களையும், கவனித்தார்கள். அவற்றைப் படங்களாக வரைந்தார்கள். தொலைநோக்கிகளை வடிவமைத்தார்கள். சூரியனை மையமாகவைத்துப் பார்த்தார்கள். அதனைச் சூழ்ந்து நீள்வட்டப் பாதையில் பயணிக்கும் கிரகங்களையும் அவதானித்தார்கள். சூரியனைச் சூழ்ந்து வலம்வரும் நட்சத்திரக் கூட்டங்களையும் கவனித்தார்கள். பால்வெளியைக் கவனித்தார்கள். சுற்றியுள்ள நட்சத்திரக் கூட்டங்களை மிக உன்னிப்பாகக் கவனித்தார்கள். அவை கூட்டங் கூட்டமாக இருந்தன. கூட்டமாய் உள்ளவற்றை இணைத்து உருவங்களை வரைந்தார்கள். இவ்வாறான பல உருவங்களையும் இணைத்து உருவங்களை வரைந்தார்கள். அத்துடன் அவை வட்டமாக அமைந்திருப்பதையும் கண்டார்கள். அவர்களுக்குப் பரீட்சையமான உருவங்களையே வரைந்தார்கள்.

ஒவ்வொரு உருவமும் ஒரு ஒழுங்கான தூரத்தில் இருப்பதையும் கணக்கிட்டார்கள். பன்னிரண்டு உருவங்கள் உருவாகின. ஒரு வட்டம் 360 பாகையினைக் கொண்டது. ஒரு உருவத்துக்கும் மற்றைய உருவத்துக்கும் இடைவெளி முப்பது பாகையாக இருந்தது. பன்னிரண்டு உருவங்களையும் ராசிகளாகக் கொண்டார்கள். அவற்றுக்குப் பெயரிட்டார்கள். உருவ அடையாளங்களையும் வரைந்தார்கள். ஒரு ராசியில் பில்லியன் கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றுள்ளும் சிறு உருவங்கள் உள்ளன. அவற்றுக்கும் பெயரிட்டு அழைத்தார்கள். கதைகளை உருவாக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Aries – The Ram | மேடம் | ஆடு | ஏப்பிரல் - மே |
| Taurus- Bull | ரிசபம் | காளை | மே – ஜூன் |
| Gemini- Twins | மிதுனம் | இரட்டையர் | ஜூன் -- ஜூலை |
| Cancer- Crab | கடகம் | நண்டு | ஜூலை – ஓகஸ்ற் |
| Leo - Lion | சிம்மம் | சிங்கம் | ஓகஸ்ற் - செப்தம்பர் |
| Virgo- Maiden | கன்னி | கன்னி | செப்தம்பர் - ஒக்ரோபர் |
| Libra -Scale | துலாம் | தராசு | ஒக்ரோபர் - நவம்பர் |
| Scorpio - Scorpion | விருச்சிகம். | தேள் | நவம்பர் - டிசம்பர் |
| Sagittarius-Archer | தனுசு | அம்புவில் | டிசம்பர் - ஜனவரி |
| Capricorn- The Sea-goat | மகரம் | கடல் ஆடு | ஜனவரி – பெப்ருவரி |
| Aquarius -The Pitcher | கும்பம் | குடம் | பெப்ருவரி – மார்ச் |
| Pisces -The Fish | மீனம் | மீன் | மார்ச் - ஏப்பிரல் |

அட்டவணையைப் பாருங்கள். பார்த்து ராசிகளின் பெயர்களை வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

## நம்முன்னோர் கண்டறிந்த ராசிகளின் உருவங்கள்

பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் மரங்களில் கடைந்தெடுத்த ராசிகளின் உருவங்களைக் கவனியுங்கள். உலகத்து மக்கள் கண்டறிந்த ராசிகளின் உருவங்கள் ஏறக்குறைய ஒத்திருந்தன. மொழி மட்டும் வித்தியாசமாக இருக்கும். உதாரணமாக ஏரியஸ் என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். அதனையே தமிழில் மேடம் என அழைக்கிறோம். கீழ் தரப்பட்டுள்ள பலவகையான படங்களையும் அவதானியுங்கள்.

பதினாறாம் நூற்றாண்டில் ஐரொப்பியர் மரங்களிலிருந்து கடைந்தெடுத்த ராசிகளின் உருவங்கள்.

அந்த உருவங்களை வைத்துப் பல அரிய கதைகளைப் புனைந்தார்கள். அவை உலகப் புகழ்பெற்ற கதைகளாக உள்ளன. அவை நாட்டுக்கு நாடு வித்தியாசமாக அமைந்தன. மேலுள்ள அட்டவணை ராசிகளின் பெயர்களைக் காட்டுகிறது. இராசிகளின் அடையாளங்களையும் காட்டுகிறது. அத்துடன் காலத்தையும் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது கணிப்பின்படி மேடம் என்னும் (ஆடு) ராசிதான் முதலில் உள்ளது. அதனையே வருடத்தின் முதலாம் பருவமாகக் கொண்டார்கள். இந்துக்களின் வருடப்பிறப்பு இந்தக்காலத்தில்தான் உருவாகிறது. தமிழ் - சிங்களப் புத்தாண்டும் இக்காலத்தில்தான் பிறக்கிறது. மேலே காணும் அட்டவணை இதனைப் புலப்படுத்தும் என நினைக்கிறேன். நம்முன்னோர்கள் எவ்வளவு புத்திசாலிகள் என வியக்கிறோம் அல்லவா?




சோதிடக்கலை நிபுணர்கள் இவ்வரைபடத்தை உருவாக்கியுள்ளனர். சூரியக்குடும்பம் வட்டத்தின் உள்ளே உள்ளன. அவற்றைச் சுற்றி ராசிகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புவி தன்னைத்தானே சுற்றிச் சூரியனையும் வலம் வருகிறது. அப்போது ஒவ்வொரு முப்பது பாகை இடைவெளியில் உள்ள ராசிக் கூட்டங்களைக் கடந்து செல்லும். உதாரணமாக ஏப்பிரல் - மே மாதங்களில் (ஏரியஸ்) மேடராசிக்குள் புவியின் பயணம் இருக்கும். மே ஜுன் மாதங்களில் (ராறஸ்) ரிசபராசிக்குள் பயணம் செய்யும். ராசிகளின் ஆதர்சண சக்தி புவியில் தாக்கத்தினை விளைவிக்கும். இதனைச் சோதிடர்கள் கணக்கிட்டுக் கூறுவார்கள். கிரகங்களினதும், ராசிகளினதும் சண சக்தி அலைவடிவங்களாக விண்ணில் பரவுகின்றன. இதனை விஞ்ஞானிகள் ஏற்றுள்ளனர். ஒருவருக்கு நிகழும் ஒரு சம்பவம் அல்லது ஒரு நிகழ்வை


சூரியன், நட்சத்திரங்கள். கிரகங்களின் நிலையங்களைக் கொண்டு கணிப்பிடுகிறார்கள். சோதிடர்கள் ஒருவரின் ஆளுமை, எதிர்காலம் ஆகியவற்றை சூரியன், நட்சத்திரங்கள். கிரகங்கள் இருக்கும் நிலையங்களை தீர்மானிக்கின்றன எனக்கூறுகிறார்கள். ஆனால் விஞ்ஞானம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. கீழே படங்களை அவதானித்துப் பாருங்கள். நட்சத்திரங்களை இணைத்து உருவங்களை வரைந்துள்ள வல்லமையை அறியலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 பாகை வட அகலக்கோட்டில் மாரிகாலத்தில் வானத்தில் ராசிகளின் அற்புதத்தை இப்படம் காட்டுகிறது.


இப்படத்தில் ஹேகுலிஸ், டறகன், சஜிரறஸ் தெளிவாகத் தெரிகிறது. ஸ்கோபியனை கி.மு. 5000 வருடங்களுக்கு முன் பபிலோனிய வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடதுருவத்தை அண்மித்து ராசிகளின் அற்புதத்தை இப்படம் காட்டுகிறது. அன்னம், பெருங்கரடி போன்றவற்றையும், தென் துருவப்பகுதியில், கப்ரிகோனஸ் எனும் மகரம் (கடல் ஆடு) உருவங்களையும் காணலாம். இவை நவீன தொழில் நுட்பக் கருவிகளின் உதவிகளினால் பெறப்பட்ட படங்கள்.

## Zodiac constellation pictures






வானில் நமது பால்வெளியும் ராசிக்கூட்டங்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவற்றை வானில் உள்ள நடசத்திரங்களைப் புள்ளிகளாக் கொண்டு இணைத்து வரைந்துள்ள உருவங்களைக் கீழே பாருங்கள்.





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிகள்

முதலில் ராசிக்கூட்டங்களின் கதைகளைப் பார்ப்போம். ஒவ்வொரு ராசிக்கூட்டத்திலும் லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரங்களுக்கும் கதைகள் உண்டு. அவற்றுள் சிலவற்றின் கதைகளை மட்டும் பார்ப்போம்.

### இராசிகளின் கதைகள்

கிரகங்களுள் பூமியில் மட்டுந்தான் உயிரினங்கள் உள்ளன. ஏனையவற்றில் அதற்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. பூமியின் இயக்கத்துக்குச் சூரியன்தான் மூலகாரணம் என்பதை அறிந்திருந்தனர். அதனால் சூரியனைக் கடவுளாகப் போற்றி வழிபட்டனர். கிரகங்களைத் தங்களது வாழ்வில் ஒளியேற்றும் கடவுள்களாக இன்றுவரை மனிதர்கள் நம்புகிறார்கள். சோதிடக்கலையில் கிரகங்கள் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளன. அதேபோல் இராசிகளும் கொண்டுள்ளன.

சூரியனின் வெப்பக்கதிர்கள்தான் புவியின் இயக்கத்துக்கான மூலாதாரம். அனைத்துக் கிரகங்களும் சூரியனின் இயக்கத்திலேயே தங்கியுள்ளன. சூரியனை மையமாகக் கொண்டு ஏனைய கிரகங்கள் நீள்வட்டப்பாதையில் வலம்வருகின்றன. புவியின் இயக்கத்தில் இராசிகளும் பங்களிப்புச் செய்கின்றன. சந்திரனின் ஈர்ப்பினால் பூமியில் வற்றுப் பெருக்கு உருவாகிறது. புவியில் தோன்றும் நிலநடுக்கம், பூகம்பம் போன்ற தீமைகளுக்கும், வேறு நன்மைகளுக்கும் கிரகங்களும். இராசிகளும் பங்களிப்புச் செய்கின்றன என்பதை விஞ்ஞானிகளும், மெய்ஞானிகளும் கூறுவார்கள்.

புவியில் வாழும் உயிரினங்கள் இவற்றின் ஆதர்ஷண சக்தியால் ஆளப்படுகின்றன. கிரகங்களைப்பற்றி முன்னர் பார்த்தோம். இப்போது இராசிகளினைப் பற்றிப் பார்ப்போம். இவற்றைப்பற்றி நமது முன்னோர்கள் கூறிய கதைகளையும் பார்ப்போம். இவை யாவும் புராண இதிகாசக் கதைகள்தான். இவற்றில் உண்மையும் இருக்கலாம், கற்பனையும் இருக்கலாம். இவற்றினை வரலாறாகக் கொள்ளமுடியாது. ஆனால் மனித வாழ்க்கையில் இவை ஏதோ ஒருவகையில் தொடர்பு பட்டிருப்பதை அவதானிக்கலாம். அதற்கேற்ப ஆதிகால மக்கள் கதைகளைக் கூறிவைத்துள்ளனர். அக்கதைகளுள் தத்துவக் கருத்துக்களைப் பொதிந்துள்ளனர். இவற்றை வெறுமனே கதைகள்தாம் என்று தள்ளிவிடமுடியாது.

பழங்காலக் கிரேக்கர்கள் பன்னிரண்டு இராசிக் கூட்டங்களை இனங்கண்டனர். இவை இரவினில் வானவீதியில் வலம் வருவதை அவதானித்தனர். அத்துடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றும் வருடத்தின் வெவ்வேறு காலங்களில் தோற்றமளிப்பதையும் கண்டனர். இவை ஆகாயம், பூமி, வளி, தீ, நீர் ஆகியவற்றோடு தொடர்பு பட்டிருப்பதையும் அவதானித்தனர். இவை ஒவ்வொன்றும் பல்வேறு கதைகளோடு தொடர்பு படுத்தப் பட்டுள்ளன. கோள்களை மையமாகக் கொண்டு இராசிகள் சூழ்ந்துள்ளன. இந்த இராசிகளை இணைத்துக் கற்பனைக் கோட்டினால் ஒரு வட்டம் வரையப்புட்டுள்ளது. இதனை இராசிகளின் வட்டம்(சோடியக்) என்பார்கள்.

அதனையே வாழ்வியல் வட்டம் என்றும் அழைப்பார்கள். ஒரு இராசியில் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்கள் தொகுதியாகவும், தனித்தும் நின்று பிரகாசிக்கின்றன. நட்சத்திரங்களைத் தொடு கோட்டினால் தொடுத்து உருவங்களை ஆக்கினார்கள். அவற்றை உடுத்தொகுதி என்பார்கள். இவ்வாறு பல உடுத் தொகுதிகள் சேர்ந்ததுதான் ஒரு இராசியாகும். ஒவ்வொரு இராசிக்கும் அவற்றின் வடிவத்துக்கேற்ற பெயர்களை வைத்தார்கள். இவை பெரும்பாலும் உயிரினங்களாகவே உள்ளன. தராசி அல்லது துலா மட்டும் உயிரற்றதாக உள்ளது. பெரும்பாலும் விலங்குகளின் வடிவில் அமைந்தன. ஒன்று தராசி போல் காட்சி தருகிறது. இன்னொன்று அரைமனிதனாகவும், அரைவாசி குதிரையாகவும் காட்சி தருகிறது.

## மேடம் எனப்படும் ஆடு

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Aries – The Ram | மேடம் | ஆடு | ஏப்பிரல் 21 – மே-20 |






கிரேக்கர்கள் பன்னிரெண்டு இராசிகளில் முதலாவதாக ஏரியஸைக் கொண்டார்கள். அதனை மேடம் எனத்தமிழில் அழைப்பார்கள். ஏரியஸ் என்ற மேடம் ஆடுபோன்று தோற்றமளிக்கிறது. இராசிகளின் தொடக்கமாக அல்லது முதல் இராசியாக ஏரியஸ் விளங்குகிறது. மார்ச் 21ல் சூரியன் ஏரியஸ் இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், ஏப்பிரல் 21ல் ஏரியஸினுள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. வசந்தகாலம் இக்காலத்தில்தான் தொடங்குகிறது. ஏரியஸின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். ஏரியஸ் என்ற மேடம் ராசிவட்டத்தில் பிசஸ் - ராறஸ் நடுவில் ஆட்டின் வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. எரியஸ் தான் ராசிவட்டத்தில் முதலாவதாகக் கணிக்கப் படுகிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய ஏப்பிரல் மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (ராம் - **Ram-** ) ஆடு என அழைத்தார்கள்.





தெசாலி நாட்டின் மன்னனுக்கு பிரிசஸ், ஹெல்லி என்ற இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். பிரிசஸ் ஆண். ஹெல்லி பெண். இருவரும் இரட்டையர்கள். இளமையிலேயே தாயை இழந்தார்கள். அவர் மறுமணம் செய்தார். பிள்ளைகள்மேல் அன்பு காட்டவில்லை. அதனால் பிள்ளைகள் சிற்றன்னையின் கொடுமைக்கு உள்ளானார்கள். சிற்றன்னையின் தம்பிகளினால் குழந்தைகளுக்கு ஆபத்துக் காத்திருந்தது. இரண்டு குழந்தைகளையும் காப்பதற்காக சீயஸ் கடவுளின் உதவியை நாடினார். சீயஸ் கடவுள் அழகான கம்பளி ஆட்டினை அனுப்பிவைத்தார். அந்த ஆட்டுக்கு இரண்டு இறக்கைகளும் இருந்தன. பறக்கும் ஆற்றலும் இருந்தது. அவர்களை ஏற்றிக் கொண்டு வேறு நாட்டுக்குச் சென்றது. இடையில் ஒரு ஆறு குறுக்கிட்டது. அந்த ஆற்றைக் கடக்கும் போது ஹெல்லி ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார்.

பிரிசஸ், உயிர்தப்பி வந்தார். ஹெல்லியின் பிரிவால் பிரிசஸ் பெரிதும் வருந்தினார். நாட்கள் நகர்ந்தன. பிரிசஸஸின் கவலைகளும் மெல்ல மெல்ல மறைந்தன. தன்னைக் காப்பாற்றிய கடவுளுக்கு நன்றி செலுத்தினார். அந்தக் கடவுளுக்கு ஆட்டைப் பலியிட்டார். அதன் கம்பளித் தோலை புதரொன்றில் பத்திரப்படுத்தி வைத்தார். அதனைப் பாது காப்பதற்காக பயங்கர விலங்கைக் காவலுக்கு வைத்தார். அந்தத் ஆட்டுத்தோலின் கம்பளி மயிர்கள் தங்கமாக மாறியன. அதன் மகிமை உலகெங்கும் பரவியது. சீயஸ் கடவுள் ஏரியஸை வானத்தில் பிரகாசிக்கும்படி வைத்தார். அது இன்றுவரை பிரகாசிக்கிறது எனக் கிரேக்கக் கதைகள் கூறுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராறஸ் எனும் காளை

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Taurus- Bull | ரிசபம் | காளை | மே 21– ஜூன் 20 |

கிரேக்கர்கள் பன்னிரெண்டு இராசிகளில் இரண்டாவதாக ராறஸைக் கொண்டார்கள். அதனை ரிசபம் எனத்தமிழில் அழைப்பார்கள். ரிசபத்தின் அடையாளமாகக் காளையைக் கொள்வார்கள். ராறஸ் என்ற ரிசபம் காளைபோன்று தோற்றமளிக்கிறது. மே 21ல் சூரியன் ராறஸ் இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், ஜூன் 21ல் ராறஸினுள் பிரவேசிக்கிறது எனக்




கணக்கிட்டுள்ளன. ராறஸின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். ராறஸ் என்ற ரிசபம் ராசிவட்டத்தில் ஏரியஸுக்கும் - ஜெமினி எனும் மிதுனத்துக்கும் நடுவில் காளை வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய மே மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (ராறஸ் - Bull) ரிசபம் - காளை என அழைத்தார்கள். ராறஸ் நவம்பர் தொடக்கம் மார்ச் வரை வானில் தெளிவாத் தெரியும். ராறஸைப் பற்றிய கதைகள் ஏராளம் உண்டு.



## ராறஸின் கதை -1



கிரேட் நாட்டின் மன்னன் மினா. அவன் தனது சகோதரர்களுடன் போரிட்டுத் தன்ராச்சியத்தை மீட்டெடுத்தான். அதனைக் கொண்டாடுமுகமாக கடலுக்கும், பூகம்பத்துக்கும் கடவுளான பொசிடோனைக் கௌரவிக்க எண்ணினான். அதற்காகக் கடலில் இருந்து அழகான காளையொன்றைத் தருமாறு வேண்டினான். பொசிடோனும் சந்தோசத்துடன் அழகான காளையினை அனுப்பி வைத்தார். மினா காளையைக் கண்டதும் மனதை மாற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். இவ்வளவு அழகான காளையை ஏன் பலியிடவேண்டும்.? பதிலாக வேறு ஒருகாளையைப் பலியிட்டுக் கொண்டாடினான்.

பொசிடோன் அவனது செயலைப் புரிந்துகொண்டார். கோபத்தில் சாபமிட்டார். மினாவின் மனைவி குழந்தையொன்றைப் பிரசவித்தாள். அக்குழந்தை காளை முகத்துடனும், மனித உடலுடனும் பிறந்தது. மினா கவலையும் வெட்கமும் அடைந்தான். அது வளர்ந்து இளைஞர்களையும். கன்னியரையும் வேட்டையாடிக் கொன்று தின்றுவந்தது. மக்கள் பயந்தோடினர். அதனைக் கேள்வியுற்று தெசியஸ் எனும் இளவரசன் ஏதன்ஸ் நகரத்துக்கு வந்தான். அரியட்னாவின் உதவியுடன் அந்த மனிதமிருகத்தைக் கொன்று நாட்டைக் காப்பாற்றினான். கடவுள் அந்தக் காளையினை வானத்தில் நட்சத்திரக் கூட்டமாக பிரகாசிக்க வைத்தார்.

**ராறஸ் கதை 2**

பெண்கடவுளான ஹேரா மிகவும் அழகானவள். ஹேராவுக்கு காளை முகத்துடனும், மனித உடலுடனும் ஒரு குழந்தை பிறந்தது. வேதனையும், வெட்கமும் கொண்ட ஹேரா தனது குழந்தையைக் கடலில் வீசி எறிந்தாள். அந்தக் குழந்தையைக் கடற் தேவதை எடுத்து வளர்த்து ஆளாக்கினாள். அவனுக்கு ராறஸ் என்று பெயர். ராறஸ் அழகுக்கலையில் வல்லவன். புதுப்புது வடிவங்களில் அணிகலங்களைச் செய்வான். அவனது கலை வடிவங்களைப் பலரும் போற்றினார்கள். ஒருநாள் மிகஅழகாக வடிவமைந்த அணிகலனைக் ஹேரா கண்டாள். அதனை வடிவமைத்தவன் யார்? அவனைக் காணவேண்டும். பலரிடம் விசாரித்தாள். ராறஸ்தான் அதனைச் செய்தான் என்பதை அறிந்தாள். ராறஸ்தான் தனது மகன் என்பதை அறிந்தாள். அவனை எண்ணி மகிழ்ந்தாள். அவனை அழைத்து உரிய மரியாதை கொடுத்துத் தன்னுடனேயே வைத்துக் கொண்டாள். தனது மகன்தான் என்று எல்லோரிடமும் கூறி மகிழ்ந்தாள்.

**கதை 3**



சீயஸ் வல்லமைமிக்க கடவுள். ஒருநாள் அவர் உலாப் போனார். அவரது கண்கள் யுரோப்பாவைக் கண்டன. யுரோப்பா அழகானவள். அவள் தோழியரோடு விளையாடிக் கொண்டிருந்தாள். சீயஸ் அவளை அணுக எண்ணினார். யுரோப்பா ஆண்களைக் கண்டால் மறைந்து விடுவாள். இதனைப் புரிந்து கொண்டார். அழகான காளைமாடு போன்று உருமாறினார். மெதுவாக யுரோப்பா பக்கம் சென்றார். காளையைக் கண்டதும் அவள் சந்தோசப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காளை அவள் பக்கம் சென்றது. அதனைத் தடவிக் கொடுத்தாள். தோழியரை மறந்தாள். அவள் அதன்மேல் ஏறக்கூடிய விதத்தில் தவழ்ந்து குனிந்தது. யுரோப்பா தாவி ஏறினாள். சீயஸ் அதுதான் தருணம் என எண்ணினார். காளை விரைந்தது. கடலில் நீந்தி கிரேட் தீவை அடைந்தது.

சீயஸ் தனது உருவத்துக்கு மாறினார். சீயஸ் கடவுள் என்பதை யுரோப்பா உணர்ந்து கொண்டாள். அவளைத் தனது மனைவியாக்கினார். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனர். சீயஸ் கடவுள் அந்தக் காளையினை வானத்தில் நட்சத்திரக் கூட்டமாக பிரகாசிக்க வைத்தார்.

## ஜெமினி மிதுனம்

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Gemini- Twins | மிதுனம் | இரட்டையர் | ஜுன் --21 ஜுலை-20 |



கிரேக்கர்கள் பன்னிரெண்டு இராசிகளில் மூன்றாவதாக ஜெமினியைக் கொண்டார்கள். அதனை மிதுனம் எனத்தமிழில் அழைப்பார்கள். ஜெமினி என்ற மிதுனம் இரட்டையர்போன்று தோற்றமளிக்கிறது. ஜுன் 21ல் சூரியன் ஜெமினி அல்லது மிதுன இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், ஜுலை 21ல் ஜெமினிக்குள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. ஜெமினியின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். ஜெமினி என்ற மிதுனம் ராசிவட்டத்தில் ராறஸுக்கும் - கன்சர் எனும் கடகத்துக்கும் நடுவில் இரட்டையர் வடிவத்தில் அமைந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய ஜூன் மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (ஜெமினி-- Twins ) மிதுனம் - இரட்டையர் என அழைத்தார்கள்.



ஸ்பாட்டா தேசத்தில் லெடா என்றொரு ராணி இருந்தாள். அவளுக்கு கஸ்ரர், பொலுக்ஸ் என இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். இவர்கள் இருவரும் இரட்டையர்கள். இவர்கள் இருவருக்கும் வெவ்வேறு தந்தையர்கள். இருவரும் இணைபிரியாது வாழ்ந்தனர். இவர்கள் சீயஸ் கடவுளின் குழந்தைகள் என்று உலகத்தவர்கள் போற்றினார்கள். இருவரும் காற்றையும், கடலையும் அடக்கும் ஆற்றல் கொண்டவர்கள். கஸ்ரர் குதிரையோட்டத்தில் வல்லவன். பொலுக்ஸ் குத்துச் சண்டையிலும், போரிடுவதிலும் கெட்டிக்காரன். இருவரும் இணைபிரியாது வாழ்ந்தார்கள். ஒருவர்மேல் ஒருவர் அன்பு செலுத்தினார்கள்.

அதேவேளை வேறொரு நாட்டில் ரைன்டாறியஸ் என்பவருக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். ஒருவர் ஐடாஸ், மற்றவர் பெயர் லின்சியஸ். இவ்விரட்டையர்கள் கஸ்ரர், பொலுக்ஸ், ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரர்கள். நெருங்கிய உறவினர்கள். இவர்கள் அனைவரும் ஒவ்வொரு துறையில் வல்லவர்களாக விளங்கினார்கள். இவர்களுக்கிடையில் ஒற்றுமையும் இருந்தது. அதேவேளை குரோதமும் இருந்தது. பல வருடங்கள் கழிந்தன. ஜாசன் தங்கக்கம்பளி எடுப்பதற்காகப் பயணம் சென்றார். இவர்கள் நான்கு பேர்களும் துணை போனார்கள். இப்பயணத்தின்போது இரட்டையர் நான்கு பேரும் ஆநிரை கவரும் திட்டத்தில் ஈடுபட்டார்கள். திருடிய ஆநிரைகளைப் பங்குபோடும் விடயத்தில் முரண்பாடு தோன்றியது.


பின்னர் அது பெரிய போராக மாறியது. கஸ்ரரை ஐடாஸ் ஈட்டியால் தாக்கிக் கொன்றுவிட்டான். பொலுக்ஸ் வேதனையில் வெந்தான். பழிவாங்கத் துடித்தான். லின்சியசைத் துரத்திச் சென்றான். ஒரு அம்பினால் அவனை வீழ்த்தினான். சீயஸ் கடவுள் அவன்முன் தோன்றி ஆறுதல் கூறினார். ஆனால் தனது சகோதரன் கஸ்ரர் இல்லாது தான் உயிர் வாழமுடியாது என்று அழுதான். பொலுக்ஸ் தன்னைக் கொன்றுவிடுமாறு இரந்தான். எல்லாம் வல்ல சீயஸ் அப்படிச் செய்யவில்லை. இந்த இரட்டையர்களை ஜெமினி என்ற பெயரோடு வானில் நட்சத்திரக் கூட்டமாகப் பிரகாசிக்கச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கான்சர் - கடகம்

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Cancer- Crab | கடகம் | நண்டு | ஜுலை – ஓகஸ்ற் |




கிரேக்கர்கள் பன்னிரெண்டு இராசிகளில் நான்காவதாக கான்சரைக் கொண்டார்கள். அதனை கடகம் எனத்தமிழில் அழைப்பார்கள். கான்சர் என்ற கடகம் நண்டுபோன்று தோற்றமளிக்கிறது. ஜுலை 21ல் சூரியன் கானசர் அல்லது கடக இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், ஓகஸ்ற் 21ல் கான்சருக்குள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. கான்சரின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள்.



கான்சர் என்ற கடகம் ராசிவட்டத்தில் ஜெமினிக்கும் - லியோ எனும் சிம்மத்துக்கும் நடுவில் நண்டு வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய ஜுலை மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (கான்சர்-- Crab ) கடகம் - நண்டு என அழைத்தார்கள்.




கி.மு. 500 ஆண்டுகளுக்கு முன் ஹேகியுலிஸ் என்றொரு வீரன் இருந்தான். அவன் பெரிய வீரனாகத் திகழ்ந்தான். அவனிடம் பன்னிரண்டு கட்டளைகளை நிறைவேற்றுமாறு கடவுள் பணித்தார். ஒன்று மனிதர்களைச் சாப்பிடும் குதிரைகளை அழித்தல்.

ஹேகியுலிஸ் அதனைச் செய்து முடித்தான். இரண்டாவதாக ஒன்பது தலைகளையுடைய பயங்கரமான பாம்பைக் கொன்று மக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காத்தலாகும்.. இந்தப் பாம்பு லேனா என்ற சதுப்பு நிலத்தில் வாழ்ந்தது. இந்தப்பாம்பு ஒலிம்பஸ் மலையின் ராணியான ஹேரா தேவதையின் நட்புக்குப் பாத்திரமானது. அதனை அழிப்பதற்காக ஹேகியுலிஸ் வந்தான். அனைத்து விலங்குகளும் அவனைச் சார்ந்து நின்றன. ஆனால் அவனது வெற்றியை ஒலிம்பஸ் மலையின் ராணியான ஹேராத் தேவதை விரும்பவில்லை.




பெரியதோர் குகையில் இராட்சத நண்டு வாழ்ந்தது. அதன் கொடுக்குப் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கும். அந்த நண்டை ஹேகியுலிசைத் தாக்கும்படி அனுப்பினாள். நண்டு தனது கொடுக்கால் ஹேகியுலிஸ் காலில் தாக்கியது. அவன் நிலைகுலைந்து போனான். பாம்பு அவனைத் தாக்கியது. அவன் தூக்கி வீசப்பட்டான். கோபம் கொண்ட ஹேகியுலிஸ் நண்டை ஓங்கி மிதித்து நசுக்கிவிட்டான். ஈற்றில் பாம்பை வெற்றி கொண்டான். ஹேராவின் நட்புக்குப் பாத்திரமான ஒன்பது தலைப் பாம்பை நட்சத்திரமாக்கி வானில் பிரகாசிக்க விட்டாள். ஹேரா தானிட்ட கட்டளையைத் தலைமேல் கொண்டுழைத்த நண்டையும் நட்சத்திரமாக்கி வானில் பிரகாசிக்கும்படி செய்தாள். இன்றுவரை அவை வானில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

**லியோ சிம்மம்**

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Leo - Lion | சிம்மம் | சிங்கம் | ஓகஸ்ற் 21 - செப்தம்பர - 20 |



கிரேக்கர்கள் பன்னிரெண்டு இராசிகளில் ஐந்தாவதாக ( சிம்மம்) லியோவைக் கொண்டார்கள். அதனை சிம்மம் எனத்தமிழில் அழைப்பார்கள். லியோ என்ற சிம்மம் சிங்கத்தைப்போன்று தோற்றமளிக்கிறது.. ஓகஸ்ற் 21ல் சூரியன் ஏரியஸ் இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், செப்தம்பர் 21ல் லியோவினுள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. கார்காலம் இக்காலத்தில்தான் தொடங்குகிறது. லியோவின் அடையாளமாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். லியோ என்ற சிம்மம் ராசிவட்டத்தில் கான்சர் - விர்கோ( கன்னி) ஆகியவற்றின் நடுவில் சிங்கத்தின் வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. லியோ ராசிவட்டத்தில் ஐந்தாவதாகக் கணிக்கப் படுகிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய ஓகஸ்ற் மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (லியோ - Lion- ) சிங்கம் என அழைத்தார்கள்.

### லியோவின் கதை



கிரேக்கத்தில் கொறியாந் தேசத்தில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. கிராமங்களில் அலைந்து கிராமங்களில் உள்ள மக்களுக்குத் துன்பத்தை விளைவித்தது. அவர்களது மந்தைகளை வேட்டையாடி வதைத்தது. கொறியாந் மன்னன் ஹேர்கியுலிஸை அழைத்தார். அவனிடம் சிங்கத்தைக் கொன்று மக்களைக் காப்பாற்றும் பணியை ஒப்படைத்தார். ஹேர்கியுலிஸிடம் பன்னிரெண்டு பணிகள் ஒப்படைக்கப்பட்டன. சிங்கத்தைக் கொல்வது முதலாவது பணியாகும் எனக் கூறுவார்கள்.

சிங்கத்தின் உடல் தடித்த தோலினால் ஆனது. எந்தக் கூரான ஆயுதங்களினாலும் அதன் தோலைத் துளைக்க முடியாது. ஹேரா ஒலிம்பஸ் மலையின் ராணித்தேவதையாவாள். சர்வவல்லமை படைத்தவள். அழகும். ஆற்றலும் படைத்தவள். அவளுக்குக் ஹேர்குலிஸைப் பிடிக்காது. அவனை வெறுத்தாள். அவன்மேல் பொறாமை கொண்டாள். ஹேர்கியுலிஸிடம் சிங்கத்தைக் கொல்லும் பணி ஒப்படைக்கப் பட்டதை அறிந்தாள். ஆத்திரமடைந்தாள். அவனை வெற்றி கொள்ள விடாது தடுக்க முயற்சிகளை மேற்கொண்டாள். அவள் சிங்கத்தின் உயிரை வானத்தில் பதுக்கி வைத்தாள். அதனால் அதனைக் கொல்வது பெரும்பாடாக இருந்தது. ஹேர்கியுலிஸ் சிங்கத்தின் குகையைக் கண்டு பிடித்தான். அந்தக் குகைக்கு இரண்டு வாசல்கள் இருந்தன. ஒரு வாசலைப் பெரும் கற்களால் அடைத்துவிட்டான். சிங்கம் அவனைக் கண்டதும் பாய்ந்து வந்தது. தனது கையில் இருந்த அம்பினால் அடித்தான். அம்பு சிங்கத்தின் தோலில் பட்டுத் தெறித்தது.

வெகுண்ட சிங்கம் மீண்டும் அவன்மேல் பாய்ந்தது. அவதானமாகச் செயற்பட்டான். தருணத்தைப் பார்த்திருந்தான். பாயும்போது வளமாகப் பிடித்தான். அதன் குரல்வளையைப் பிடித்து முறுக்கித்தான் கொல்லமுடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்று தீர்மானித்தான். அதன் பிடரியைப் பிடித்து மடக்கினான். வாயைப் பிளந்து கழுத்தைத் திருகினான். சிங்கம் அவனது பிடியில் சிக்கி மாண்டது. அதனைத்தன் தோளில் தூக்கிக் கொண்டு அரசனிடம் சென்றான். சிங்கத்தைக் கொன்றதை நிரூபித்தான். அதன் தோலை உரித்து அதனைக் கவசமாக அணிந்து கொண்டான். எந்தவிதமான ஆயுதங்களும் அந்தத் தோலைத்துளைக்க முடியாது. ஹேரா சிங்கத்தை நட்சத்திரக் கூட்டமாக்கி வானில் பிரகாசிக்க விட்டாள்.


அது இன்றுவரை பிரகாசிக்கிறது.

எகிப்தியர்கள் சிங்கத்தைக் கடவுளாக வணங்குகின்ற வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அவர்களது வாழ்க்கையில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகிறது. லியோ பால்வீதிக்கு அண்மையில் உள்ளது. லியோவுக்கும் சூரியனுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக மொசப்பத்தேமியர் காலத்தில் இருந்து நம்பப்படுகிறது.

**விர்கோ- கன்னி**

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Virgo- Maiden | கன்னி | கன்னி | செப்தம்பர் - ஒக்ரோபர் |



கிரேக்கர்கள் பன்னிரெண்டு இராசிகளில் ஆறாவதாக விர்கோவைக் கொண்டார்கள். அதனைக் கன்னி எனத்தமிழில் அழைப்பார்கள். விர்கோ



என்ற கன்னி இளம் கன்னியைப்போன்று தோற்றமளிக்கிறது. செப்தம்பர் 21ல் சூரியன் விர்கோ இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், ஒக்ரோபர் 21ல் விர்கோவினுள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. முதுவேனிற்காலம் இக்காலத்தில்தான் தொடங்குகிறது. விர்கோவின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். விர்கோ என்ற கன்னி ராசிவட்டத்தில் லியோ லிப்றா(துலாம்)

ஆகியவற்றின் நடுவில் கன்னியின் வடிவத்தில் அமைந்து கிடக்கிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய செப்தம்பர் மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (விர்கோ - maiden- ) கன்னி என அழைத்தார்கள்.

கன்னி தானியவிளைச்சலின் தேவதை என அழைக்கப் படுகிறது. ஒரு அழகிய கன்னியின் கையில் தாள்கத்தியும், தானியக்கதிர்களும் இருக்கும்.

**கன்னியின் கதை**



பெசிபோன் சீயஸ் கடவுளுக்கும் டெமீற்றருக்கும் மகளாகப் பிறந்தாள். டெமீற்றர் தனது மகளைத் தனியே வெகு தூரத்தில் வளர்த்து வந்தாள். பெசிபோன் தனிமையான சந்தோசமான வாழ்வில் திளைத்தாள். பெசிபோன் மிவும் அழகானவள். கண்டாரை மயக்கும் சிரிப்பு. அவள் சிரிக்கும்போது கன்னத்தில் குழி விழும். எடுப்பாக இருக்கும். ஒருநாள் பூந்தோட்டத்தில் தனது தோழிகளுடன் மலர்பறித்துக் கொண்டிருந்தள். ஹேடஸ் அவள் அழகில் மயங்கினான். அவன் தனது ஆசையினை சீயஸ் கடவுளிடம் கூறினான். தனது திட்டத்தினையும் கூறி அனுமதியும் பெற்றான்.

அவளை யாருக்கும் தெரியாமல் கடத்திக் கொண்டு சென்றுவிட்டான். பாதள உலகத்தில் தனது இருப்பிடத்தில் வைத்தான். அவளை மயக்கித் திருமணம் செய்து கொண்டான். டெமீற்றர் தனது மகள்மேல் மிகவும் அன்பு வைத்திருந்தாள். அவளைக் காணாது தவித்தாள். பலரிடம் வினாவினாள். பதில் கிடைக்கவில்லை. யாவற்றையும் கவனித்துக் கொண்டு பவனிவரும் ஹேலியஸ் எனும் சூரியக்கடவுள் நடந்தவற்றைக் கூறியது.

டெமீற்றர் எனும் பூமித்தாய் வெஞ்சினம் கொண்டாள். அவள் மகளைத்தேடுவதில் ஈடுபட்டாள். அதனால் தனது கடமைகளை மறந்தாள். தனது இயக்கத்தைத் துறந்தாள். சீயஸ் கடவுளிடம் முறையிட்டாள். ஆனால் அவர் அதனைக் கேட்கவில்லை. மனிதர்களையும், உயிரினங்களையும் பழிவாங்க நினைத்தாள்.தனது கோயிலினுள் அடைந்து கிடந்தாள். பூமியில் பயிர்கள் விளைவதைத் தடுத்தாள். ஒரு வருடமாகப் பயிர்கள் விளையவில்லை. பசி பட்டினி வாட்டியது. மக்கள் சேயுஸ் கடவுளிடம் முறையிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹேயுஸ் ஹேடஸிடம் தூதனுப்பினார். ஹேடஸூம் பெசிபோனை அனுப்புவதாகக் கூறினார். அதனைப் பெசிபோனுக்குத் தெரிவித்தார். அவளும் சம்மதித்தாள். ஹேடஸ் பெசிபோனுக்குத் தங்கள் திருமணத்தின் அடையாளமாக ஒரு மாதுளம்பழத்தைக் கொடுத்தார். மாதுளம்பழம் நல்ல சுவையானது. பெசிபோன் அதனைச் சுவைத்து உண்டாள். அந்தக் கனியை உண்டபின் அவள் வாழும் உலகத்தைவிட்டுப் பலநாட்கள் தனித்திருக்க முடியாது. ஹேடஸிடம் வந்தே




ஆகவேண்டும். ஹேடஸ் பெசிபோனை டெமீற்றரிடம் அனுப்பி வைத்தார். மகளைக் கண்டதும் டெமீற்றர் வாரியணைத்துக் கொண்டாள். ஆனால் பலநாட்களுக்கு பெசிபோனால் இருக்கமுடியவில்லை. பாதாள உலகத்தின் மாதுளம் கனியை உண்டால் தொடர்ந்து இருக்க முடியாதென்பதை டெமீற்றரும் அறிந்திருந்தாள். பெசிபோன் ஹேடஸிடம் சென்றாள்.

மீண்டும் டெமீற்றர் கவலையில் ஆழ்ந்தாள். ஒரு வருசத்துக்கு பூமியில் ஒன்றும் விளையாது தடுத்தாள். மீண்டும் பஞ்சம் தலைதூக்கியது. சீயஸ் கடவுள் தலையிட்டார். இம்முறை ஒரு உடன்படிக்கை உருவாகியது. அதன்படி பெசிபோன் ஒரு வருசத்தில் மூன்றில் இரண்டு பகுதியைத் தாயோடு கழிக்கவேண்டும். மிகுதியைத் தன் கணவரோடு பாதாள உலகத்தில் கழிக்கவேண்டும். இவ்வாறு ஹேயுஸ் காலத்தின் சக்கரத்தை இயக்கும் தேவதைகளாக பெசிபோனையும். டெமீற்றரையும் வானில் நட்சத்திரமாக்கிப் பிரகாசிக்கவிட்டார்.

## லிப்றா துலாம்

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Libra -Scale | துலாம் | தராசு | ஒக்ரோபர் - நவம்பர் |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கர்கள் பன்னிரண்டு இராசிகளில் ஏழாவதாக லிப்றாவைக் கொண்டார்கள். அதனைத் துலாம் எனத்தமிழில் அழைப்பார்கள். லிப்றா என்ற துலாம் தராசைப்போன்று தோற்றமளிக்கிறது. ஒக்ரோபர் 21ல் சூரியன் லிப்றா இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், நவம்பர் 21ல் லிப்றாவினுள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. குளிர்காலம் (கூதிர் காலம்) இக்காலத்தில்தான் தொடங்குகிறது. லிப்றாவின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். லிப்றா என்ற துலாம் ராசிவட்டத்தில் விர்கோ ஸ்கோப்பியன் ஆகியவற்றின் நடுவில் தராசின் வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய நவம்பர் மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (லிப்றா - Libra- ) துலாம் என அழைத்தார்கள்.



ஜுலியஸ் சீசர் தராசியை நீதியின் சின்னமாகப் பயன்படுத்தினார். பின்னர் விர்கோ என்ற நீதிதேவதையுடன் (கன்னியுடன்) தொடர்பு படுத்தப்பட்டது. இராசிவட்டம் வளர்நிலையில் இருந்தபோது ரோமர்கள் துலாம் இராசியைக் கண்டுபிடித்தனர். அதற்கான முக்கியத்துவத்தைக் கொடுத்தனர். அதனை இராசிவட்டத்தினுள் தெரிவுசெய்து சேர்த்தனர். செப்தம்பர் 21ல் சூரியன் இந்த இராசியின் ஊடாகச் சென்றது. இந்தக்காலத்தில் இரவும் பகலும் சமமாக இருந்தது. இதனைக் காட்டுவதாக துலாம் இராசி விளங்குகிறது.

ஹேடஸ் புளுட்டோ என்றும் அழைக்கப் படுவார். ஹேடஸ் பாதாள உலகத்தின் கடவுளாவார். ஒரு தேவதை அவருக்கு ஒரு கவசத்தை அன்பளிப்புச் செய்தது. அதனை அவர் அணிந்தால் பிறருடைய கண்களுக்குத் தெரியமாட்டார். அவர் பாதாள உலகத்திலேயே இருப்பதால் மேலோகத்தில் நடப்பதை அறியாமல் இருந்தார். அவரது தங்கத்தேரை நான்கு குதிரைகள் அதிவேகமாக இழுத்துச் செல்லும். ஒருநாள் பொசிபோனைக் கண்டு அவளைக் கவர்ந்து சென்றுவிட்டார். பொசிபோனின் தாய் டெமீற்றர் பதறித்துடித்தார். டெமீற்றர் விளைச்சலுக்கும், பருவகாலங்களுக்கும் பொறுப்பான தேவதை. அவள் சீயஸ் கடவுளிடம் முறையிட்டார். அவர் கவனியாது இருந்தார். ஆத்திரமுற்ற டெமீற்றர் தனது கடவுளுக்குரிய கடமைகளை மறந்தாள். பயிர்கள் விளையவில்லை. உயிரினங்களுக்குரிய உணவுவகைகளை விளையவிடாமல் தடுத்தாள். மழையில்லை. வரட்சி நிலவியது. பருவகாலங்கள் இல்லை. எங்கும் பசியும், பட்டினியும் தாண்டவமாடியது.

சீயஸிடம் அனைவரும் முறையிட்டனர். அவர் ஹேடஸிடம் பொசிபோனை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டார். ஹேடஸ் சம்மதம் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அனுப்புமுன் மாதுளம்பழத்தின் வித்துக்களை உண்ணக்கொடுத்தார். அவற்றை அவள் உண்டாள். மாதுளம்பழத்தை உண்டால் ஹேடஸை மறக்கமுடியாது. மீண்டும் அவரை நாடிவரச் செய்யும். பொசிபோன் தன்தாயிடம் சென்றாள். ஆனால் சிலநாட்களில் அவள் மீண்டும் பாதாள உலகத்துக்குப் புறப்பட்டுச் சென்றாள். டெமீற்றர் கவலையில் ஆழ்ந்தாள். அவளுக்கு ஆத்திரம் வந்தது. மீண்டும் பருவகாலங்களைக் கட்டுப்படுத்தினாள். பல கடவுளர்களின் தலையீட்டால் சீயஸ் கடவுள் ஒரு உடன்படிக்கையைத் தயாரித்தார். அதன்படி பொசிபோன் ஒரு வருடத்தில் நான்கு மாதங்கள் தனது கணவருடன் பாதாள உலகத்தில் இருப்பது. மிகுதிக் காலங்களில் தாயோடு இருக்கவேண்டும். இதனை டெமீற்றரும் ஹேடஸும் ஏற்றார்கள். மார்ச் 21ல் உலகத்துக்கு இளவேனிற்காலத்தோடு வருவாள். அவளது கைகளிலே விளைபொருட்தானியக் கதிர்கள் இருக்கும்.

**ஸ்கோப்பியன் - விருச்சிகம்**

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Scorpio - Scorpion | விருச்சிகம். | தேள் | நவம்பர் - டிசம்பர் |



கிரேக்கர்கள் பன்னிரண்டு இராசிகளில் எட்டாவதாக ஸ்கோப்பியனைக் கொண்டார்கள். அதனை விருச்சிகம் எனத்தமிழில் அழைப்பார்கள். ஸ்கோப்பியன் என்ற விருச்சிகம் தேள் போன்று தோற்றமளிக்கிறது. நவம்பர் 21ல் சூரியன் ஸ்கோப்பியன் அல்லது விருச்சிக இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், டிசம்பர் 21ல் விருச்சிகத்துள்




பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. ஸ்கோப்பியனின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். ஸ்கோப்பியன் என்ற விருச்சிகம் ராசிவட்டத்தில் லிப்றா சஜிரறஸ் எனும் தனுசுக்கும் நடுவில் ஸ்கோப்பியன் வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய டிசெம்பர் மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (ஸ்கோப்பியன் - Scorpion- ) விருச்சிகம் என அழைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்காப்பியன் கதை




"ஸ்காப்பியன் என்பதைத் தமிழில் "தேள்" என்று சொல்வார்கள். ஸ்கோப்பியன் பற்றிய கிரேக்கக் கதைகள் உண்டு. அரியோன் என்ற வீரமான வேட்டைக்காரன் இருந்தான். அரியோன் வீர முள்ளவன். அவன் தனக்கு நிகர் தானே என்று இறுமாந்திருந்தான். ஒரியோன் அழகானவன். கண்டாரைக் கவர்ந்திழுக்கும் திறமையுள்ளவன். இளம் பெண்களை வசியப்படுத்துவதில் கைதேர்ந்தவன். கடலிலும் நடக்க வல்லவன். கடலின் ஆழத்துக்குச் சென்று நனையாமல் வருவான். தன்னை எந்த மனிதரும் ஒன்றும் செய்யமுடியாது. விலங்குகளும் கொல்ல முடியாது என்று கர்வம் கொண்டான்.



இவனது புகழ் எங்கும் பரவியது. ஈயோஸ் விடிபொழுதின் கடவுள். அழகான இளம் கன்னி. ஒரியோனைச் சந்தித்தாள். அவனோடு பேசிக் கொண்டிருந்தாள். தன்னோடு விருந்துக்கு வருமாறு அழைத்தாள். முதலில் ஒத்துக் கொண்டான். ஆனால் பின்னர் ஒரியோன் மறுத்துவிட்டான். அவளுக்கும் கோபம் வந்தது. கோபத்தோடு பேசினாள். அரியோனுக்கும் கோபம் வந்தது. "நான் நினைத்தால் விலங்குகளைக் கொன்று அழித்து விடுவேன்" என்று மார்தட்டினான். ஈயோஸ் வருந்தினாள். அப்பலோ விலங்குகளின் காத்தற்கடவுள். அவனுக்கு இச்செய்தி எட்டியது. பூமித்தாய் காயா இதனை அறிந்தாள். அரியோனுக்குப் பாடம் புகட்ட நினைத்தாள். மிகப்பலம்வாய்ந்த பெரிய ஸ்கோப்பியனை நினைந்தாள்.

ஸ்கோப்பியன் வந்தது. அதற்கு வேண்டிய ஆயதங்களைக் கொடுத்தாள்.



அதன் கொடுக்குகளில் பயங்கரமான விசத்தை ஊறச்செய்தாள். "அரியோனைத் தாக்கி அழித்துவிட்டு வா" எனக் கட்டளை இட்டாள். ஸ்கோப்பியன் அரியோனைத் தாக்கியது. பலநாட்கள் போர் நடந்தது. போர் ஓய்வதாக இல்லை. அரியோனை எங்கு தாக்கவேண்டும் என்பதை ஸ்கோப்பியன் அறிந்திருந்தது. அவனது குதிகாலில் தனது கொடுக்கினால் தாக்கியது. விசம் கால்வழியே பாய்ந்து சென்றது. அரியோனுக்குக் கோபம் பொங்கியது. தனது காலினால் உதைத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக் கடலில் நீந்தித் தப்பிச் சென்றுவிட்டான். ஸ்கோப்பியன் பின்னால் துரத்திச் சென்றது. கடவுள் ஸ்கோப்பியனையும், அரியோனையும் நட்சத்திரக் கூட்டங்களில் சேர்த்து வானில் பிரகாசிக்கவிட்டார். வானில் இன்றுவரை ஸ்கோப்பியன் அரியோனைத் துரத்துவதாகக் கதை கூறுகிறது.

## ஜிரறியஸ் - தனுசு

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Sagittarius-Archer | தனுசு | அம்புவில் | டிசம்பர் - ஜனவரி |



கிரேக்கர்கள் பன்னிரெண்டு இராசிகளில் ஒன்பதாவதாக சஜிரறியஸைக் கொண்டார்கள். அதனைத் தனுசு எனத்தமிழில் அழைப்பார்கள். சஜிரறியஸ் என்ற தனுசு இடுப்புவரை மனிதன். இடுப்புக்குக் கீழ் குதிரை உடலும் கொண்டது. கையில் அம்பும் வில்லும் கொண்டது. டிசம்பர் 21ல் சூரியன் சஜிரறியஸ் அல்லது தனுசு இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், ஜனவரி 21ல் சஜிரறியஸுக்குள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. சஜிரறியஸ் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். சஜிரறியஸ் என்ற தனசு இராசிவட்டத்தில் ஸ்கோப்பியனுக்கும் கப்ரிகோன் எனும் மகரத்துக்கும் நடுவில் அம்புவில் கொண்ட அரைமனித-குதிரைபோன்ற வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய ஜனவரி மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (சஜிரறியஸ் -Sagittarius-Archer ) தனுசு என அழைத்தார்கள்.




சென்ரோர் என்பது ஒருவகை விலங்குகள். மனிதன் பாதி விலங்கு பாதியாக உள்ளவர்கள். அரைவாசி மனிதன். இடுப்புக்குக் கீழ் குதிரை உடலும் கொண்டவை. இவற்றைப் புராணங்களில்தான் காணலாம். மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திபடைத்தவை. அவை நம்பகத்தன்மை அற்றவை. மது அருந்துபவை. பொல்லாத முரட்டுக் குணமுள்ள விலங்குகள். அவற்றுள் சிரோன் என்ற சென்ரோரும் இருந்தான். சிரோனுக்கு சூரியக் கடவுளான அப்பலோ கல்வியறிவைப் புகட்டினார். அத்துடன் சந்திரக் கடவுள் டயானாவும் கற்பித்தார். சிரோன் மிகவும் நல்லவன். கல்வியறிவில் கெட்டிக்காரன். சிறந்த வீரன். சிரோனின் புகழ் எங்கும் பரவியது. சிரோனிடம் கல்வி கற்க அரசகுமாரர்கள் வந்தார்கள். பலவீரகுமாரர்களும் வந்தார்கள். மிகப்பிரபலமான புராண வீரன் ஹேகியுலிஸசும் சிரோனிடம் பலவிதமான வித்தைகளைக் கற்றான்.

ஒருநாள் ஹேகியுலிஸ் அவனது நண்பனோடு நெடும்பயணம் சென்றான். வழியில் தாகமெடுத்தது. ஒரு வீடு தெரிந்தது. வீட்டுக்குள் பெரிய வைன் சாடி இருந்தது. அதனைத் திறக்கும்படி ஹேகியுலிஸ் நண்பனிடம் கூறினான். அவனும் அதனைத் திறந்தான். திறந்ததும் வைனின் நறுமணம் எங்கும் பரவியது. சென்ரோர்கள் கடும் கோபத்துடன் நாலு காலில் வந்தார்கள். எங்களிடம் கேட்காமல் யாரிதைத் திறந்தது ? கூறிக்கொண்டு அவர்கள் இருவரையும் தாக்கத் தொடங்கினார்கள். ஹேக்கியுலிஸ் போராடினான். பலரை வீழ்த்தினான். சிலர் தாக்குப்பிடிக்க முடியாது ஓடினார்கள். இந்தப் பக்கம் வரக்கூடாது. என்று சத்தமிட்டான். தூரத்தில் யாவற்றையும் கவனித்துப் பார்த்தவண்ணம் சிரோன் நின்றான். சிரோன் தூரத்தில் நின்றதால் ஹேகியுலிஸால் சிரோனை அடையாளம் காணமுடியவில்லை. சென்ரோர்கள் என்று நஞ்சு தோய்ந்த அம்பினை எய்துவிட்டான். அது சிரோனைத் தாக்கியது. சிரோன் வீழ்ந்தான். ஹேர்கியுலிஸ் சிரோனை நன்கு அறிந்தவன். அவனை மரியாதையுடன் மதித்தவன். சிரோன் எனத்தெரிந்த பின் ஹேகியுலிஸ் கவலையில்





மூழ்கினான். சிரோனுக்கு சாவில்லை. அவன் வருந்தினான். சீயஸ் கடவுள் வந்தார். அவனைக் குணப்படுத்த முயன்றார். ஆனால் சிரோன் அதற்கு இணங்கவில்லை. சிரோனின் நல்ல குணத்துக்காக அவனை வானில் நட்சத்திரக் கூட்டங்களிடையே வைத்தார். சஜிற்றியஸ் இராசிகளாக இன்றும் வானில் பிரகாசிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பிறிகோன் - மகரம்

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Capricorn- The Sea-goat | மகரம் | கடல் ஆடு | ஜனவரி – பெப்ருவரி |



கிரேக்கர்கள் பன்னிரெண்டு இராசிகளில் பத்தாவதாக கப்ரிகோனைக் கொண்டார்கள். அதனை மகரம் எனத்தமிழில் அழைப்பார்கள். கப்ரிக்கோன் என்ற மகரம் கடல்ஆடு போன்று தோற்றமளிக்கிறது. ஜனவரி 21ல் சூரியன் கப்ரிகோன் அல்லது மகர இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், பெப்ருவரி 21ல் மகரத்துள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. மகரத்தின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். கப்ரிக்கோன் என்ற மகரம் ராசிவட்டத்தில் சஜிரறஸ் எனும் தனுசுக்கும் - அக்குவரியஸ் என்ற கும்பத்துக்கும் நடுவில் கடல்ஆடு வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய பெப்ருவரி மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள




நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (கப்ரிக்கோன் - Capricorn- ) மகரம் என அழைத்தார்கள்.

## கப்பிறிக்கோனின் கதை

தைபோனின் பெயரைக் கேட்டாலே எல்லோரும் நடுங்குவார்கள். சீயஸ் கடவுளே தைபோனைக் கண்டு அஞ்சினார். எல்லாத்தேவதைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைபோனைக் கண்டு பயந்தார்கள். தங்கள் உண்மையான உருவத்தை மாற்றி ஒளிந்து கொள்வார்கள். ஒருமுறை சீயஸ் தைபோனோடு சண்டையிட்டார். தைபோன் பயங்கரமாகத் தாக்கியது. சீயஸ் கடவுளின் தசைநார்கள் இயங்காது விட்டன. அவரால் நடக்கமுடியாதிருந்தது. சீயஸை சிலிசியா நாட்டிலுள்ள குகையில் அடைத்தது. டெல்பைன் என்றொரு பயங்கர ரகன் இருந்தது. அது இடுப்புக்குக் கீழ் பாம்பு வடிவமுடையது. இடுப்புக்குமேல் பெண் வடிவத்தை உடையது.

டெல்பைனைக் காவலுக்கு வைத்தது. ஹேம்ஸ், அஜிபன் ஆகிய தேவர்கள் வந்தார்கள். நிலைமையைப் புரிந்து கொண்டார்கள். டெல்பனை அணுகினார்கள். டெல்பனை ஏமாற்றினார்கள். சீயஸைக் காப்பாற்றிக் கடத்திச் சென்றார்கள். வழியில் தைபோன் வந்தது. அஜிபனுக்குப் பயம் கௌவிக்கொண்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை. சீயஸையும் காப்பாற்ற வேண்டும். ஆறு ஒன்று குறுக்கிட்டது. விலங்காக மாறினால்தான் தைபோனிடம் இருந்து தப்பலாம். அவசரத்தில் ஆற்றில் பாய்ந்தார். பாதி உடல் தண்ணீருக்குள் அமிழுந்து விட்டது. அப்போதுதான் ஆட்டை நினைத்தார். தண்ணீருக்கு மேல் ஆடு தெரிந்தது. தண்ணீருக்குள் மீன் உருவமாக இருந்தது. எப்படியோ தைபோனிடம் இருந்து தப்பிவிட்டார்கள். அஜிபன் மிகச் சிரமத்தோடு நடந்தார். சீயஸைக் காப்பாற்றினார்கள். சீயஸ் குணமடைந்தார். பலத்தைப் பெற்றுவிட்டார். அவனால் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் துன்பம் விளையும். தைபோனை விட்டுவைக்கக் கூடாது எனத் தீர்மானித்தார். இடிமின்னல் கொண்டு தைபோனைத் தாக்கினார். தைபோன் அழிந்தது. தேவர்கள் மகிழ்தார்கள். அஜிபனின் அன்பைப் போற்றினார். அஜிபனை கப்பிரிகோன் ராசிக்கூட்டத்தில் நட்சத்திரமாக்கி வானில் விட்டார். அஜிபன் இன்றும் வானில் பிரகாசிக்கிறது.

## அக்குவாறியஸ் - கும்பம்

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Aquarius -The Pitcher | கும்பம் | குடம் | பெப்ருவரி – மார்ச் |



கிரேக்கர்கள் பன்னிரண்டு இராசிகளில் பதினோராவதாக அக்குவாறியசைக் கொண்டார்கள். அதனைக் கும்பம் எனத்தமிழில் அழைப்பார்கள். அக்குவாறியஸ் என்ற கும்பம் குடம் போன்று தோற்றமளிக்கிறது. பெப்ரவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21ல் சூரியன் அக்குவாறி யஸ் அல்லது கும்ப இராசிக்குள் பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்திய கோட்டை அண்மித்த விண் மீன் களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், மார்ச் 21ல் கும்பத்துள் பிரவேசிக் கிறது எனக் கணக்கிட்டுள் ளன.



கும்பத்தின் அடையாள மாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன் படுத்துவார்கள். அக்குவறியஸ் என்ற கும்பம் ராசிவட்டத்தில் கப்றிகோன் எனும் மகரத்துக்கும் - பீஸஸ் என்ற மீனத்துக்கும் நடுவில் குடம் வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய மார்ச் மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (அக்குவாறியஸ் -Aquarius) கும்பம் என்றழைப்பார்கள். அக்குவாறியஸ் பற்றிய கதைகள் பல உண்டு.

## அக்குவாறியஸின் கதை

அக்குவாறியஸ் இராசிக்கூட்டம் ஒரு தேவன் குடத்திலிருந்து தண்ணீரை ஊற்றுவது போல் காட்சி தருகிறது. எகிப்தியர்கள் குடத்தைத் தாங்கியுள்ள தேவனொருவர் வானத்தில் இருந்து தண்ணீரை ஊற்றுவதால் நைல் நதி பெருக்கெடுக்கிறது. நாட்டின் வளத்தைப் பெருக்குகிறது என நம்புகின்றனர். நைல் நதி பெருக்கெடுக்கும் காலத்தைக் கணித்துப் பயிர் விளைவித்தார்கள்.



அக்குவாறியஸ் நட்சத்திரக் கூட்டத்தினுள் உள்ள கனிமடியின் கதையுள்ளது எனக் கிரேக்கர்கள் கூறுவார்கள். ரோஸ் மன்னனுக்கு அழகிய மகன் இருந்தான். அவனது அழகில் தேவரும் மயங்கினார்கள். உலகத்தவர் அவனது அழகைப் புகழ்ந்தார்கள். கனிமடி கட்டழகனாக வளர்ந்து வந்தான்.

சீயஸ் கடவுள் அவனது அழகில் மயங்கினார். இவன் தேவலோகத்தில் இருக்கவேண்டியவன். தேவர்களோடு இருக்கவேண்டியவன். இவனைத் தேவலோகத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். இப்படித் தீர்மானித்தார். ஒரு நாள் கழுகுவாக மாறினார். உலகத்தை நோக்கிப் பறந்து வந்தார். கனிமடியைத் தேடினார்.

கனிமடி தனது ஊரில் உலாவந்தான். அவனைக் கண்டதும் சீயஸ் மகிழ்ந்தார். வீச்சாகப் பறந்து வந்தார். அலக்காக கனிமடியைத் தூக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேவலோகம் நோக்கிப் பறந்தார். தேவர்களுக்கு ஆச்சரியம். இவன் எவ்வளவு அழகாக இருக்கிறான். எல்லோரும் கன்னிமடி பற்றிக் கதைத்தார்கள். கனிமடியைத் தனது வளர்ப்பு மகனாய்ப் போற்றினார். இவனுக்குச் சிறந்த கடமையினைக் கொடுக்கவேண்டும். எப்படியான கடமையைக் கொடுக்கலாம் என்று சீயஸ் யோசித்தார். தனது சொந்தக் கடமையினைக் கொடுக்க எண்ணினார். சீயஸ் தனது தண்ணீர் சாடியை ஒப்படைத்தார். தேவர்களுக்கும், உலகத்தவருக்கும் தண்ணீர் வழங்குவது கனிமடியின் கடமையாக இருந்தது.

தண்ணீர் சாடிக்குப் பொறுப்பானவர் தேவர்களுக்கும். உலகத்தவர்களுக்கும் நீரைக் கொடுக்க வேண்டும். தேவாமிர்தம் என்பது சிறப்பான ஒரு குடிவகை. அது தேவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுப்பது. இளமைக்கும், மோட்ச வாழ்க்கைக்கும் இட்டுச்செல்வது. அதனை வழங்கும் கடமை கனிமடியைச் சார்ந்தது. அவனே மழைக்கும். சகல நீர்வளங்களுக்கும் பொறுப்பான கடவுளாக மாற்றம் பெற்றான். இவரை இந்துக்கள் வருணபகவான் என்றழைத்தார்கள். அவனது செயல்களால் சீயஸ் மகிழ்ந்தார். தனது கடமையை நிறைவாகச் செய்த கனிமடியை அக்குவாறியஸ் ராசிக்கூட்டத்தில் நட்சத்திரமாக்கி வானில் விட்டார். கனிமடி இன்றும் வானில் பிரகாசிக்கிறது.

**பிஸஸ் - மீனம்**

| பெயர் (ஆங்கிலம்) | பெயர்(தமிழ்) | அடையாளம் | காலம் |
|---|---|---|---|
| Pisces -The Fish | மீனம் | மீன் | மார்ச் - ஏப்பிரல் |







கிரேக்கர்கள் பன்னிரண்டு இராசிகளில் பன்னிரண்டாவதாக பிஸஸைக் கொண்டார்கள். அதனை மீனம் எனத்தமிழில் அழைப்பார்கள். மீனத்தின் அடையாளமாகக் இருமீன்களைக் கொள்வார்கள். பிஸஸ் என்ற மீனம் இருமீன்களைப் போன்று தோற்றமளிக்கிறது. மார்ச் 21ல் சூரியன் மீன இராசிக்குள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசம் செய்கிறது என்று கிரேக்கர் கணித்தனர். ஆனால் மத்தியகோட்டை அண்மித்த விண்மீன்களைக் கொண்டு கணிப்பிடும் நாடுகள், ஏப்பிரல் 21ல் மீனத்தினுள் பிரவேசிக்கிறது எனக் கணக்கிட்டுள்ளன. பிஸஸின் அடையாளமாக படத்தில் காட்டிய வடிவத்தைப் பயன்படுத்துவார்கள். ராறஸ் என்ற ரிசபம் ராசிவட்டத்தில் ஏரியஸுக்கும் - ஜெமினி எனும் மிதுனத்துக்கும் நடுவில் காளை வடிவத்தில் அமைந்து கிடக்கிறது. இப்பகுதியில் சூரியன் புகுவது ஏறக்குறைய ஏப்பிரல் மாதத்தின் 21ம் நாளாகும். பபிலோனியர், எகிப்தியர், பேசியர், கிரேக்கர்கள் ஆகியோரும் இப்பிரதேசத்தினுள் அடங்கியுள்ள நட்சத்திரங்கள் இணைந்த வடிவத்தை (பிஸஸ் - The Fish) மீனம் என அழைத்தார்கள்.



**மீனத்தின் கதை**

அபோறடைற் தனது மகன் இரோசுடன் வாழ்ந்து வந்தாள். ரைபோன் என்ற பயங்கர விலங்கு தேவர்களையும், மனிதர்களையும் பிடித்து உண்டு விடும். அபோறடைற் தனது மகனோடு உலா வந்தாள். அவர்களை ரைபோன் என்ற பயங்கர விலங்கு கண்டுவிட்டது. நல்லதோர் இரை கிடைத்ததாக எண்ணியது. அவர்களைத் துரத்தியது. அவர்கள் வேகமாக ஓடினார்கள். விரைந்து மறைந்து ஓடினார்கள். விலங்கு விடுவதாக இல்லை.



தூரத்தில் ஆழ்கடல் தெரிந்தது. விரைந்து ஓடிக் கடலுள் குதித்து விட்டார்கள். எப்படியும் ரைபோன் தங்களைப் பிடித்து விடும் என்பதால் மீனாக மாறி நீந்தினார்கள். ஆழ்கடலின் அடிக்குப் போய்விட்டார்கள். எங்கும் இருளாக இருந்தது. அந்த இருளில் திசைமாறிச் சென்று விடலாம். ஆளையாள் பிரிந்தும் விடலாம். என்ன செய்வது? அச்சம் பிடித்தாட்டியது. அபோறடைற்றின் மூளை வேலை செய்தது. தங்கள் இருவரது வால்களை இணைத்து நீண்ட மெல்லிய கயிற்றினால் தொடுத்தாள். எதிர்திசையில் நீந்தித் திரிந்தார்கள். பலகாலம் இப்படி அரும்பெரும் செயலில் ஈடுபட்டு வாழ்ந்தார்கள். இதனைச் சீயஸ் கடவுள் அறிந்தார். இவர்களின் துணிகரச் செயலைப் பாராட் டினார். அவர்களை அப்படியே வானில்பிர காசிக்கும்படி நட்சத் திரக் கூட்டமாக்கி விட்டார். இன்று வரை அவை வானில் பிரகாசிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானமும், சூரிய சந்திரனும்

வானம் ஒரு அற்புதமான கதைப் புத்தகம். புவியில் இருந்து வானைப் பார்க்கின்றோம். வானில் இருந்து புவியைப் பார்க்கின்றோம். புவியில் இருந்து அனைவரும் வானைப் பாரக்கலாம். ஆனால் வானில் இருந்து புவியைப் பார்க்க எல்லோராலும் முடியாது. நாம் நவீன தொழில் நுட்ப யுகத்தில் வாழுகிறோம். பூமியில் நிகழ்வதைக் கண்டு கேட்டு அறிகிறோம். அதேபோல் வானில் நிகழ்வதையும் அறிந்து கொள்கிறோம். ஆனால் நமது முன்னோர்களுக்கு வசதிகள் இருந்ததில்லை. அவர்கள் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்தார்கள். புவியிலும், வானிலும் நடப்பவை யாவும் கடவுளின் செயல்கள் என்று நம்பினார்கள்.

நட்சத்திரங்கள் பகலில் தெரியாதா? ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர் பகலிலும் நட்சத்திரங்களைப் பார்க்கலாம். அவை எங்கும் ஒளிந்திருப்பதில்லை. அவை இருக்கும் இடத்திலேயே இருக்கின்றன. சூரியனின் ஒளி பிரகாசமானது. அந்த ஒளிக்கு முன்னால் நட்சத்திரங்கள் தெரிவதில்லை. சூரியகிரகண நாளில் பகலில் நட்சத்திரங்களைப் பார்க்கலாம்'' என்றார். அந்தக் கூற்றை நான் சிறுவனாக இருந்தபோது கண்களினால் கண்டுகொண்டேன். 1952 -53 ஆண்டுகளில் எனநினைக்கிறேன். நடுப்பகலில் முழுச்சூரிய கிரகணம் தோன்றியது. பகல் இரவாகியது. வாகனங்கள் லைற் போட்டு நின்றன. பறவைகள் கூடுகளை அடைந்தன. வானில் நட்சத்திரங்கள் தெரிந்தன வெற்றுக் கண்ணாடியில் மண்ணெண்ணெய் விளக்கின் புகையைப் படியவைத்தோம். அதன் ஊடாகச் சூரியனைப் பார்த்தோம்.. கிரகணங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன? பின்னர் இவற்றை அறிவோமா?


பிரபஞ்சத்தில் பலகோடி உடுக்கோலங்கள் உண்டு என்பதனை அறிந்தோம். அவை சுழன்று கொண்டிருப்பதையும் பார்த்தோம். ஒருகோள் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி நீள்வட்டப் பாதையில் வலம் வருவதை அறிந்தோம். அதனால் ஏற்படும் அதிசயங்கள் அற்புதமானவை. கோள்களை மனித உருவமுள்ள கடவுள்களாக மனிதர் வணங்குவதை அறிந்தோம். அவை மனித உருவில் இவ்வுலகில் அற்புதங்களைச் செய்ததாக புராணங்கள் கூறுகின்றன. வானத்தில் வானவில்லைப் பார்க்கின்றோம். வானவில் எப்படி வந்தது? அதிசயிக்கிறோம்.

சூரியனையும் சந்திரனையும் பற்றிய கதைகள் நிறையவே உண்டு. அதேபோல் உடுக்கோலங்களைப் பற்றியும் கதைகள் உண்டு. அவற்றை நீங்கள் அறியவேண்டும் அல்லவா? ஒவ்வொன்றாகப் பார்ப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானமும் சந்திரனும்



வானம் என்பதென்ன? பரந்து விரிந்த பெருவெளி. அதனைத்தான் பிரபஞ்சம் என்கிறோம். வானத்தில்தான் நமது பூமியும் உள்ளது. பூமிக்கு மிக அருகில் உள்ளதுதான் சந்திரன். அதனால் சந்திரனின் ஆதர்ஷண சக்தி பூமியைத் தாக்குகின்றது. பூமியில் வற்றுப் பெருக்கில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றது. சுந்திரனுக்கு ஒளியில்லை. ஆனால் சூரியனது ஒளியைப் பெற்று ஒளிர்கிறது. சந்திரனின் கதிர்கள் குளிரானவை. ஆனால் அக்கதிர்கள் மனிதருக்குத் தீங்கு விளைவிப்பதாகக் கருதுவோரும் உண்டு. சந்திரன் உதயங்கொள்ளும் போது கடலலை ஆர்ப்பரித்து எழும். கடல் பெருக்கெடுக்கும். உயிரினங்களையும் சந்திரனின் ஒளி தாக்குகின்றதாகக் கருதுவோரும் உண்டு.

சந்திரன் வளர்பிறையாக இருக்கும்போது வீடுகட்டுவதற்குரிய மரங்களை வெட்டமாட்டார்கள். அவை விரைவில் பழுதாகிவிடும் என்பதாக ஐதீகம். பூரணை அல்லது முழுமதி நாட்கள் கனத்தநாட்களாகக் கருதுவோரும் உண்டு. நோயுற்றவர்களுக்கு அந்நோய் அதிகரிக்கும். மனநோயாளிகளுக்கு மனநோய் அதிகரிக்கும் என்று கூறுவார்கள். பொதுவாக மனிதர்களுக்குச் சித்தம் கலங்கும் நாள் என்றும் கூறுவார்கள். இலங்கையில் அவ்வாறான மக்கள் அதிகமுள்ளனரா என்ற வினாவும் எழுகிறது. அதனால்தான் நமது இலங்கை அரசு போயாநாட்களை அரச விடுமுறையாக ஆக்கியது என்று கூறுபவர்களும் உண்டு.

சந்திரனைப் பலபெயர் கொண்டு அழைப்பார்கள். ஆதிகால மக்கள் வானத்தைப் பார்த்தார்கள். சூரியனையும், சந்திரனையும் வைத்துக் கதைகள் புனைந்தார்கள். இந்தக் கதைகளைப் பார்ப்போமா? இந்த வானம் அடிக்கடி பூமியைத் தொட்டு விளையாடும். ஒரு மூதாட்டி இருந்தாள். அவள் காலையும் மாலையும முற்றத்தைப் பெருக்குவாள். கைகளில் விளக்குமாறு இருக்கும். முற்றத்தை அழகாக வைத்திருப்பாள். சந்திரன் வானில் இருந்து பார்க்கும். சந்திரனுக்கு மூதாட்டியோடு சீண்டி விளையாட விருப்பம். ராமனும் அப்படித்தானே செய்தான். கூனி தண்ணீர் குடத்தோடு போகும்போது கல்லெறிவான். அது குடத்தைத் தாக்கும். தண்ணீர் வழிந்தோடும். ஆவன் சிரித்து மகிழ்வான். கூனி ஆத்திரத்தில் நிற்பாள். பின்னர் கூனியின் விளையாட்டு ராமனைப் பாதித்தது. இல்லையா?

சந்திரன் வழித்துணைக்கு வானத்தை அழைக்கும். மூதாட்டி முற்றத்தைக் கூட்டுவாள். மெதுவாகக் கீழிறங்கி வந்து முதுகில் தட்டிவிட்டு ஓடும். மூதாட்டிக்குக் கோபம் வரும். இது பலநாட்கள் தொடர்ந்தது. ஒருநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் வானத்தை விளையாட அழைத்தது. வானத்தோடு சேர்ந்து வந்து மூதாட்டியின் முதுகில் தட்டியது. மூதாட்டி நிமிருமுன் மேலே ஓடியது. அன்று இப்படிப் பலமுறை நடந்தது. மூதாட்டி திட்டம் போட்டுக் காத்திருந்தாள்.

மூதாட்டி முற்றத்தைக் கூட்டுவது போல் பாசாங்கு செய்தாள். விழிப்பாக இருந்தாள். சந்திரன் வானத்தையும் கூட்டிக்கொண்டு வந்தது. மூதாட்டி விளக்குமாற்றால் அடித்தாள். அத்துடன் "ஏ... சந்திரனே நீ தேய்ந்து தேய்ந்து போவாயாக". என்று சாபம் போட்டாள். வானம் பயந்து விட்டது. "ஏ...வானமே இனி நீ கீழே இறங்கி வராதிருப்பாயாக". என்று சாபமிட்டாள். சந்திரன் பயந்து நடுங்கி மூதாட்டியிடம் பாவமன்னிப்புக் கேட்டது. பதினைந்து நாள் தேய்ந்து போவாய். பின் படிப்படியாக வளர்ந்து வருவாயாக. ஒருநாள் மட்டும் நீ முழநிலவாக ஒளிவீசுவாயாக. என்று விமோசனம் அளித்தாள். அதன்பின்னர் வானம் கீழிறங்கி வருவதில்லையாம். சந்திரன் மாதத்தில் பதினைந்து நாள் தேய்ந்து மறைந்து போகும். அன்று அமவாசையாகும். பின்னர் வளர்ந்து வளர்ந்து முழுமையாகத் தெரியும். அதுதான் பூரணை முழுநிலவு ஆகும். இப்படியான கதைகள் நமது கிராமங்களில் உலா வருகின்றன.

## வானத்தில் சூரியனும் சந்திரனும்

தென்னாபிரிக்காவில் நைஜீரியா என்ற நாடு இருக்கிறது. அங்கு சூரியனைப் பற்றியும் சந்திரனைப் பற்றியும் ஒரு கதையுண்டு. சூரியனின் மனைவிதான் சந்திரன். சூரியன் தனது மனைவி சந்திரனோடு சூரியன் பூமியில் சந்தோசமாக வாழ்ந்தார். அவர்களுக்கு அழகான வீடு இருந்தது. அவர்களது வீட்டுக்கு அடிக்கடி நண்பர்கள் வருவார்கள். ஒரே கொண்டாட்டமாக இருக்கும். தண்ணீர்க் கடவுளும் இருந்தாற்போல் வருவார். விருந்துண்பார். பின் சென்றுவிடுவார். அவரை வெள்ளம் என்று அழைத்தார்கள். ஒருநாள் நண்பர் வெள்ளம் அவர்களது வீட்டுக்கு வந்தார். கூடவே தனது நண்பர்களையும் அழைத்து வந்தார். அந்த நண்பர்கள் வேறு யாருமல்ல. நீர்வாழ் உயிரினங்கள்தான். மீன்களும், ஏனைய நீர்வாழ் உயிரினங்களும் வந்தன. வீடு நிறைந்துவிட்டது. வீடு முட்டப்பரவியது. இடமின்மையால் கணவனும் மனைவியும் கூரையில் ஏறினர். கூரையையும் மூடி வெள்ளம் வந்தது. அவர்கள் போவதாக இல்லை. வேறு வழியுமில்லை. சூரியனும் சந்திரனும் ஆகாயத்தில் குடியேறி விட்டார்களாம். அங்கிருந்து தங்கள் நண்பர்களைப் பார்ப்பார்களாம். அப்படியே வானத்தில் நிரந்தரமாகத் தங்கி விட்டார்களாம்.. அவர்களுக்கு வெள்ளத்தின் தொந்தரவுகள் இல்லையாம்.

## சந்திரப் பெண்ணின் கதை

அமெரிக்க நாட்டில் இப்படியொரு கதை வழங்குகிறது. சந்திரன் என்ற நிலா அழகிய பெண்ணாக இருந்தாள். அவளைச் சூரியன் திருமணம் செய்தார். அவர்களுக்கு நிறையக் குழந்தைகள் இருந்தனர். அவைதான் வானத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசிக்கும் நட்சத்திரங்கள். சூரியன் நட்சத்திரக் குழந்தைகளைத் துரத்தும். பிடிபட்ட குழந்தைகளை விழுங்கி விடுவிடும். சூரியனைக் கண்டால் குழந்தைகளுக்குப் பயம். பகலில் சூரியன் வானவீதியில் வரும். அப்போது நடசத்திரக் குழந்தைகள் வானில் ஓடி ஒளிந்து கொள்ளும். அதனால்தான் நட்சத்திரங்கள் பகலில் தெரிவ தில்லை.

நிலா சூரியனிடம் இருந்து குழந்தைகளைக் காப்பாற்ற முனைந்தாள். பலவழிகளைத் தேடினாள். சூரியன் நட்சத்திரக் குழந்தைகளை வேட்டையாடிவிடும். அப்போது சந்திரன் மனம் வருந்தும். துக்கத்தோடு வாடியிருக்கும். இது தொடர்கதையாக இருக்கும். அதனால் ஒவ்வொரு மாதமும் முகத்தை ஒருபக்கம் வைத்துக் கொள்ளும். அப்பொழுது தேய்பிறையாகத் தெரியும். எப்படியோ நட்சத்திரக் குழந்தையைச் சூரியன் வேட்டையாடி விடும். ஒரு மாதத்தில் ஒரு நட்சத்திரக் குழந்தையையாயவது பிடித்து விழுங்கிவிடும். அந்த நாளில் சந்திரன் வெளியே வருவதில்லை. வீட்டினுள் அடைந்து கிடக்கும். அன்றுமுழுதும் சந்திரன் வெளியே வருவதில்லை. குழந்தைகளை இழந்த துக்கத்தில் இருப்பாள். அன்று அமவாசையாகும். இரவுவேளையில் சூரியன் உறங்கிவிடும். அப்போது நிலா தனது நட்சத்திரக் குழந்தைகளுடன் விளையாடி மகிழ்வாளாம்.

## சகோதரர் சண்டை

கெனியா என்பது கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு. அங்கே சந்திரனும் சூரியனும் சகோதரர்களாக விளங்கினார்கள். சந்திரன் மூத்தவர். மகவும் அழகானவர். தங்கமாக யொலிப்பவர். அவரது ஒளியில் பலர் மயங்கினார்கள். அவரைப் புகழ்ந்தார்கள். சூரியன் இளையவர். அழகில் குறைந்தவர். அதனால் சூரியனுக்குப் பொறாமையாக இருந்தது. அடிக்கடி சூரியன் சந்திரனோடு சண்டை பிடிப்பார். ஒருநாள் கடும் சண்டை நடந்தது. இருவரும் கட்டிப்பிடித்துப் புரண்டார்கள். மல்யுத்தம் நடந்தது.

சூரியன் கோபத்தோடும் வேகத்தோடும் சண்டையிட்டார். சந்திரனைச் சேற்றுக்குள் தள்ளி விட்டார். சந்திரன் சேற்றில் புதையுண்டார். மெதுவாக எழுந்தார். அவரது ஒளி மங்கியது. மக்கள் வேதனையடைந்தார்கள். சண்டை ஓயவில்லை. மக்களும் தேவர்களும் கடவுளிடம் முறையிட்டார்கள். அவர் இருவரையும் சமாதானப் படுத்தினார். இருவரையும் எச்சரித்தார். சூரியனைப் பார்த்து "நீ பகலில் மட்டும் வெளியில் வானவீதியில் வரவேண்டும்." என்றுசொன்னார். சந்திரனைப் பார்த்தார். "இரவில் திருடர்களும், சூனியக்காரர்களும் திரிவார்கள். அவர்களது தீயசெயல்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு உனது இந்த ஒளிதான் ஏற்றது. அதனால் நீ இரவில் பிரகாசிக்க வேண்டும்". என்று கட்டளை இட்டார். "இருவரும் ஒன்றாக இருந்தால் சண்டை பிடிப்பீர்கள். அதனால் உங்களைப் பிரித்து வைக்கின்றேன்". என்று பிரித்துத் தூரத்தில் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் கட்டளையைச் சிரமேற்கொண்டார்கள். சூரியன் பகலில் வானவீதியில் பிரகாசிக்கிறது. சந்திரன் இரவில் வானவீதியில் பிரகாசிக்கிறது.

## நிலாப் பெண்

இந்தோனேசியாவில் வேடிக்கையான கதையுண்டு. நவங் வுலன் என்ற சந்திரத் தேவதை இருந்தாள். அவள் பூவுலகில் உள்ள ஏரியில் குளிக்க வருவது வழக்கம். அன்னத்தின் இறக்கையினாலான போர்வையுள் புகுந்து பூமிக்கு வருவாள். இதனைப் பலர் கண்டார்கள். அவளிடம் பல சக்திகள் இருந்தன. ஒரு தானிய மணியிருந்தால் போதும். ஆயிரம் பேருக்குச் சமைத்துப் போடுவாள். அவளது சக்தியை எவராவது பார்த்தால் அந்தச் சக்தியை அவள் இழந்துவிடுவாள்.

ஒருநாள் அவள் பூமிக்கு வந்தாள். தனது போர்வையைக் கழற்றி வைத்துவிட்டு நீராடினாள். மெதுவாக குவான் வந்தான். அவளது போர்வையை எடுத்துக் கொண்டு தனது வீட்டுக்கு ஓடினான். அதனை 'நவங் வுலன்' கண்டாள். அவனைத் துரத்திக் கொண்டு ஓடினாள். அவன் அதனை ஒளித்து விட்டான். அவள் அழுது புலம்பினாள். அவளால் தனது உலகத்துக்குப் போகமுடியாது.

குவானோடு தங்கிவிட்டாள். அவனோடு வாழ்க்கை நடத்தினாள். ஒரு தானிய மணியை எடுப்பாள். அதனைக் கொண்டே பலருக்குச் சமைத்தாள். குவானுக்கு ஆச்சரியம். எப்படி இவள் சமைக்கிறாள் என்பதை ஒளிந்திருந்து பார்த்தான். அவ்வளவுதான். அவளது சக்தி மறைந்து விட்டது. இப்போது அவளால் அப்படிச் செய்யமுடியவில்லை. மற்றப்பெண்களைப் போல் இயங்கினாள். தானியங்களை உரலில் போட்டுக் குற்றிச் சமைத்தாள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்தது.


ஒருநாள் தனது போர்வையைக் கண்டு கொண்டாள். எடுத்துப் போர்த்தினாள். பறந்துவிட்டாள். ஆனால் அவளால் அங்கு நிம்மதியாய் இருக்க முடியவில்லை. இரவில் தனது உலகத்தில் பிரகாசித்தாள். பகலில் பூவுலகத்தில் தனது கணவனுடனும் குழந்தையுடனும் வாழ்ந்தாள்.

## ஹேலியோஸ் எனும் சூரியன்

கிரேக்கம் பழம்பெருமை வாய்ந்த நாடு. மிகவும் வளம் மிக்கது. உலகப் புகழ் பெற்றது. சோக்கரட்டிஸ் போன்ற சிந்தனையாளர்களைத் தந்த நாடு. அந்த நாட்டினர் சூரியனைக் கடவுளாக மதித்தனர். சூரியனைக் "ஹேலியோஸ்" கடவுள் என்று அழைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹேலியோஸின் நாடு அற்புதமானது. அது கிழக்குத் திசையில் உள்ளது. அங்கே ஹேலியோஸின் பிரமாண்டமான மாளிகையுண்டு. அதிகாலையில் ஹேலியோஸின் மாளிகை அலங்காரமாக விளங்கும். மாளிகையில் இருந்து ஒளிபரந்து படரும். அந்த ஒளியில் கிழக்குப் பிரகாசமாக வெளிக்கும். இளங்காற்று சில்லென்று வீசும். எங்கும் இன்பமாக இருக்கும். உயிரினங்கள் உறக்கத்தில் இருந்து விழிப்புக் கொள்ளும். ஹேலியோஸ் உற்சாகத்துடன் தயாராகுவார். அவருக்காகத் தங்கரதம் தயாராக இருக்கும். நான்கு அழகிய குதிரைகள் வரும். அவற்றுக்கு "ஹபயேஸ்டஸ்" எனும் கடவுள் இறக்கைகளைக் கொடுத்துள்ளார். சிறகுள்ள குதிரைகள் ரதத்தில் பூட்டப்படும்.



ஏவொஸ் உதயத்தின் தெய்வம். அழகே உருவான பெண். அவளுக்கு வண்ணத்துப்பூச்சியினைப் போன்ற இறக்கைகள் உண்டு. அவை ஒளியில் மின்னும். அவளது உடல் பூப்போன்று மென்மையாக இருக்கும். அவள் மெதுவாக வருவாள். உதய தெய்வம் ஏவொஸ் தனது அழகிய இறக்கைகளை விரிப்பாள். வண்ண மலர்களைத் தூவுவாள். தங்கப் பாத்திரத்தில் இருந்து பனித்துளிகளைத் தெளிப்பாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி பூரிக்கும். தாவரங்களில் பட்டு வைரங்களைப் போல் ஜொலிக்கும். பூமி புத்தெழுச்சி கொள்ளும். புல் பூண்டு, மரஞ்செடி விழித்தெழுந்து கொள்ளும். யாவும் சிலிர்த்துக் கொள்ளும். ஏவோஸ் அரண்மனைக் கதவைத் திறப்பாள். கதவைத் திறந்ததும் ஹேலியோஸ் வெளிவருவார். அழகான ஆடை அணிந்திருப்பார். தலையில் கிரீடம் சுடர்விடும். அவரது மஞ்சள் பட்டாடை ஒளியினால் மின்னும். தலையில் அணிந்துள்ள கிரீடம் ஒளிவீசும். ஹேலியோஸ் தங்க ரதத்தில் புன்னகையோடு ஏறியிருப்பார். குதிரைகள் கனைத்துச் சிறகை விரிக்கும். அழகாக வானில் பறக்கும். எங்கும் ஒளிமயமாகும்.

உலகம் ஹேலியோஸை மகிழ்ச்சியோடு வரவேற்கும். ஏவொஸ் ஹேலியோஸை வழியனுப்பி விட்டுப் பார்த்திருப்பாள். அவர் வானில் பவனி வருவார். ஒளிக்கற்றைகள் எங்கும் பரவும். இருள் விலகியோடும். நட்சத்திரங்கள் பயந்தோடி ஒளிக்கும். உலகம் இயக்கம் கொள்ளும். பூக்கள் விரிந்து கொள்ளும். மெல்லிய காற்று அவற்றை அசைக்கும். நறுமணம் பரவும். வண்டுகள் இசைபாடும். பறவைகள் சேர்ந்து பல்லியம் இசைக்கும்.

ஹேலியோஸ் கடவுளின் ரதம் உயர உயரச் செல்லும். வலிமையான ஒளிக் கற்றைகள் எங்கும் பரவும். அவை வெப்பத்தை ஊட்டும். பூமி ஒளியைப்




பெறும். உயிரினங்கள் சக்தியையும் வாழ்க்கையையும் பெறும். இயக்க சக்தியைப் பூமி பெற்றுக் கொள்கிறது. ஹேலியோஸ் படிப்படியே வானில் செல்வார். வெப்பம் வளியைச் சூடாக்கும். சூடேறிய வளி விரிவடையும். விரிந்து பாரம் குறைந்து மேலெழும். அந்த

(லண்டன் அரும்பொருட் சாலையில் உள்ள படம் இங்கு தரப்பட்டுள்ளது. இது கி.மு. 5ம் நூற்றாண்டுச் சித்திரமாகும்).
வெற்றிடத் தைக் குளிர்ந்த வளி பாய்ந்து வந்து நிரப்பும். அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரஞ்செடி கொடிகள் அசையும். காற்றாகி வீசும். உலகத்தின் நீர்நிலைகள் ஆவியாக்கம் பெறும். முகிலாகி மேலெழும். ஒடுங்கி மழையாகப் பெய்யும். உலகத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். ஹேலியோஸ் சலிக்காது உலகத்தின் உயிரினங்களின் நலனுக்காக உழைப்பார்.

காலையில் வண்ணக் கோலத்தோடு புறப்படுவார். இதமாக இருக்கும். நண்பகலில் அவர் உலகத்தின் உச்சிக்கு வருவார். அப்போது வெப்பம் அதிகமாக இருக்கும். ஹேலியோஸ் கடவுளை வெற்றுக் கண்களால் பார்க்கமுடியாது. கண்கள் கூசும். தகதகவென்று ஜொலிப்பார். கிழக்கில் இருந்து மேற்காகப் பயணிப்பார்.

உலகத்துக்கு வேண்டிய வெப்பத்தைக் கொடுப்பார். அந்த வெப்ப சக்தியால் உலகம் இயங்கும். காலை தொடக்கம் மாலைவரை பயணித்து உழைப்பார். மாலையானதும் மேற்குப் பக்கம் அவரது தேர் பயணிக்கும். மேற்கு வானம் அழகாக சோடிக்கப் படும். இயற்கை மேகக்கூட்டங்களைத் தேடிப்பிடிக்கும். அவை பல்வேறு நிறங்களாளையும், வடிவங்களையும் பெறும். வானம் சிவந்து அழகூட்டும்.

களைத்து வரும் ஹேலியோஸ் கடவுளுக்கு மேகந்திரண்டு வரவேற்பளிக்கும். மின்னல் கீற்றுக்கள் படர்ந்து படம் கீறும். அவரை வரவேற்க ஏவோஸ் ஆயத்தமாகுவாள். தனது அழகிய இறக்கைகளை விரிப்பாள். வண்ண மலர்களைத் தூவுவாள். தங்கப் பாத்திரத்தில் இருந்து பனித்துளிகளைத் தெளிப்பாள். பூமியில் மெல்ல மெல்ல இருள் பரவும். பூமி பூரிக்கும். தாவரங்களில் பட்டு வைரங்களைப் போல் ஜொலிக்கும். மீண்டும் பூமி காலையைப்போல் புத்தெழுச்சி கொள்ளும். புல் பூண்டு, மரஞ்செடிகள் உயிர்துடிப்புக் கொள்ளும். உலகம் யாவும் சிலிர்த்துக் கொள்ளும்.

உலகம் ஹேலியோஸை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் வழியனுப்பி வைக்கும். ஹேலியோஸ் கடவுள் ஒரு நாள் பயணத்தை நிறைவு செய்வார். பயணம் முடிந்ததும் மேற்குச் சமுத்திரத்தில் இறங்குவார். அங்கே அவருக்காக ஒரு அழகிய தங்கப்படகு காத்திருக்கும். அதில் ஏறிக் கொள்வார். தேவர்கள் புடைசூழ்ந்து வாழ்த்தி நிற்பார்கள். படகு அவரது மாளிகைக்கு விரையும். ஏவோஸ் வரவேற்று மாளிகையினுள் அழைத்துச் செல்வாள். பின் தனது இருப்பிடம் செல்வாள். அவர் இரவு மாளிகையில் ஓய்வெடுப்பார். அடுத்த நாள் காலை உதயமாகும். அதே அழகோடு வெளிவருவாராம். அவரது இந்தச் செயல்களினால் பருவகாலங்கள் தோன்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியனும் சந்திரனும்

நமது உலகத்தில் பலபாகங்களிலும் மக்கள் வாழ்கிறார்கள். ஒவ்வொரு பகுதி மக்களும் பல கதைகளைக் கூறுகின்றார்கள். நமது புவியின் அமைப்பு விசித்திரமானது. துருவங்களில் சில காலங்களில் சூரியன் பிரகாசிப்பதில்லை. பலநாட்களுக்கு இருளாகவே இருக்கும். மறைந்த சூரியனை நினைப்பார்கள். உறைந்து போன காடுகளையும் பார்ப்பார்கள். கறுப்பு நிறக்கற்களையும் காண்பார்கள். குளிரும் தொடர்ந்து இருக்கும். அந்த நாட்களில் மக்கள் கூடியிருந்து கதைகளைக் கூறுவார்கள். அப்படிப் பட்ட கதைகளை இங்கு காணலாம்.

பொஹ்யொலா என்றொரு நாடு இருந்தது. பொஹ்யொலா என்றால் நீண்ட நாட்களுக்குச் சூரியன் மறையும் நாடு என்று பொருள். இவ்வாறான நாடுகள் பல நமது உலகத்தில் உண்டு. அவற்றை பொஹ்யொலா என்றழைப்பார்கள். அங்கே இருளும் குளிரும் நிலவும். பொஹ்யொலா நாட்டை லோவுஹி என்ற சூனியக்காரி ஆண்டுவந்தாள். அவள் ஒரு மாயக்கிழவி. அவளுக்கு அழகான ஒரு மகள் இருந்தாள். அவள் ஏழுநிற வானவில்லில் இருப்பாள். வெள்ளி ராட்டையில் தங்க நூலைக் கோர்ப்பாள். அழகான துணிகளை நூற்பாள். லோவுஹி அவளை பலசாலிகளுக்கு மணம் முடித்துக் கொடுக்க எண்ணினாள். பலரைத் தெரிவு செய்து மகளிடம் அனுப்பினாள்.

காலெவாலா என்பது சூரிய ஒளிமிக்க நாடு. அந்த நாட்டில் மூன்று வல்லவர்கள் வாழ்ந்தார்கள்.. ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லவர்கள். ஒருவனின் பெயர் வாய்மனன். அவன் இசையில் வல்லவன். மற்றவன் இல்மாரினன். அவன் பொறியியல் வல்லுனன். இரும்பினால் பல பொருட்களைச் செய்ய வல்லவன். மூன்றாமவன் லெமின்காய்னன். பலசாலியும் சிறந்த வேட்டைக்காரனும் ஆவான். இவர்களைத் தன்வசப் படுத்தித் தன்பிடியில் வைத்திருக்க லோவுஹி திட்டமிட்டாள். வாய்மன் ஞானம் உள்ளவன். இனிமையாகப் பாடுவான். அவனது இசையில் பறவைகளும் விலங்குகளும் மயங்கும். அவன் பாடலை ருசிக்கத் தேடி வரும். வாய்மனன் லோவுஹியின் மகளை நாடி வந்தான். லோவுஹி அவனை தனது மகளுக்கு அறிமுகம் செய்தாள். அவளை வாய்மனனுடன் வாழச் செய்தாள்.

சிறிது காலம் வாய்மனன் அவளோடு வாழ்ந்தான். ஆனால் அவள் வாய்மனனை மதிக்கவில்லை. மாயக்கிழவி லோவுஹி அவனைக் கையாலாகதவன் என்று கேலிசெய்தாள். பல கடினமான வேலைகளைச் செய்யத் தூண்டினாள். தாயும் மகளும் சேர்ந்து கேலி செய்தார்கள். வாய்மனன் நொந்து வெளியேறிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோவுஹி இல்மாரினனை அழைத்து வந்தாள். இவன் ஒரு கொல்லன். இரும்பு வேலைசெய்பவன். பொறிகளைத் தயாரிப்பதில் கெட்டிக்காரன். மிகுந்த பலசாலி. அவனது கரங்கள் அற்புதமானவை. அழகான வேலைப்பாடுகளைச் செய்வான். இதனை லோவுஹி அறிந்திருந்தாள். இல்மாரினன் 'சாம்போ' என்ற மந்திரப் பொறியைச் செய்து கொடுத்தான். அந்தப் பொறி தானாகவே இயங்கியது. அதனுள் ஒன்றையும் போட வேண்டியதில்லை. அப்பொறியிலிருந்து வேண்டியவற்றைப் பெறலாம். மா, அரிசியுடன் பணமும் தந்தது. மாயக்கிழவி லோவுஹி மகிழ்ந்தாள். தனது மகளை இல்மாரினனுக்குத் திருமணம் செய்து கொடுத்தாள். 'சாம்போ' மாயக்கிழவி லோவுஹிக்கு வேண்டிய அனைத்தையும் கொடுத்தது. லோவுஹிக்கு சந்தோசம். அதனால் அவனைத் தனது மகளுடன் சேர்த்து வைத்தாள். இல்மாரினன் மகிழ்ந்தான்.

ஒருநாள் இல்மாரினன் தனது மனைவியை அழைத்தான். தனது வீட்டுக்குப் போய்ச் சிலநாட்கள் தங்கிவிட்டு வரலாம் என்றான். அவளுக்கும் சந்தோசம். அவளும் சம்மதித்துப் புறப்பட்டாள். இல்மாரினன் வீட்டுக்குப் போனார்கள். அங்கு ஆடுகள் நிறைய இருந்தன. அவற்றை மேய்ப்பதற்கு இடையன் ஒருவன் இருந்தான். இல்மாரினனின் மனைவி பொல்லாதவள். அவள் சூனியக்காரி லோவுஹியின் மகள் அல்லவா?. ஆடு மேய்ப்பவன் பசியோடு வந்தான். அவனுக்கு ரொட்டி கொடுத்தாள். அதனுள் சிறுகற்களை வைத்துச் செய்தாள். அதனை இடையனிடம் கொடுத்தாள். இடையன் ரொட்டியை உண்டான். கற்கள் கடிபட்டன. அவள் வேண்டுமென்றே செய்ததை உணர்ந்தான். அவனுக்குக் கோபம் வந்தது. தனது ஆடுகளை ஓநாய்களாக மாற்றி விட்டான்.

அவை எஜமானியைக் கடித்துக் குதறின. இல்மாரினனுடன் பெரிய சண்டையிட்டாள். அவள் தனது தாய் வீட்டுக்குப் போய்விட்டாள். இல்மாரினன் இரக்க சுபாவம் உடையவன். தனது மனைவியைத் தேடி வந்தான். லோவுஹி இல்மாரினனைத் திட்டினாள். அவனைத் தகாத வார்த்தைகளால் ஏசினாள். 'கையாலாகாதவன்' எனக்கேலி செய்து அனுப்பிவிட்டாள். மனவருத்தத்தோடு இல்மாரினன் போய்விட்டான். மாயக்கிழவி லோவுஹி சந்தோசமாக இருந்தாள். 'சாம்போ' அவளிடம் இருந்தது. அவள் சாம்போவினால் சொத்துக்களைச் சேர்த்தாள். மாயக்கிழவியின் பேராசையை இல்மாரினன் புரிந்து கொண்டான்.

மூன்றாமவன் லெமின்காய்னன். அவனைப் பற்றி லோவுஹி அறிந்திருந்தாள். லெமின்காய்னன் பயமில்லாதவன். சிறந்த பலசாலி. நல்ல வேட்டைக்காரன் என்பதை அறிந்திருந்தாள். அவனை அணுகி தனது மகளுடன் வாழவழி செய்தாள். பல கடினமான வேலைகளைச் செய்யத் தூண்டினாள். லெமின்காய்னன் லோவுஹியின் திட்டங்களை அறிந்திருந்தான். மாயக்கிழவி அவர்களை நையாண்டி செய்தாள். அவனையும் அவள் கேலிசெய்யத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்தாள். அவனுக்கு வெறுப்பு வந்து விட்டது. தனது திட்டப்படி வேலைசெய்ய மறுத்தவனையும் துரத்தி விட்டாள்.

லோவுஹியிடம் பொருள்வளம் இருந்தது. 'சாம்போ' வேண்டியவற்றைக் கொடுத்தது. ஒரு மகாராணிபோல் வாழ்ந்தாள். அவளிடம் போர்வீரர்கள் இருந்தார்கள். மக்களையும் தன்வசப் படுத்தினாள். இல்மாரினன் வாய்மனிடம் சென்றான். அவர்கள் இருவரும் லெமின்காய்னனைச் சந்தித்தார்கள். தங்களுக்கு லோவுஹி செய்த கொடுமைகளை நினைத்து வருந்தினார்கள். மூவரும் மாயக்கிழவி லோவுஹியை எதிர்த்தார்கள். சாம்போவை மீட்டெடுக்கத் திட்டமிட்டார்கள். லோவுஹி மூர்க்கமடைந்தாள். பொஹ்யொலா மக்களை ஏவினாள். போர்வீரர்களை அனுப்பினாள். மக்களும் அவளுக்காக நின்றார்கள். அவர்கள் பலசாலிகளை எதிர்க்கப் புறப்பட்டனர். மக்கள் மூர்க்கத்தோடு புறப்பட்டார்கள். அவர்களது கைகளில் ஆயுதங்கள் இருந்தன. வாய்மனன் இதனைக் கண்டு கொண்டான். அவன் அந்த மக்களை நோகவில்லை. இப்போது வாய்மனன் தனது வல்லமையைக் காட்டினான். அவன் பாடலைப் பாடினான். பாடல் காற்றில் பரவியது.



என்ன அதிசயம்? கோபாவேசத்தோடு வந்தவர்கள் அப்படியே நின்றார்கள். பாடலின் இசை அவர்களை மெய்மறக்க வைத்தது. வந்த வேலையை மறந்தார்கள். அப்படியே உறங்கி விட்டார்கள்.

மூவரும் விரைந்தார்கள். சாம்போவைத் தூக்கிப் படகில் ஏற்றினார்கள். படகு விரைந்து சென்றது. சூனியக்காரி லோவுஹி ஆத்திரமடைந்தாள். அவர்களைத் துரத்த ஆரம்பித்தாள். பனி மூட்டத்தை ஏவிவிட்டாள். பனிமூட்டம் படகைச் சூழ்ந்து கொண்டது. படகு திசைதெரியாது திக்குமுக்காடியது. வாய்மனன் வாளை எடுத்தான். பனிமூட்டத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடினான். பனிமூட்டம் கலைந்தது. ஆவேசம் கொண்ட லோவுஹி அலைகளைத் தூண்டினாள். பேரலைகள் ஆர்ப்பரித்தன. படகைத் தாக்கின. அலைகளை எதிர்த்துப் படகைச் செலுத்தினார்கள். லோவுஹி காற்றை அழைத்தாள். கடுமையாகத் தாக்கக் கட்டளையிட்டாள். காற்று வீசியது. எனினும் படகு காற்றின் எதிர்திசையில் விரைந்தது. போர் வீரர்களையும் ஏவினாள். பெரும் சண்டை நடந்தது. படகு உடைந்தது. பலசாலிகள் உயிர் தப்பிச் சென்றார்கள். சாம்போ கடலில் வீழ்ந்து உடைந்தது.

வாய்மனன் முதிர்ந்த ஞானி அல்லவா? அவன் சாம்போவின் பாகங்களைத் தேடிப்பிடித்தான். ஒன்று சேர்த்தான். "காலெவாலா நாட்டில் மகிழ்ச்சி நிலவும்" என்றான். அவ்வளவுதான். அங்கு உறைபனி உருகியது. வரட்சி பறந்தோடியது. மரங்கள் துளிர்விட்டன. பசுமை இலைகள் காற்றில் அசைந்தன. மரஞ்செடி கொடிகளில் மொட்டுக்கள் நிறைந்தன. பூக்கள் மலர்ந்தன. காய் கனிகள் தொங்கின. வயல்கள் விளைந்து கூத்தாடின. பறவைகள் பாடின. மக்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கியது. எங்கும் சந்தோசம் பொங்கியது. சூனியக்காரி லோவுஹி சந்தர்ப்பம் பார்த்திருந்தாள். அவள் மனதில் பழிவாங்கும் உணர்வு வளர்ந்தது. யாருமே எதிர்பார்க்காத திட்டத்தைத் தயாரித்தாள். மூவரையும் வேவு பார்த்தாள். வாய்மனன் காட்டில் பாடும் நாளைத் தேர்ந்தெடுத்தாள்.

ஒருநாள் வாய்மனன் மெய்மறந்து பாடினான். அந்தப் பாடல் அற்புதமாக இருந்தது. சகல உயிரினங்களும் கூடியிருந்து ரசித்தன. உறக்கத்தில் ஆழ்ந்திருந்தன. சூரியனும் சந்திரனும் கீழிறங்கி வந்தன. மரக்கிளைகளில் அமர்ந்தன. பாடலை மெய்மறந்து ரசித்தன. மெதுவாக சூனியக்காரி லோவுஹி வந்தாள். சூரியனையும் சந்திரனையும் சிறைப்பிடித்தாள். அப்படியே தூக்கிக் கொண்டு போனாள். பூமிக்கடியில் ஒரு அறை இருந்தது. அந்த அறையில் போட்டுப் பூட்டிவிட்டாள். சூரியனும் சந்திரனும் எங்கே?. வானில் அவற்றின் பவனி இல்லை. சூரிய ஒளியில்லை. சந்திரனின் சுடரில்லை. இருட்டும் குளிரும் வந்தன. வெப்பம் இல்லை. உறைபனி உறைந்தது. பூமி அழுதது. காடு மலைகள் இருண்டு கிடந்தன. காலெவாலா நாடு வாடியது. சூனியக்காரி லோவுஹி மகிழ்ந்தாள்.

சூனியக்காரி லோவுஹிவுக்கு மனதில் பயமிருந்தது. பலசாலிகளை நினைத்தாள். அவர்கள் வந்தால் என்ன செய்வது.? அவர்கள் இந்தக் குளிரில் மாண்டிருப்பார்கள். இனியெங்கே வரப்போகிறார்கள். அவள் அடிக்கடி குழம்பினாள். அவர்களைப் போய்ப் பார்த்தால் என்ன? ஒரு கழுகாக மாறினாள். காலெவாலா நாட்டுக்குப் பறந்து போய்த் தேடினாள். இல்மாரினனைக் கண்டாள். இவன் சாகவில்லையே. அவள் அவனருகில் சென்றாள். அவன் பட்டறையில் வேலையில் ஈடுபட்டிருந்தான். கழுகு அவன் பக்கத்தில் போயிருந்தது. உற்றுப்பார்த்தது. "நீ என்ன செய்கிறாய்."? கழுகு கேட்டது. "கழுத்துப் பட்டை செய்கிறேன்." என்றான். "எதற்காகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செய்கிறாய்"? கழுகு தொடர்ந்தது. "பொல்லாத மாயக்கிழவி லோவுஹி இருக்கிறாள். அவளைப் பிடிக்கப் போகிறோம். அவள் தப்ப முடியாது. மலையடிவாரத்தில் இரும்புப் பாறை இருக்கிறது. அதில் மாயக்கிழவி லோவுஹியின் கழுத்தில் இதனை மாட்டிவிடுவோம். பின் அவளைப் பிடித்துச் சங்கிலியால் பிணைத்து கட்டப்போகிறோம்". என்றான். அவனை உற்றுப்பார்த்தாள். புறப்பட்டு விட்டாள்.

பலசாலிகள் முன் தான் தோற்றுவிட்டதை உணர்ந்தாள். குளிரும் இருட்டும் அவர்களைக் கொல்லவில்லை. தனது நாட்டுக்குப் பறந்தாள். பூமியடி அறைக்குப் போனாள். அறையைத் திறந்தாள். "நீங்கள் போகலாம்." என்று சூரியனையும் சந்திரனையும் விடுவித்தாள். சூரியனும் சந்திரனும் வானில் பவனி வந்தன. காலெவாலா நாட்டில் ஒளிபரந்தது. மக்கள் மகிழ்ந்தார்கள். குளிரையும் இருளையும் வெற்றி கொண்டார்கள். அவர்கள் சூனியக்காரி லோவுஹியைக் கண்டு பயப்படுவதில்லை. இப்போது சூரியன் மலைகளில் மறைந்தாலும் அவர்களுக்குப் பயமில்லை.

## சோலும் மானியும்

இக்கதையும் சூரியனையும் சந்திரனையும் பற்றியது. ஸ்கன்டிநேவியா நாட்டில் நிலவுகிறது. கேட்பதற்கு நல்ல கதை. வாசிப்பதற்கு ஏற்றது. கற்பனையை வளர்க்க வல்லது. வாசித்துப் பார்ப்போமா?

முற்காலத்தில் சூரியனோ சந்திரனோ இல்லை. பூமியில் இருட்டின் ஆட்சி நிலவியது. வெப்பம் இல்லை. காற்று வீசுவதில்லை. மரஞ்செடிகள் அசைவதில்லை. மரங்கள் உயிர்ப்பற்று நின்றன. இலைகளோ, பூக்களோ இல்லை. புல்பூண்டுகள் வளரவில்லை. மனிதர்கள் கஸ்டமான வாழ்க்கையை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தினர். விலங்குகளும் துன்புற்றன. பறவைகள் பாடுவதில்லை. பூக்கள் மலர்வதில்லை. ஆறுகள் சலசலத்து ஓடுவதில்லை. இதனையிட்டு மனிதர்கள் தேவர்களுக்கு முறையிட்டார்கள். அவர்களது வேண்டுதலைத் தேவர்கள் உணர்ந்தனர்.
கள் வல்லமையுடையவர்கள். விவாதித்தார்கள். மந்திர தந்திரங்கள் தெரிந்தவர்கள். தேவலோகத்தில் தேவர்கள் ஒன்றுகூடினார்கள்.

ஓதின் என்ற தேவன் தனது சகோதரர்களை அழைத்தான். அவர்களோடு நெருப்பு நாட்டுக்குச் சென்றான். அங்கிருந்து நெருப்பைக் கொண்டு வந்தார்கள். பலநாட்களாக முயற்சியில் ஈடுபட்டாரகள். முதலில் சூரியனைச் செய்தார்கள். அது கதகதப்பாக இருந்தது. ஆறுதலாகச் சந்திரனைச் செய்தார்கள். அது தண்மையாக இருந்தது. அவர்களது படைப்பில் இவை மிக அழகானவையாக இருந்தன. இவற்றால் பூமிக்கு நன்மை உண்டாகும். ஆனால் இவற்றை எப்படி வானத்தில் செலுத்துவது.? சேர்ந்து யோசித்தார்கள். வானத்துக்கு எடுத்துச் செல்பவர்களைத் தேடினார்கள். பல தேவர்கள் வந்து பார்த்துச் சென்றார்கள். பூமியில் ஆதன் இருந்தான். தேவர்களின் அற்புதப் படைப்பைக் கேளிவியுற்றான்.

ஆதனுக்கு இரு குழந்தைகள் இருந்தார்கள். அந்தப் பொருட்களின் பெயரை வைக்கத் தீர்மானித்தான். முதற்குழந்தை ஆண். அவனுக்குச் சோல் என்று பெயரிட்டான். சோல் என்பது சூரியனைக் குறிப்பது. இரண்டாவது பெண் குழந்தை. அவளுக்கு மானி என்று பெயரிட்டான். மானி என்பது சந்திரனைக் குறிப்பதாகும். குழந்தைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மிகவும் அழகாகனவர்கள். தேவர்களை விடவும் அழகானவர்கள். பூமியில் அவர்களை விடவும் அழகானவர்களே இல்லை. தேவலோகத்திலும் இல்லை. அதனால் தந்தை தலைக்கனம் கொண்டிருந்தான். அகங்காரம் தேவர்களுக்குப் பிடிக்காதது. அவனது தலைக்கனத்தைக் குறைக்க வேண்டும். என்ன செய்யலாம் என யோசித்தார்கள். தேவர்கள் அவனைத் தண்டிக்க எண்ணினார்கள்.

ஓதின் தனது பரிவாரங்களோடு பூமிக்கு வந்தார். சோலையும் மானியையும் பிடித்தார். தேவலோகத்துக்கு அழைத்து வந்தார். ஓதினிடம் தங்கரதம் இருந்தது. அந்தரதத்தில் ரதத்தில் நான்கு வெண்குதிரைகள் பூட்டப்பட்டன. அதில் சூரியனை ஏற்றினார்கள். ரதத்தை சோல் ஓட்டினான். சோல் என்ற சூரியன் கிழக்கிலிருந்து புறப்பட்டான். ரதம் வானை நோக்கி விரைந்தது. வெயில் பூமியைத் தொட்டது. சூரியன் வானில் பவனி வந்தான். வயல்கள் விளைந்தன. மரங்கள் பூத்தன. காய்களும் பழங்களும் தோன்றின. பூக்கள் மலர்ந்தன. காற்றசைந்தது. ஒலி பிறந்தது. மக்கள் மகிழ்ந்தனர். ஒரு நாட்பயணத்தின் பின் சூரியன் மேற்காக மறைந்தான்.

மானிக்கும் தங்கரதம் கொடுபட்டது. சந்திரனை ரதத்தில் ஏற்றினார்கள். சோலைப்போல் கிழக்கிருந்து சந்திரனின் பயணம் தொடங்கியது. மானி ரதத்தில் முன்னிருக்கையில் இருந்தாள். மானி குதிரைகளை முடுக்கினாள். குதிரைகள் வானில் விரைந்தன. பூமியில் நிலவொளி பரவியது. எங்கும் மகிழ்ச்சியின் ஆட்சி. இரவு முழுவதும் ஓய்வில்லாப் பயணம். முானியின் ரதமும் மேற்காகச் சென்று மறைந்தது.

சோலுக்கு இரவு மட்டுமே ஓய்வு. மானிக்கு பகல் மட்டுமே ஓய்வு. எப்போதாவது வெகு துாரத்தில சோலின் உருவம் தெரியும். அப்போது மானி கையசைத்துக் கொள்வாள். சந்தோசத்தில் சோலும் கையசைப்பான். எப்போதாவது நெஞ்சு பொறுக்காமல் அழுவார்கள். அப்போது புகைமூட்டம் சூழ்ந்திருக்கும்.

## வானத்தின் கதை

நமது நாட்டில் இப்படி ஒரு கதை உலாவருகிறது. மிகவும் வேடிக்கையானது. முன்னொரு காலத்தில் நடந்த கதை. அவ்வைப் பாட்டி வீட்டில் இருந்தார். அவர் எப்போதும் சுத்தமாகவே இருப்பார். அவர் வீடு அழகாக இருக்கும். சுத்தமாகவும் இருக்கும். காலையும் மாலையும் முற்றத்தைக் கூட்டுவார். தென்னோலைகளில் இருந்து ஈர்க்கிள்களை எடுப்பார். ஈர்க்கிள்களை ஒன்றாக்கி ஒரு கட்டாகக் கட்டுவார். விளக்குமாறு தயாராகிவிடும். விளக்குமாற்றை இரு கைகளாலும் பிடிப்பார். குனிந்தவாறே கூட்டித் துப்பரவாக்குவார். மெதுவாக நிமிருவார். முற்றம் அழகாக இருக்கும். குப்பை கூளங்களை ஒன்று சேர்ப்பார். அவற்றைக் குழியில் போடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை சந்திரன் வானிலிருந்து பார்க்கும். பாட்டியோடு சேர்ந்து விளையாடவேண்டும். என்ன செய்வது? இன்னுமொரு ஆள் வேண்டும். வானத்தையும் அழைத்தது. வானத்தோடு சேர்ந்து மெதுவாகக் கீழிறங்கும். பாட்டியின் முதுகில் தட்டிவிட்டு ஓடும். சந்திரன் ஓடுவதற்கேற்ப வானமும் மேலுயரும். பாட்டிக்குக் கோபம் வரும். பாட்டி நிமிருமுன் மேலோடிப் போய்விடும். இப்படி விளையாட்டுத் தொடரும். சந்திரனுக்கு மனதினுள் சந்தோசம் பிறக்கும். ஆனால் பாட்டிக்குத் தொல்லையாக இருந்தது. இந்தத் தொல்லை நீடித்தது. கோபத்தையும் ஊட்டியது. ஒருநாள் பாட்டி உசாராக இருந்தார். வானம் சந்திரனோடு கீழிறங்கியது. மெதுவாகச் சத்தமின்றி வந்தது. எதிர்பாராதவாறு பாட்டி முந்திவிட்டார். கையிலிருந்த விளக்குமாற்றை எடுத்தார். வானத்துக்கு போட்டார் ஒரு அடி. ‘‘இனிமேல் கீழிறங்கி வராதே’’” என்று கோபத்தோடு கூறினார். வானத்துக்கு ரோசம் வந்து விட்டது. அன்றிலிருந்து வானமும் கீழே வருவதில்லை.

## கிரேக்க நாட்டில் நிலா

சோவியத் நாட்டின் தெற்கே கிர்கிஸ்யா உள்ளது. அங்குள்ள மக்கள் சந்திரனைப் பற்றி இவ்வாறு கூறுவார்கள். சந்திரனை அவர்கள் பெண்ணாகக் கருதுகிறார்கள்.

கிர்கிஸ்யா நாட்டில் கோமான் ஒருவர் வாழ்ந்தார். அவர் பெரிய பணக்காரர். அவருக்கு அழகான மகள் இருந்தாள். அவளது முகம் ஒளிவீசும். கண்கள் பளபளக்கும். உடல் தங்கம்போல் மின்னும். அவளுக்கு நிலா என்று பெயரிட்டனர். நிலா பேரழகியாக இருந்தாள். அவளை மணம்செய்யப் பலர் முன்வந்தனர். ஆனால் அவர்களை அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவள் ஒரு மாலுமியைக் காதலித்தாள். அவனும் அவளை நேசித்தான். ஆனால் அவளது தந்தை எதிர்ப்புத் தெரிவித்தார். ஊர் பேர் தெரியாத மாலுமியை அவர் வெறுத்தார். மாலுமி மனமுடைந்தான். பேரும் புகழும் இல்லாததால்தானே இந்த நிலை?. கடுமையாக யோசித்தான்.

தூரநாட்டுக்குச் சென்று வீரதீரச் செயல் புரியவேண்டும். மாபெரும் வீரனாகத் திரும்ப வேண்டும். பொருளும் புகழும் தேடவேண்டும். தான் செல்வந்தனாக வந்தால் மறுப்பு இருக்காது. நிலாவின் தந்தை ஏற்றுக் கொள்வார். இது அவனது பெருவிருப்பாக மாறியது. நிலாவிடம் தனது முடிவைச் சொன்னான். அவள் அழுதாள். எனினும் அவனது விருப்பத்துக்கு அவள் தடைபோடவில்லை. அவன் விடை பெற்றுச் சென்றான்.

தூரதேசம் நோக்கிக் கடலில் பயணமானான். நாட்கள் நகர்ந்தன. காலங்கள் புரண்டோடின. அவன் வரவே இல்லை. நிலா அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடற்கரைக்கு வருவாள். அவன் வருகிறானா எனத் தேடுவாள். ஏங்கி அழுவாள். ஆனாலும் அவன் வரவே இல்லை. கோமானாகிய அவள் தந்தை இறந்துவிட்டார். ஆடம்பரமான மாளிகையில் நிலா மட்டுமே இருந்தாள். நிலா திருமண ஆடையை அணிவாள். கடற்கரைக்குச் செல்வாள். தனது மனம் கவர்ந்தவனைத் தேடுவாள். தொலைதூரத்தை நோக்குவாள். ஏமாற்றத்தோடு ஏங்குவாள். ஒவ்வொரு இரவும் தங்கப் படகில் ஏறுவாள். நட்சத்திரத் தோழிகளுடன் தனது காதலனைத் தேடுவாள். தொடர்ந்து தேடிக் கொண்டே இருக்கிறாள். அதனால்தான் வெளிறிப் போய் வருத்தமாக உள்ளாள். இப்படிச் சந்திரனின் கதை செல்கிறது.

## பேரழகி கலிஸ்டா



அது மிகப் பழங்காலம். மக்கள் உலகைப் பார்த்தார்கள். நமது உலகம் அழகானது. நீலவானம் குடைபிடிக்கும். நிலமும் கடலும் உறவாடும். சூரியன் உலா வரும். நிலவு நீந்தி வரும். நட்சத்திரக் கூட்டம் கண் சிமிட்டும். மனிதர்கள் அதனை இரசித்தார்கள். வானில் தெரியும் நட்சத்திரக் கூட்டங்களையும் பார்த்தார்கள். உலகத்தில் பல நாடுகள் இருந்தன. அதில் ஒன்றுதான் அகர்தியா. அகர்தியா செல்வச் சிறப்புமிக்க நாடாக இருந்தது. அந்த நாட்டின் அரசன் லவாகோன். அவன் சிறந்த வீரன். தனது நாட்டை நல்லாட்சி செய்தான். மக்கள் மன்னனைப் போற்றினார்கள். குடிமக்கள் நல்லவர்களாக இருந்தார்கள். லவாகோனுக்குப் பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்?. யோசித்தார்கள். கலிஸ்டா அற்புதமான பெயர். சொல்லிப் பார்த்தார்கள். இனிமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதற்குக் கலிஸ்டா எனப் பெயர் சூட்டினார்கள். குழந்தை மிகவும் அழகானது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. கலிஸ்டா துருதுருவென்று இருப்பாள். பார்ப்போரை மயக்கும் அழகுக்கண்கள். வசீகரமான வனப்பு. பூக்களாய் உதிரும் சிரிப்பு. மக்கள் அனைவரும் கலிஸ்டாவை நேசித்தார்கள். மிகவும் அழகியாக வளர்ந்தாள்.

தேவலோகம் வானத்தில் இருந்தது. அங்கே தேவர்கள் இருந்தார்கள். தேவலோகத்தில் உள்ளவர்கள் மிகவும் அழகானவர்கள். அவர்களது குரல் இனிமையாக இருக்கும். இசைபாடித் திரிவார்கள். அவர்கள் வானில் இருந்து கீழிறங்கி வருவார்கள். மண்ணுலகத்தில் உலாப் போவார்கள். உலகத்தின் அழகில் மயங்கி இரசிப்பார்கள். கலகலப்பாக உரையாடுவார்கள். அந்த ரசனையோடு திரும்பி விடுவார்கள்.

தேவலோகத்தில் ஹேரா என்னும் தேவதை இருந்தாள். தேவலோகத்தில் அவள்தான் பேரழகி. அவள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவள். மந்திரவாதி போல் சாகசங்கள் செய்வாள். அவளது கணவனும் வல்லமை படைத்தவன். அவனது பெயர் ஸேவுஸ். மிகவும் ஆற்றல் படைத்தவன். வழமைபோல் ஒரு நாள் தேவதைகள் மண்ணுலகம் வந்தார்கள். உல்லாசமாகப் பல இடங்களுக்கும் சென்றார்கள். சுற்றி ஓடித்திரிந்தார்கள். அவர்களது பார்வை ஓரிடத்தில் தரித்தன. தற்செயலாகக் கலிஸ்டாவைக் கண்டார்கள். அவளது அழகில் சொக்கி நின்றார்கள். அவர்களது வாய் முணுமுணுத்தன.



கருநாவற் பழம்போன்ற கண்கள். கார்முகில் கூந்தல். முத்துப்போல் சிரிப்பு. தக்காளிப் பழம்போன்ற கன்னங்கள். காந்தள் விரல்கள். சோடித்த தேர் அசைவதுபோல் நடை. இவளல்லவோ அழகி. விண்ணுலகத்தின் அழகி ஹேராதான். ஹேராவைவிடவும் கலிஸ்டா பேரழகி. விண்ணுலகிலும் மண்ணுலகிலும் பேரழகி கலிஸ்டா. புகழ்ந்தார்கள். புகழ் பாடிக்கொண்டே விண்ணுலகம் சென்றார்கள். கலிஸ்டா அவர்களது கதைகளில் உலா வந்தாள். செய்தி விண்ணுலகில் பரவியது. அனைவரது வாய்களிலும் கலிஸ்டாவின் பெயர் குடிகொண்டது. ஹேராவின் செவிகளிலும் பாய்ந்தது.




ஹேரா கோபத்தால் சிவந்தாள். என்னைவிடவும் ஒரு அழகியா? அதுவும் மண்ணுலகிலா? எனக்குப் போட்டிக்கு இன்னொருவளா? அவள் மனதில் பொறாமை குடிகொண்டது. கலிஸ்டாவை நேரில் பார்க்கப் புறப்பட்டாள். கலிஸ்டா தன்னை மறந்து விளையாடினாள். ஹேராவும் கலிஸ்டாவின் அழகில் மயங்கினாள். தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். தனது மனதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாக்கிக் கொண்டாள். கலிஸ்டாவை ஒளித்துக் கட்டத் தீர்மானித்தாள். அவளது அழகைச் சிதைக்கத் திட்டமிட்டாள். கலிஸ்டாவைத் தீர்த்துக் கட்ட முனைந்தாள்.

ஹேராவின் கணவன் ஸேவுஸ். மிகவும் வல்லமையுடையவன். மிகவும் அழகானவன். அத்துடன் இரக்க முள்ளவன். ஹேராவின் போக்கை அவதானித்தான். அவளது இந்த மாற்றத்துக்கான காரணத்தைப் புரிந்து கொண்டான். "ஹேரா அமைதியாக இரு. என்றென்றும் நீதான் பேரழகி. நீ தேவலோகத்து அழகி. கலிஸ்டா பாவம். அவள் மண்ணுலகத்துப் பெண். நீ பொறாமை கொள்ளலாமா"? ஸேவுஸ் அறிவுரைகள் சொன்னான். ஆனால் ஹேரா அவற்றைக் கேட்கவில்லை. பிடிவாதமாக இருந்தாள். நாட்கள் நகர்ந்து விரைந்தன. ஹேராவின் போக்கில் மாற்றத்தைக் காணவில்லை. ஹேரா மறந்துவிட்டாள் என்று இருந்து விட்டார். கலிஸ்டாவைக் காப்பாற்றலாம் என்று எண்ணினார்.



ஒரு மாலைப் பொழுது. ஹேரா மண்ணுலகில் உலா வந்தாள். செவ்வந்தி மாலைப் பொழுது அழகைக் கொட்டிக் கொண்டிருந்தது. கலிஸ்டா தேவதைபோல் உலா வந்தாள். கோள்ளை அழகுக் குவியல்போல் இருந்தாள். கலிஸ்டாவை நேரில் பார்த்தாள். கலிஸ்டாவின் அழகு ஹேராவையே ஈர்த்தது. பொறாமையால் வெந்து வெடித்தாள். இவள் இருந்தால் எனது புகழ் அழிந்து விடும். இவளை விட்டு வைக்கமாட்டேன். அவளது உள்ளம் குமுறியது. உதடுகள் துடித்தன. தண்டனை கொடுக்கத் தீர்மானித்தாள். நினைத்தது போல் செய்தும் விட்டாள். கலிஸ்டாவைச் சில நாட்களாகக் காணவில்லை. பலர் கலிஸ்டாவைத் தேடினார்கள். அவள் எங்கும் தென்படவே இல்லை.

ஒருநாள் அசிங்கமான கரடியைக் கண்டார்கள். அந்தக் கரடியினால் நடக்கமுடியாது. தலை தொங்கியபடி கிடந்தது. மெல்ல மெல்ல அசைந்தாடி நடந்துதிரிந்தது. அதனை ஸேவுஸ் கண்டார். நடந்ததை எண்ணிப் பார்த்தார். ஹேரா முந்திவிட்டதை உணர்ந்தார். மிகவும் கவலைப்பட்டார். கலிஸ்டாமேல் இரக்கம் கொண்டார். அதன் அருகில் சென்றார். இரக்கத்தோடு தடவிவிட்டார். அந்தக் கரடியின் வாலைப் பற்றினார். தனது பலத்தையெல்லாம் கூட்டினார். அப்படியே இழுத்துக் கொண்டு போனார். சுழற்றி வானில் வீசினார். கரடி வானை நோக்கி விரைந்தது. நீ வானிலே நட்சத்திரமாக ஒளிவீசிக் கொண்டிருப்பாயாக. கட்டளை இட்டார். அந்த வீச்சினால் கரடியின் வால் நீண்டுவிட்டது. இருள் வானைக் கவ்விக் கொண்டது. ஸேவுஸ் வானைப் பார்த்தார். அவரது உதட்டில் புன்னகை மலர்ந்தது. கலிஸ்டா வானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரக் கூட்டங்களோடு சேர்ந்து பிரகாசித்தாள். கலிஸ்டா பெருங்கரடியாக வானில் மின்னுகிறாள். இன்றும் வானில் கலிஸ்டா வலம்வருவதைக் காணலாம்.. இக்கதை ருசிய நாட்டில் வழங்குகிறது. ருசியர்கள் இதனை பெரிய கரடி என்பார்கள்.

## கலிஸ்டா அகப்பையானாள்

சீனா பரந்த தேசம். உலகில் அதிக மக்கள் வாழும் நாடு. மிகப்பழங்காலம் தொடக்கம் மக்கள் வாழும் இடம். சீன நெடுஞ்சுவர் உலக அதிசயங்களில் ஒன்று. சீனர்கள்தான் வெடிமருந்தைக் கண்டறிந்தவர்கள். பட்டாசு அவர்கள் செய்ததுதான். அதனால்தான் 'சீனவெடி' என்ற பெயர் வந்தது. சீனாவிலும் இந்த நட்சத்திரக் கூட்டம் தெரியும். சீனர்களது கண்களில் அகப்பை போல் வானில் தெரிந்தது. சீனர்களும் கதைகளைக் கூறிவைத்தார்கள்.

குவாங்கோ சீனாவின் ஒரு பகுதிநாடு. குவாங்கோ நாட்டு மன்னன் சோயுன். சகல வல்லமை படைத்தவன். ஆணழகன். பேராற்றல் வாய்ந்தவன். அவன் ஒருநாள் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். வேட்டையாடும் ஆர்வத்தில் நாட்டின் எல்லையைக் கடந்துவிட்டான். களைப்பு மிகுதியால் இளைப்பாற மரநிழலில் நின்றான். காற்று வீசிக்கொண்டிருந்தது. அது சுவாங்கோ நாடு. அந்த நாட்டின் அரசன் யுன்வாங். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவளது பெயர் தேயுஸ். அவள் பேரழகி. அந்தக் நாட்டு வழக்கப்படி தங்கள் உறவினர்களைத்தான் திருமணம் செய்யவேண்டும். தவறினால் அந்நாட்டு ராஜகுருவின் தண்டனை கிடைக்கும். இளவரசி தேயுஸ் தனது தோழிகளோடு உலாவந்தாள். ஆடிப்பாடி விளையாடினாள்.

அனைவரும் புற்தரையில் அமர்ந்து கொண்டனர். சிற்றுண்டி பரிமாறிச் சுவைத்து உண்டார்கள். அரசன் சோயுன் அக்காட்சியைக் கண்டான். அவர்களது செயலை அவதானித்தான். தேயுஸ் அழகில் மயங்கினான். தேயுஸ் அரசனைக் கண்டு கொண்டாள். நாணம் அவளை ஆட்கொண்டது. சோயுன் அவளருகே சென்றான். அவனது முகத்தை தேயுஸ் அவதானித்தாள். மன்னன் களைத்திருந்தான். தேயுஸ் தோழிகளை அழைத்தாள். குறிப்பறிந்த தோழிகள் உணவோடு வந்தார்கள். தங்கத்தாலான அகப்பையை தேயுஸ் எடுத்தாள். தங்கத்தட்டில் உணவை வைத்து அரசனிடம் நீட்டினாள். ராஜகுருவுக்கு இச்செய்தி கிட்டியது. அவர் அவ்விடத்துக்கு வந்தார். அதனைத் தேயுஸ் கவனிக்கவில்லை.


அவளது கவனம் சோயுன் மேல் இருந்தது. அவளது கையில் அகப்பை இருந்தது. இராஜகுரு வந்ததைக் கவனிக்கவில்லை. அவரால் சகிக்க முடியவில்லை. அவருக்குக் கோபம் வந்து விட்டது. "நீ வானத்தில் அகப்பை வடிவத்தில் நடசத்திரமாகப் போவாய்" சபித்துவிட்டுப் போய்விட்டார். தேயுஸ் அகப்பை வடிவில் நட்சத்திரமாக மாறிவிட்டாள். மக்கள் செய்தியறிந்து வருந்தினார்கள். அவர்கள் வானைப் பார்த்தார்கள். அங்கே அகப்பை வடிவில் நட்சத்திரங்கள் தெரிந்தன. அதனை அவர்கள் 'பே தேயு' என்றார்கள். 'பே தேயு' என்றால் அகப்பை என்று பொருள். தேயுஸ் அகப்பை வடிவத்தில் இன்றும் வானில் உலாவருகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேணமிட்ட குதிரையான கலிஸ்டா

மத்திய ஆசியாவில் மொசிதாஸ் என்றொரு நாடு இருந்தது. வளமிக்க அந்த நாட்டை சுமோஸ் ஆண்டு வந்தான். அவனது ஆட்சியில் எந்தக்குறையும் இருக்கவில்லை. மக்கள் சந்தோசமாக வாழ்ந்தனர். அயல்நாட்டில் கனோதிஸ் என்ற அழகி இருந்தாள். அந்த நாட்டில் அவள்தான் மிகவும் அழகி. ஆனால் சரியான வாயாடி. அவளுக்குத் தான் பேரழகி என்றொரு ஆணவம் இருந்தது. அவள் பிறரை மதிப்பதில்லை.



சுமோஸ் மன்னன் கனோதிஸின் அழகில் மயங்கினான். அவளைத் திருமணம் செய்ய ஆவல் கொண்டான். தனது விருப்பத்தைத் தெரி வித்தான். தனது அழகில் மன்னன் மயங்கி விட்டதை அறிந்தாள். அவளுக்கு ஆணவம் கூடியது. மன்னனை ஆட்டிப்படைக்க எண்ணினாள். மன்னனை விரும்பாதது போல் காட்டிக் கொண்டாள். ஆனால் மகாராணி ஆகவேண்டும் என்பதை விரும்பினாள். பல நிபந்தனைகளை விதித்தாள். திருமணத்தின் பின் பூரண சுதந்திரம் வேண்டும் என்றாள். மன்னன் யாவற்றையும் ஏற்றுக் கொண்டான்.

அயோமிஸ் மாமேதையாக விளங்கினார். தவத்தினால் மனவலிமை மிக்கவர். அவர் சுமோஸின் குருவாகவும் விளங்கினார். சுமோஸ் தனது விருப்பத்தைக் குருநாதரிடம் கூறினான். அவர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். "விதி யாரைத்தான் விட்டது. சரி உன் விருப்பம். பின்விளைவு துன்பத்தைத் தரும்". என்றார். "நீங்கள் இருக்க எனக்கேன் பயம்"? என்றான். "சரி உன் விருப்பம் போல் நடக்கட்டும்" என்றார். அவர் நடையைக் கட்டினார். சுமோஸ் திருமணம் நடந்தது.

நாட்கள் நகர்ந்தன. மன்னனின் வாழ்க்கை துயரமாகியது. கனோதிஸ் மன்னனை ஆட்டிப் படைத்தாள். அவள் கேட்பதை எல்லாம் கொடுத்தான். எடுத்ததற்கெல்லாம் கோபித்தாள். கெட்ட வார்த்தைகளை அள்ளி வீசினாள். மன்னனை வாய்க்கு வந்தபடி ஏசினாள். தரக்குறைவாக மதித்தாள். அவளே மகாராணியாகி விட்டாள். மன்னன் அரச சபைக்கே வருவதில்லை. மக்களுக்கு கனோதிஸ் ஆட்சி பிடிக்கவில்லை. வரிச்சுமை மக்களை வாட்டியது. கொடுங்கோன்மை தலைவிரித்தாடியது. மன்னன் வாடி வதங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோதிஸ் திடீரென மொசிதாஸ் நாட்டுக்கு வந்தார். மன்னனின் பரிதாபநிலையைக் கண்டார். கனோதிஸின் கொடுங்கோன்மையை நேரில் பார்த்தார். கனோஸிடம் சென்றார். அவள் அவரைப் பார்க்க மறுத்து விட்டாள். அவருக்குக் கடும் கோபம் வந்தது. காவலை மீறி கனோஸிடம் சென்றார். அவள் கடுங்கோபத்தோடு பேசினாள். "ஏய்.. நீ யார்? என்னிடம் வந்து கதைப்பதற்கு உனக்கு எப்படித் தைரியம் வந்தது? போ வெளியே"? கத்தினாள். அயோஸ் சீற்றம் கொண்டார். "ஏய்... கனோஸ் ..என்னைப் பார் .. என் கோபத்தைக் கிளறிவிட்டாய். சுமோஸ் மன்னன் மிகவும் நல்லவன். அவன் உன்னை மனதார நேசித்தான். அதனால்தான் பார்க்கிறேன். இல்லாவிட்டால்..." அவர்முடிக்கவில்லை.

"இல்லாவிட்டால் என்ன செய்வாய்?. என்னை என்ன செய்ய முடியும்"? கோபாவேசத்தோடு சத்தமிட்டாள். சுமோஸ் மன்னன் கூனிக்குறுகி உள்ளே வந்தான். "ஏய் ..சுமோஸ்.. எங்கே நீ வந்தாய்? போ வெளியே.." அவனை அடிக்க எழுந்து வந்தாள். அயோஸ் நெருப்பானார் "சீ... நீயும் ஒரு பெண்ணா? இனியும் உன்னைப் பேசவிட்டால் உலகம் பொறுக்காது. சேணமிட்ட குதிரையாக வானத்தில் இருப்பாயாக. உன்னைப் பார்த்து ஆணவம் கொண்ட பெண்கள் திருந்தட்டும்." அயோஸ் வெளியேறினார். அவர் நடந்து கொண்டிருந்தார்.
இருள் சூழ்ந்திருந்தது. வானத்தைப் பார்த்தார். மக்கள் குழுமியிருந்தனர். அவர்களது கைகள் வானைச் சுட்டி நீண்டிருந்தன. "அதோ சேணமிட்ட குதிரை" எனப் பேசிக் கொண்டிருந்தார்கள். கனோஸ் சேணமிட்ட குதிரை வடிவத்தில் இன்றும் வானில் உலாவருகிறாள்.

## திருட்டுச் சகோதரர்கள்

'பெரிய கரடி' பற்றிய இன்னுமொரு கதையுண்டு. அதையும் அறிவோமா?

முன்னொரு காலத்தில் பூமியில் ஏழு சகோதரர்கள் வாழ்ந்தார்கள். அவர்களுக்குத் திருடுவதுதான் தொழில். அதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். அதனால் திருட்டுச் சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். திருடர்களை மக்கள் மதிப்பார்களா? நல்ல பெயர் இருக்குமா? எனினும் அவர்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். அவர்களிடம் ஒற்றுமை இருந்தது. பாசத்தோடு வாழ்ந்தார்கள். அண்ணன் சொன்ன சொல்லைத் தம்பிமார் தட்டுவதில்லை. எல்லோரும் சேர்ந்தே முடிவெடுப்பார்கள்.

அவர்கள் ஒரு சபதம் எடுத்தார்கள். "நாங்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். ஏழுபேரும் சகோதரர்கள். எக்காரணம் கொண்டும் பிரிவதில்லை. ஒன்றாகவே வாழவேண்டும். ஒரு தாயின் வயிற்றில் பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளையே திருமணம் செய்வது. ஒரு மாளிகையிலேயே வாழ்வது'' எனவும் தீர்மானித்தனர். அதற்காகக் காத்திருந்தனர். அப்படிப் பட்ட பெண்களைத் தேடி அலைந்தார்கள். பூமியின் இன்னொரு பகுதியில் ஏழு சகோதரிகள் இருந்தார்கள். அவர்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். அவர்களைத் தேடி மோப்பமிட்டார்கள். அவர்களைக் கண்டு பிடித்துத்து விடத் துடித்தார்கள்.

ஒருவாறு மோப்பம் பிடித்து அறிந்தார்கள். அவர்களைத் தாங்கள் மணம் முடிக்க எண்ணினர். திருடர்களை யாராவது விரும்புவார்களா? தங்கள் திட்டம் நிறைவேறாது என்பதனை அறிந்தார்கள். அதற்கான திட்டங்களைத் நீட்டினார்கள். சகோதரிகள் வாழும் இடத்தைக் கண்டு பிடித்தார்கள்.



அவர்கள் போகும் இடங்களைக் கண்காணித்தார்கள். அவர்கள் எப்போது வெளியில் செல்கிறார்கள். அவர்கள் யாரோடு போகிறார்கள். என்பதனை அறிந்தார்கள். அவர்களுக்காகக் காத்திருந்தார்கள்.
அவர்களைப் பல நாட்கள் பின்தொடர்ந்து சென்றார்கள். எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்ருந்தார்கள். அந்த நாளும் வந்தது. ஒதுக்குப் புறமாகக் ஒளிந்திருந்தார்கள்.

ஒரு மாலைப் பொழுது. சகோதரிகள் உலாவப் புறப்பட்டார்கள். ஒரு சோலையோரமாக நடந்தார்கள். தங்களை மறந்து மகிழ்ந்தார்கள். ஆடுவதும் பாடுவதுமாகப் பொழுது கழிந்தது. அளவளாவிச் சிரித்துச் சென்றார்கள். திருடர்கள் பதுங்கி இருந்ததை அவர்கள் அறியவில்லை. தங்களை மறந்து ஆடிப்பாடி ஓடித்திரிந்தார்கள். திருட்டுச் சகோதரர்கள் திடீரென அவர்கள் முன் பாய்ந்தார்கள். அந்த ஆபத்தைச் சகோதரிகள் எதிர்பார்க்க வில்லை. பயத்தால் தலைதெறிக்க ஓடினார்கள். ஒருவர்பின் ஒருவராகக் கால் போன போக்கில் ஓடினார்கள். திருட்டுச் சகோதரர்கள் துரத்தினார்கள். வேகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடினார்கள். ஒருத்தியால் வேகமாக ஓடமுடியவில்லை. அவளைப் பிடித்து விட்டார்கள். அவளால் போராட முடியவில்லை. அவள் அழுது கூக்குரலிட்டாள். அழுது புலம்பினாள். திருடர்கள் மசியவில்லை. அவளைக் கட்டித் தூக்கினார்கள். தங்களோடு கொண்டு போனார்கள். மற்றவர்கள் ஓடித் தப்பிவிட்டார்கள். மற்றச் சகோதரிகள் கடவுளிடம் முறையிட்டார்கள்.

கடவுள் கருணையுடன் கேட்டறிந்தார். அவருக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. திருட்டுச் சகோதரர்களைத் தண்டிக்கத் தீர்மானித்தார். அவர்கள் ஏழுபேரையும் அழைத்தார். கடுமையான தண்டனை கொடுத்தார். அவர்களை ஏழு நட்சத்திரங்களாக மாற்றினார். கரடி உருவாக்கி வானில் எறிந்தார். அவை கரடி வடிவில் போய்விழுந்தன. துருவ நட்சத்திரத்துக்குக் காவலாக இருக்கக் கட்டளையிட்டார். இப்போதும் பெருங்கரடி துரவ நட்சத்திரத்துக்குக் காவலாக உள்ளது.

## கார்த்திகைப் பெண்கள்

அது பூமியின் ஒரு பகுதி. அந்தப் பகுதியில் பல நாடுகள் இருந்தன. ஒரு நாட்டில் ஏழு அழகான சகோதரிகள் இருந்தார்கள். அவர்கள் ஏழுபேரும் ஒற்றுமையாக இருந்தனர். ஒன்றாகவே வெளியில் செல்வார்கள். ஒன்றாகவே உலா வருவார்கள். அவர்களைக் கடத்திச் செல்ல ஏழு திருட்டுச் சகோதரர்கள் திட்டமிட்டார்கள். அதற்காகக் காத்திருந்தார்கள். அந்த நாளும் வந்தது. திருட்டுச் சகோதரர்கள் அவர்களைக் கடத்திச் செல்லப் புறப்பட்டார்கள். சகோதரிகள் செல்லும் இடந்தேடி வந்தார்கள். சகோதரிகள் ஓரிடத்தில் கூடிநின்றார்கள். குதிரைகள் விரைந்து சென்றன. அவர்களைச் சூழ்ந்து கவர்ந்து செல்ல முயன்றார்கள். சகோதரிகள் பயந்து ஓடினார்கள். கால்போன போக்கில் பல திசைகளாலும் ஓடினார்கள்.



[library stamp]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருட்டுச் சகோதரர்கள் குதிரைகளில் இருந்தார்கள். குதிரைகளை முடுக்கினார்கள். குதிரைகள் கனைத்தன. பெண்களைத் துரத்தின. குதிரைகளோடு போட்டி போட முடியுமா? எனினும் விடாது ஓடினார்கள். ஒரு பெண்ணால் வேகமாக ஓடமுடியவில்லை. அவள் பயத்தால் இடறி விழுந்தாள். சகோதரர்கள் பாய்ந்து விழுந்து பிடித்துக் கொண்டார்கள். அவள் மிரண்டு அலறினாள். அழுது புலம்பினாள். சகோதரர்கள் விடவில்லை. அவளைப் பிடித்துக் கொண்டார்கள். அவளைக் கவர்ந்து சென்றார்கள்.

தப்பியோடிய சகோதரிகள் கடவுளிடம் முறையிட்டார்கள். கடவுளுக்குக் கோபம் வந்தது. அவர் திருடர்களை அழைத்தார். கவர்ந்து வந்த பெண்ணையும் அழைத்தார். திருடர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு அவள் வேண்டினாள். கடவுள் அவள்மேல் இரக்கங் கொண்டாள். அழகான நட்சத்திரமாக வானில் பிரகாசித்தால் எப்படி இருக்கும் என்று யோசித்தார். அப்படியே அவளைத் துருவ நட்சத்திரமாக மாற்றினார். அவளைக் கையில் ஏந்தி வான்வெளியில் எறிந்தார். "வானிலே பிரகாசித்துக் கொண்டிருப்பாயாக". கட்டளை இட்டார். அவள் அழகிய நட்சத்திரமாக வானில் பிரகாசித்தாள். கடவுள் மகிழ்ந்தார். அதேவேளை திருடர்களைப் பார்த்தார். அவருக்குக் கோபம் மிகுதியானது. திருடர்களைக் கரடிகளாக மாற்றினார். அப்படியே வானிலே வீசிவிட்டார். நீங்களும் நட்சத்திரங்களாக மாறுங்கள் என்றார். உடனே அவர்களும் நட்சத்திரமானார்கள். நீங்கள் துருவ நட்சத்திரத்தைக் காவல் செய்யவேண்டும். என்று கட்டளை இட்டார். அவர்கள் துருவ நட்சத்திரத்துக்குக் காவல் செய்கின்றனர்.

ஆறு சகோதரிகளும் பயந்து விட்டனர். ஆறுபேரும் ஒன்றாகவே இருந்தார்கள். சகோதரியைப் பிரிந்த கவலையில் தவித்தார்கள். எங்கு செல்வதென்றாலும் ஒன்றாகவே சென்றார்கள். பயந்து பயந்தே இருந்தார்கள். தங்கள் நிலையைக் கடவுளிடம் முறையிட்டார்கள். கடவுள் அவர்கள் மேல் இரக்கங்கொண்டார். அவர்களையும் நட்சத்திரங்கள் ஆக்கினார். வானில் ஆறுபேரும் ஒன்றாக மிகநெருக்கமாக இருக்க ஆசிர்வதித்தார். வானில் மாலை நேரத்தில் ஒன்றாகத் தோன்றுவார்கள். ஒவ்வொரு நாளும் ஒன்றாக தமது தங்கையைத் தேடுவார்கள். அந்த நட்சத்திரக் கூட்டத்தைத்தான் கார்த்திகை நட்சத்திரம் என்றழைப்பார்கள். அவற்றை 'ஆறாயம் வெள்ளி' என்று சொல்வார்கள். பெருங்கரடியின் வால்பக்கம் சிறிது தூரத்தில் சிறு நட்சத்திரம் இருக்கும். அதுதான் கடத்திவரப்பட்ட பெண்ணாகும்.

## அழகி அரியட்னாவின் மகுடம்

கிரேக்க நாட்டில் நட்சத்திரங்களைப் பற்றிய கதைகள் ஏராளம். அதிலொன்று அரியட்னாவின் மகுடமாகும். கிரீட் என்னும் தீவு இருந்தது. அத்தீவை ஆண்ட மன்னனை கிரீட்ராஜா என அழைப்பார்கள். அவருக்கு அழகான மகள் இருந்தாள். அவளது பெயர்தான் அரியட்னா. மிகவும் அழகானவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதேபோல் தைரியமும் துணிவும் கொண்டவள். தேவதைகளை விடவும் அழகானவள். அவளது அழகில் பலர் மயங்கினார்கள். ஆனால் அவள் தெஸேவுசை விரும்பினாள். அவன் ஒரு போர்வீரன். அஞ்சாநெஞ்சம் கொண்டவன். மிகத்திறமையான வீரன். கிரீட்ராஜா அதனை விரும்பவில்லை. அதனை அரியட்னாவிடம் கூறினார். அரியட்னா தந்தையின் சொல்லை கேட்கவில்லை.

ஒருநாள் அரியட்னா தெஸேவுசை அழைத்தாள். தந்தையின் கோபத்தை எடுத்துரைத்தாள். தனது விருப்பத்தையும் கூறினாள்.
இருவரும் யாரிடமும் கூறாது தமது நாட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டார்கள். அரியட்னா தெஸேவுஸின் பின்னால் அஞ்சாது சென்றாள். கிரீட்ராஜா மனம் கலங்கினார். சொல்லாமல் சென்றுவிட்டாளே என்று வருந்தினார். பெத்த மனம் பித்து. பிள்ளை மனம் கல்தானே. சிலநாட்கள் சென்றன. தெஸேவுஸின் கனவில் கடவுள் தோன்றினார். "நீ அரிட்னாவைப் பிரியவேண்டும். அவளை விட்டுவிடு." என்றார். தெஸேவுஸ் தடுமாறினான். கடவுளின் கட்டளையை மீறினால் தண்டனை கிடைக்கும். அதற்காகப் பயந்தான். அரியட்னாவைப் பிரியத் தீர்மானித்தான். ஒரு கடற்கரையோரமாக நடந்தார்கள். அங்கேயே அரியட்னாவைப் பிரியத் தீர்மானித்தான்.



என்னை நம்பி வந்தவளைக் கைவிடலாமா?. மனதில் கேள்விகள் எழுந்தன. கடவுளின் கட்டளைக்குப் பணிந்தான். அன்று வழமைபோல் உணவின்பின் அன்பாக உணவருந்தினார்கள். அன்பாக உரையாடினார்கள். முன்நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. நிலவு மெதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தது. இருள் சூழ்ந்து கொண்டது. தெஸேவுஸ் மனதைக் கல்லாக்கிக் கொண்டான். விலகிக் கிடந்த போர்வையால் அரியட்னாவைப் போரத்திவிட்டான். அவள் உறங்கிக் கொண்டிருந்தாள். அரியட்னாவுக்குத் தெரியாது தெஸேவுஸ் போய்விட்டான். பொழுது புலர்ந்து வெயில் பளீச்சிட்டது. அரியட்னா கண்விழித்தாள்.

தனது பார்வையைச் செலுத்தினாள். தெஸேவுஸைக் காணவில்லை. அரியட்னா தேடினாள். அவனைக் காணவில்லை. வருவான் என எதிர்பார்த்தாள் அவன் வரவே இல்லை. அழுதழுது அவள் முகம் வீங்கியிருந்தது. கண்ணீரும் கம்பலையுமாக இருந்தாள். அவளது அழுகை தொடர்ந்தது. கடவுளிடம் மன்றாடினாள். கடவுளரின் காதுகளில் அவளது மன்றாட்டம் ஒலித்தது. பாக்கஸ் என்னும் கடவுள் இரக்கமுள்ளவர். அவர் அரியட்னாவின் மீது இரக்கம் கொண்டார். அவளிடம் வந்தார். அவளுக்கு ஆறுதல் கூறினார். பலவழிகளில் உதவினார். அவளது அழகு அவரை ஈர்த்தது. பாக்கஸின் இரக்கம் அரியட்னாவை சிந்திக்க வைத்தது. அவர்மேல் அன்பும் மரியாதையும் வளர்ந்தது. அவளது விருப்பத்தோடு அவளை மனைவியாக்கினார்.

பாக்கஸ் அரியட்னாவின் அன்பில் மகிழ்ந்தார். அவளைப் பெரிதும் மதித்தார். அரியட்னாவின் அழகை அமரத்துவப் படுத்த எண்ணினார். ஆரியட்னாவின் தலையில் மலர் வளையம் இருந்தது. அது அவளது அழகுக்கு மெருகூட்டியது. அதனை அவளிடமிருந்து பெற்றார். அதனை வானத்தை நோக்கி வீசினார். அவை சிதறின. வானைநோக்கிப் பறந்தன. சிதறி அரைவட்டமாக அமைந்தன. மலர்கள் விலைமதிப்பற்ற கற்களாக மாறின. பின் நட்சத்திரங்களாக மாறின. அரைவட்ட வடிவில் இன்றும் ஒளிப்பிழம்பை விசுறுகின்றன. இதுதான் "வடமகுட விண்மீன்" கூட்டமாகும். அதனைக் காண்பவர்கள் அரியட்னாவை நினைக்கின்றனர். அழகி அரியட்னாவின் மகுடம் மின்னுகின்றதாம். வானில் அதனைத் தேடிப் பாருங்கள்.

## கசியோப்பியா விண்மீன் கூட்டம்

பண்டைய கிரேக்க நாட்டில் பல கதைகள் இருந்தன. அவற்றுள் விண்மீன்கள் பற்றிய கதைகள் சுவையானவை. வடதிசையில் பல விண்மீன் கூட்டங்டகள் உண்டு. அவற்றுள் சில முக்கியமானவை. அதிலொன்று கசியோப்பியா எனும் விண்மீன் கூட்டமாகும். இதன் கதை அலாதியானது. கதையைப் படிப்போமா?

எதியோப்பியா நாடு அழகானது. அங்கு ஏழைகளும் பணக்காரர்களும் வாழ்ந்தனர். அந்த நாட்டை ஸெபேயுஸ் ஆண்டுவந்தார். ஸெபேயுஸ் அன்பானவர். இரக்கமும் உள்ளவர். அவரது மனைவி கசியோப்பியா மிக அழகானவள். அவளது அழகைப் பலர் பாராட்டினார்கள். அது அவளுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெருமையாக இருந்தது. தனது அழகைப் பலரிடம் சொல்லி வியந்தாள். இவர்களுக்கு மிக அழகான மகளும் இருந்தாள். அன்ட்ரோமிடா என்பது அவளது பெயராகும். அவளுக்கு .அழகோடு துணிவும் இருந்தது. நாடு நலம்பல கண்டது.

அந்த நாட்டின் கடலுக்கு பொசெய்டோன் அரசனாவான். அவன் கடலில் ஆதிக்கம் செலுத்தினான். சக்தி வாய்ந்தவன். அவனிடம் பயங்கரமான திமிங்கிலங்கள் இருந்தன. அவைதான் அரசனின் படைவீரர்கள். அவை கடலைப் பாதுகாத்து வந்தன. கடலில் சூனியக்காரிகள் வாழ்ந்தனர். அவர்களை நெயிரோடுகள் என்றழைப்பார்கள். நெயிரோடுகளிடம் கசியோப்பியா தனது அழகைச் சொல்லுவாள். அவர்களை அழகற்ற ஜென்மங்கள் என்பாள். அவலட்சனங்கள் என்று ஏளனம் செய்வாள். நெயிரோடுகள் வருந்தினார்கள். இதனைத் தங்கள் கடலரசனிடம் முறையிட்டார்கள். கடலரசன் பொசெய்டோன் கோபம் கொண்டான். அவன் பெரிய திமிங்கிலங்களை அழைத்தான். அவற்றுள் மிகப்பயங்கரமான திமிங்கிலம் முன்னால் நின்றது. அதனைத் தேர்ந்தெடுத்தான். அதனை அழைத்தான். எதியோபியக் கரையைத் தாக்கும்படி கட்டளை இட்டான். அது கரையைத் தாக்கியது. மக்கள் பயந்து அழுதனர். மன்னனுக்குச் செய்தியனுப்பினார்கள்.

ஸெபேயுஸ் மன்னனுக்குச் செய்தி எட்டியது. அவன் கவலை கொண்டான். திமிங்கிலத்தை எவ்வாறு அடக்குவது.? மக்கள் சபை கூடியது. ஆலோசனை நடந்தது. அரசன் நாட்டைக் காக்க வேண்டும். அது அவனது கடமை. அதற்கு ஒரு வழி உண்டு. அழகிய கன்னியை திமிங்கிலத்துக்குக் கொடுக்கவேண்டும். அதற்கு அரசனது மகள்தான் பொருத்தம். அதனைச் செய்யும்படி சபை ஏகமனதாகத் தீர்மானித்தது. “எப்படி என் மகளைத் திமிங்கிலத்துக்குக் கொடுப்பேன்.” மன்னன் வருந்தினான். நாட்டைக் காப்பது மன்னனது கடமை. வேறுவழியில்லை. அன்ட்ரோமிடா அழைக்கப்பட்டாள். கடற்கரைக்கு அவளை இட்டுச் சென்றார்கள். அங்கிருந்த பாறையில் சங்கிலியால் பிணைத்தார்கள். அப்படியே விட்டு வந்தார்கள். இரவாகியது. ஒருபுறம் தனிமை. மறுபுறம் திமிங்கிலத்துக்குப் பலியாக வேண்டும் என்ற பயம். தனியே அன்ட்ரோமிடா தவித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதியோபாவின் தூரத்துக் கடலில் ஒரு தீவு இருந்தது. அத்தீவில் கோர்கோன்கள் என்ற அரக்கர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் பொல்லாதவர்கள். அவர்கள் கொடிய பெண்களைப் போலிருந்தார்கள். கோர்கோன்களின் தலைவி மெடுஸா. பார்ப்பதற்கு மிகப் பரங்கரமானவள். அவளைப் பார்ப்பவர்கள் கல்லாக மாறிவிடுவார்கள். கோர்கோன்களின் தலையில் மயிரில்லை. பதிலாகப் பாம்புகள் நெளியும். ஒவ்வொரு தலைமுடியும் பாம்பாக ஆடும். அவர்கள் அனைவருக்கும் துயரினைக் கொடுத்தார்கள். அவர்களை எதிர்ப்பவர்களைக் கல்லாக மாற்றி விடுவார்கள். அவர்களது அடாவடித்தனம் பெருகியது. ஒருநாள் பெர்சேயுஸ் அத்தீவுக்குப் போனான்.

அவன் எதியோபாவில் வாழ்ந்தான். அவன் தைரியமிக்க வீரன். அவன் வீரதீரச் செயல்களில் கெட்டிக்காரன். பயமென்பதே தெரியாதவன். அவனிடம் மாயமான மிதியடிகள் இருந்தன. கூரிய வாளும் இருந்தது. மிதியடிகளை இருகால்களிலும் அணிவான். போகும் இடத்தை மனதில் நினைப்பான். அது வான்வழியாகப் பறக்கும். நினைத்த இடத்தில் கொண்டுபோய் விடும். அவன் கோர்கோன்களின் செயலை அறிந்தான். ஒருநாள் அவன் அத்தீவுக்குப் போனான். மறைந்திருந்து அவர்களது செயலை அவதானித்தான். மெடுஸாவின் பார்வை பட்டால் கல்லாகி விடுவான். எப்படி மெடுஸாவின் தலையைத் துண்டிக்கலாம். யோசித்தான். அவர்கள் உறங்கும் வரை காத்திருந்தான். பொறுமையோடு விழித்திருந்தான். மெடுஸா உறங்கி விட்டாள். கண்ணை மூடிக்கொண்டு வெட்டினான். தலையை ஒரு பையினுள் வைத்தான். மிதியடியில் ஏறினான். வான்வழியே பறந்து வந்தான்.

அவனது பார்வை கடற்கரையில் விழுந்தது. பாறையில் அன்ட்ரோமிடா சங்கிலியால் பிணைத் தபடி கிடந்தாள். அவள் பக்கம் இறங்கினான். அவளது கண்களில் கண்ணீர். அன்ட்ரோ மிடாவின் கதையைக் கேட்டான். அவனுக்கு இரக்கம் பிறந்தது. திமிங்கிலத்துக்கு ஒரு பெண்ணைப் பலியாக் குவதா? என்ன செய்வது? யோசித்தான். தூரத்தே திமிங்கிலம் வந்தது. அவள் வீரிட்டாள். நிலைமையைப் புரிந்து கொண்டான். திமிங் கிலத்தின் மேல் பாய்ந்தான். அது பயங்கரமானது. அவனைப் புரட்டியது. வாளால் தாக்கினான். அது மசியவில்லை. அவனது மூளை வேலை செய்தது. மெடுஸாவின் தலையை எடுத்தான். அதனைத் திமிங்கிலத்திடம் காட்டினான். அவ்வளவுதான். வல்லமை கொண்ட திமிங்கிலம் கல்லாகியது. எதியோபாவின் அருகே திமிங்கிலம் ஒரு தீவாகியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெர்சேயுஸ் அன்ட்ரோமிடாவை விடுவித்தான். அரண்மனைக்குக் கூட்டிச் சென்றான். அரசன் ஸேபேயுஸ் மகிழ்ந்தான். மக்கள் அனைவரும் ஒன்று திரண்டார்கள். நாட்டுக்கு வந்த பேரழிவை நீக்கினான். நமது இளவரசியை மீட்டுத்தந்தான். அவனுக்கே இளவரசியை மணம் முடித்து வைத்தனர். கடவுள் அவர்களது வாழ்க்கையை அமரத்துவம் ஆக்க நினைத்தார். கசியோப்பியாவை விண்மீன் கூட்டமாக்கினார். வானில் விட்டார். ஸெபியுஸையும் பெர்சேயுஸையும் நட்சத்திரமாக்கினார். அன்ட்ரோமிடாவையும் நட்சத்திரமாக்கி வானில் விட்டார். இன்றும் அவை வானில் பிரகாசிக்கின்றன.

## அன்னப்பறவை



முற்காலத்தில் மனிதர்கள் இன்பமாக வாழ்ந்தார்கள். கடவுளிடம் அன்பு காட்டினார்கள். கடவுளின் ஆசி கிடைத்தது. கேட்ட வரங்களைக் கடவுள் கொடுத்தார். வல்லமையையும் கொடுத்தார். வல்லமையைப் பெற்ற மனிதர்கள் கடவுளை மறந்தார்கள். அதனால் அவர்களிடம் போட்டி, பொறாமை வளரத் தொடங்கியது. ஆளையாள் தாக்கத் தொடங்கினார்கள். நாடுகளுக்கிடையே போர்கள் எழுந்தன. மக்கள் பலர் இறந்தனர். ஏழ்மை வாட்டத் தொடங்கியது. பொய், களவு, கொலை போன்ற பாவச் செயல்கள் பெருகத் தொடங்கின. மனிதர்கள் ஒன்று கூடினார்கள். பாவச் செயல்களில் இருந்து எப்படி விடுபடுவது.? சிந்தித்தார்கள். கடவுள் மட்டுந்தான் காப்பாற்ற வல்லவர் என்பதை உணர்ந்தார்கள். தம்மைக் காப்பாற்றுமாறு கடவுளை இரந்தார்கள்.






ஸேவுஸ் சர்வ வல்லமை படைத்த கடவுளாக இருந்தார். பூமியில் மனிதர்கள் பாவச் சுமையில் இருப்பதை அறிந்தார். அவர்கள் படும் துன்பத்தைக் கண்டார். மக்கள் ஸேவுஸ் தேவனை நோக்கி இரந்தார்கள். "கடவுளே! சர்வ வல்லமை படைத்த தேவர் தேவனே! எங்களைக் காப்பாற்றுங்கள். நாங்கள் பாவக் கடலில் தத்தளிக்கிறோம்.

கொடுமைகள் வாட்டுகின்றன. மனிதர்கள் ஆளையாள் அழிக்கப் புறப்பட்டு விட்டனர். வீட்டில் தனிமையில் இருக்க முடியாது. கொள்ளையர் தொல்லை அதிகமாயிற்று. கடத்தலும் கப்பமும் அதிகரித்து விட்டது. மரணங்கள் அதிகரித்து விட்டன. மக்கள் பல கட்சிகளாகப் பிரிந்து சண்டையிடுகின்றார்கள். வன்முறை வெடித்துவிட்டது. எங்கள் துயரங்களைத் துடைக்க வேண்டும்." இரந்து கேட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அவர்களது துயரைத் துடைக்கத் தேவன் விரும்பினார். "நான் உங்கள் துயரைத் துடைப்பேன். சமாதானத்தை மலரச்செய்வேன். விரைவில் பூமிக்கு வருவேன். அதுவரை வானில் என்னைப் பார்க்கலாம். அண்ணார்ந்து மாலை வேளையில் பாருங்கள். அன்னப்பறவையாகத் தெரிவேன்." என்றார். தேவன் ஸேவுஸ் தானாகவே வெண்ணிறப் பறவையாகினார். "அதோ மனிதரை நோக்கி வானில் பறக்கிறார்". மக்கள் வானைப் பார்த்துச் சொன்னார்கள். சிலர் "ஆஹா அழகான சிலுவை தெரிகிறது" என்றார்கள். சிலர் "ஆஹா அழகான அன்னப்பறவை" என்றார்கள். "கொடுமைகளைக் களையும் நேரம் கடவுளுக்குத் தெரியும். அப்போது அவர் பூமிக்கு வருவார். அதுவரை காத்திருப்போம்." மக்கள் காத்திருக்கிறார்கள். இந்த விண்மீன் கூட்டங்கள் இன்றும் மக்களை வியப்பில் ஆழ்த்துகின்றன.

## அரியோன் விண்மீன்



சில சிறுவர்கள் வந்தார்கள். அவர்கள் கைகளில் கொப்பிகள் இருந்தன. இரண்டு குழுக்களாகப் பிரிந்தார்கள். வெவ்வேறு இடங்களில் இருந்தார்கள். வானத்தைப் பார்த்தார்கள். அவர்களுக்கு ஆச்சரியம். மாறி மாறிக் கதைத்தார்கள். விவாதித்தார்கள். ஒரு குழு சத்தமிட்டது. அதோ அங்கே பார். ஒருவன் சத்தமிட்டான். எங்கே? ..என்னது? மற்றவன் கேள்வி கேட்டான். ஒரு கையால் சுட்டிக்காட்டினான். அங்கே ஒரு வேட்டைக்காரன் தடியோடு நிற்கிறான். மிருகம் அவனைத் தாக்க வருகிறது. அதனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போரிடுகிறான். இந்த மிருகம் மானா? மரையா? அல்லது காளையா? புரியவில்லை. நட்சத்திரங்களைப் புள்ளிகளாகக் குறித்தார்கள். இணைத்துக் கோடுகள் வரைந்தார்கள். புராணக் கதையில் வரும் வீரன். கையில் ஒரு குறுந்தடி. சண்டைக் காட்சி. படம் கையில் இருந்தது. அழகான காட்சியோடு விண்மீன்களின் படம். அது அரியோன் விண்மீன் கூட்டம். ஆரவாரித்தார்கள். அரியோனின் கதை தெரியுமா? சொல்லட்டுமா? கேளுங்கள்.

கிறீஸில் கி.மு. 500 ஆண்டுகளுக்கு முன் அரியோன் பெரிய வேட்டைக்காரனாகத் திகழ்ந்தான். அவனுக்குப் பல வித்தைகள் தெரியும். கடலுள் நடப்பான். தண்ணீருக்குள் நடந்து திரிவான். ஆனால் அவனது தலை நனையாதிருக்கும். அதேவேளை தன்னை எந்த மனிதரோ அல்லது விலங்கோ வெல்லமுடியாது எனப் பெருமிதம் கொண்டான்.

உலகத்தில் உள்ள அத்தனை விலங்குகளையும் கொன்றுவிடுவேன் என உலா வந்தான். உலகத்தின் கடவுளாக காயா இருந்தாள். அரியோன் உலகத்தின் விலங்குகளைக் கொன்றுவிடுவான் எனப் பயந்தாள். அரியோனை அழித்துவிட முடிவெடுத்தாள். ஒருநாள் பலம்வாய்ந்த தேளை அழைத்தாள். அரியோனைத் தாக்கி அழிக்குமாறு பணித்தாள். அரியோனுக்கும் தேளுக்குமிடையில் போர் மூண்டது. தேள் அரியோனின் குதிகாலில் கொடுக்கால் தாக்கியது. அரியோன் வீழ்ந்தான். காயா மகிழ்ந்தாள். எனினும் இருவரையும் மதித்து வானில் நட்சத்திரங்களாக மாற்றிவிட்டாள். மீண்டும் இருவரும் போரிடாதவாறு மிகத்தூரத்தில் எதிர்ப்புறமாக வைத்துவிட்டாள். வானில் நட்சத்திரமாக தேளும், அரியோனும் இன்றும் தெரிவதைக் காணலாம்.


**கதை -2**

கிரேக்கத்தில் அரியோனைப் பற்றி இன்னும் ஒரு கதையுண்டு. ஆர்திமிஸ் என்ற பெண் கடவுள் இருந்தாள். மிகவும் அழகான கடவுள். அவள்தான் விலங்குகளுக்கும் கடவுளாக இருந்தாள். வேட்டையாடுவதில் மிகவும் கெட்டிக்காரி. ஆர்திமிஸ் அறியோனின் அழகில் மயங்கினாள். அவனையே திருமணம் செய்யவும் ஆவலோடு இருந்தாள். அவளுக்கு அப்பலோ என்றொரு தம்பி இருந்தான். அப்பலோவுக்கு அரியோனைப் பிடிக்காது. அவன்மேல் பொறாமையோடு இருந்தான். பகைமை பாராட்டினான். எப்படியும் அரியோனை இல்லாதொழிக்கத் திட்டமிட்டான். அதற்காகக் காத்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் அப்பலோ, ஆர்திமிஸை அழைத்துக் கொண்டு உலாவந்தான். கடற்கரையோரமாகச் சென்றார்கள். அரியோன் நீச்சலில் ஆர்வமுள்ளவன். தன்னை மறந்து நீந்தி விளையாடிக் கொண்டிருந்தான். அரியோன் நீந்தி விளையாடுவது அப்பலோவுக்குத் தெரியும். இந்தத் தருணத்தைப் பயன்படுத்த நினைத்தான். அரியோன் தூரத்தில் தலையின் ஒருபகுதி மட்டும் தெரிய நீந்திக் கொண்டிருந்தான். தூரத்தில் நிற்பவர்களுக்கு அது தலையென்று அடையாளம் காணமுடியாது. ஆர்திமிஸ் அதோ தெரிகிறது ஒரு கருமையான புள்ளி. அதற்குக் குறிவைத்து உன்னால் அம்புவிட முடியுமா? அதனை முடிந்தால் அடி பார்ப்போம். ஆர்வமூட்டினான். ச்சா... இது பெரிய வேலையா. இதோ பார்? என்றாள். உன் கெட்டித்தனத்தைப் பார்ப்போமே என்றான். அவளுக்கு அது அரியோன் என்பது தெரியாது. வில்லை வளைத்து அம்பைத் தொடுத்தாள். ஒரே அடியில் வீழ்த்த வேண்டும். தெரியுமா? என்றான். அவளும் குறிவைத்து அடித்தாள். அந்தக்குறி தவறாது





அரியோனின் நெற்றிப் பொட்டில் பாய்ந்து அவனது உயிரைக் குடித்தது. அவனது உயிர் பிரிந்தது.. உடலை அலைகள் கரையில் தள்ளிவிட்டன. அதனைப் பார்பபதற்காக ஆர்ரமிஸ் ஓடினாள். அவளுக்கு மயக்கம் வந்தது. யாரைத் திருமணம் செய்யவேண்டும் என்று ஏங்கினாளோ அவனையே தான் கொன்று விட்டதாக அழுதாள். ஓரியோனின் உடலைத் தனது சந்திரத் தேரிலேற்றி வானத்துக்குக் கொண்டு சென்றாள். வானத்தில் இருளான இடத்தைத் தேடினாள். பொருத்தமான இடத்தைக் கண்டுகொண்டாள். அங்கு அரியோனின் உடலை வைத்தாள். அவனது உடலை வைத்துப் பார்த்துக் கொண்டே இருந்தாள். ஏக்கத்தினால் அவள் களைப்படைந்து போனாள். மங்கலான நட்சத்திரங்களின் மத்தியில் பிரகாசமான நட்சத்திரக் கூட்டமாக இன்றும் அரியோன் தெரிகிறது. ஆர்ரமிஸ் சோர்ந்து போய் காத்திருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரகணங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன?

வானில் அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இரவு நேரங்களில் வானைப் பாருங்கள். வானவேடிக்கை தெரியும்.




நட்சத்திரக்கூட்டங்கள் மின்விளக்குப் போடும். சில ஒளிவீசிப் பிரகாசிக்கும். சில மங்கலாக எரியும். நிலா சிலநாட்களில் பிறைவடிவில் தெரியும். சிலநாளில் முழுநிலாவாக ஒளிரும். சில நாளில் நிலாவையே காணமுடியாது. விண்கற்கள் எரிந்து வீழ்வதைக் காணலாம். செயற்கைக் கோள்கள் உலாப் போகும். மேகக்கூட்டம் அசைந்து திரியும். கிரகணங்களும் வானில்தான் நிகழ்கின்றன.

## கிரகணங்கள்

கிரகணங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன? கிரகணங்கள் கோள்களின் அசைவினால் ஏற்படுகின்றன. சூரியன், சந்திரன் பூமி ஆகியவை நேராக நிலைகொள்ளும் போது கிரகணங்கள் ஏற்படுகின்றன. பொதுவாகச் சந்திர, சூரிய கிரகணங்கள்தான் ஏற்படுகின்றன.

சூரியனின் ஒளிக்கற்றைகள் சந்திரன் மேல் படும். சந்திரனின் நிழல் பூமியில் விழும். அப்போது சூரியகிரகணம் தோன்றும். படத்தில் இதனைத் தெளிவாகக் காணலாம். சூரியகிரணகணத்தை இருவகைப் படுத்தலாம்.

கிரகணங்கள் ஏற்படுவதற்கு சில காரணிகள் தேவை. சூரியன், சந்திரன், பூமி ஆகியவை ஒரு நேர்கோட்டில் நிலைகொள்ள வேண்டும். சூரியனின் ஒளிக்கதிர்கள் சந்திரன் மேல் படியும். அப்போது அதன் நிழல் பூமியில் விழும். இச்செயற்பாடுதான் கிரகணம் ஆகும். சூரியனுக்கும், புவிக்கும் இடையில் சந்திரன் நிலைகொள்ளும். சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையில் பூமி நிலைகொள்ளும் போது சந்தரனின் நிழல் பூமியில் விழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது சந்திர கிரகணம் தோன்றும்.

சூரிய கிரகணங்களை இருவகைப் படுத்துவார்கள்.

1. முழுச் சூரியகிரகணம்.: சந்திரனின் நிழல் பூமியில் முழுமையாக விழும்போது பூரண சூரியகிரகணம் உருவாகும்.
2. சந்திரனின் நிழல் பூமியின் ஒரு பகுதியை மட்டும் மறைத்துச் சென்றால் அதனை பாதிச் சூரியகிரகணம் என்பார்கள்.

## சந்திரகிரகணம்

சந்திர கிரகணங்களை இருவகைப் படுத்துவார்கள்

**1. முழுச் சந்திர கிரகணம்**

சூரியனின் கதிர்கள் பூமியில் விழும். அதன் நிழல் சந்திரனை மறைக்கும்.


**2. பாதிச் சந்திர கிரகணம்**

சூரியனின் கதிர்கள் பூமியில் விழும். அதன் நிழல் சந்திரனின் ஒரு பகுதியை மட்டும் மறைக்கும்.

## கிரகணங்கள் பற்றிய கதைகள்

## மகாபாரதக் கதை

மகாபாரதக் கதை சுவையூட்டுவதாகும். பாரதப் போரில் பாண்டவருக்கும், துரியோதனன் ஆதியோருக்கும் போர் நிகழ்ந்தது. கண்ணன் அருச்சுனனுக்குத் தேர் செலுத்தும் சாரதியாகச் செயற்பட்டான். அபிமன்யு அருச்சுனனின் மகன். அவன் வீராதி வீரன். போரில் எதிரிகளை வீழ்த்தி வந்தான். அவனை நேரில் வெல்லமுடியாது. சூழ்ச்சியால் வெல்வதற்கு வியூகம் வகுத்தார்கள். அந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியூகத்தை உடைத்துக் கொண்டு அபிமன்யு முன்னேறினான். அவனைத் தனிமைப் படுத்திவிட்டார்கள். அனைவரும் ஒன்றுசேர்ந்து போரிட்டார்கள். அபிமன்யு நிராயுதபாணியானான். சல்லியன் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான். சந்தர்ப்பம் வந்தது. கபடமாக அபிமன்யுவைக் கொன்றுவிட்டான்.

செய்தியறிந்த அருச்சுனன் ஆவேசம் கொண்டான். "நாளை பொழுது அஸ்தமிக்குமுன் சல்லியனைக் கொல்வேன். இல்லையேல் நான் உயிரை விடுவேன்". என்று சபதம் செய்தான். துரியோதனனுக்குச் செய்தி பறந்தது. சல்லியனைப் போருக்கு அனுப்பாமல் பாதுகாக்கத் திட்டமிட்டான். ஒருபொழுதைக் கழித்து விட்டால் அருச்சுனன் தானே உயிரை விட்டுவிடுவான் என்பது அவர்களது திட்டமாகும். பொழுது விடிந்தது. சல்லியன் ஒளிந்து கொண்டான். போர் மூண்டது. போர் நடந்து கொண்டிருந்தது. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கண்ணன் இருந்தான்.

கண்ணன் தனது சக்கரத்தை வானுக்கனுப்பிச் சூரியனை மறைத்தார். திடீரெனப் பொழுது மறைந்தது. பொழுது மறைந்து விட்டது. இனிப்பயமில்லை என்று சல்லியன் வெளியே வந்தான். ஆனந்தக் கூத்தாடினார்கள். சட்டென இருள் விலகியது. அருச்சுனனின் அம்பு சல்லியனைப் பதம் பார்த்தது. இப்படிக் கதை செல்கிறது. உண்மையில் நடந்ததைச் சிந்தியுங்கள்.

## மத்திய கிழக்கு நாடுகளில்

கி.மு. 585 வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வு இது. மத்திய கிழக்கில் லிடியன்ஸ் என்றொரு நாடு இருந்தது. அதன் அயல்நாடுதான் மெடெஸ் நாடு. இந்த இரண்டு நாடுகளுக்கும் அடிக்கடி போர் நடந்தது. ஒருமுறை தொடர்ந்த போர் ஓயாது ஐந்து வருடங்கள் தொடர்ந்து நடந்தது. இரண்டு நாடுகளும் விட்டுக் கொடுப்பதாய் இல்லை. பல இழப்புக்கள் ஏற்பட்டன. பொருளாதாரம் வீழ்சியுற்றது. ஆனாலும் இரண்டு நாட்டு அரசர்களும் போரை விடுவதாக இல்லை.

போர் நடந்து கொண்டிருந்தது. பலவீரர்கள் செத்து மடிந்தார்கள். எங்கும் அழிவு. இரத்த ஆறு ஓடியது. காயமுற்றவர்கள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். நடுப்பகல் வெயில் கொழுத்திக் கொண்டிருந்தது. சூரியன் வானில் இருந்து வேடிக்கை பார்த்தது. திடீரெனப் பொழுது மறைந்தது. போர்க்களத்தை இருள் கவ்வி மூடிக்கொண்டது. ஒன்றுமே தெரியவில்லை. தாங்கள் இப்படிப் போரிடுவதால் கடவுள் கோபித்துக் கொண்டதாக நம்பினார்கள். வீரர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டார்கள். அப்படியே போர்க்களத்தில் நின்றார்கள். அரசர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானோதயம் வந்து விட்டது. அரசர்களது மனங்கள் மாறின. "போரை நிறுத்துங்கள்". இரண்டு அரசர்களும் கட்டளை இட்டார்கள். வீரர்கள் உடனடியாகத் தாங்கள் சண்டையிடுவதை நிறுத்தினார்கள். சமாதானம் செய்து கொண்டார்கள். ஒரு சூரிய கிரகணம் தோன்றியதால் இருநாடுகளுக்கு இடையேயான போர் முடிவுக்கு வந்தது. மக்கள் சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

## கொலம்பஸின் கதை

கொலம்பஸ் நாடுகாண் படலத்தில் ஈடுபட்டிருந்தார். 1503 ஜூன் 25ந் திகதி ஜமேக்காவில் உள்ள சென்ற் ஆன்ஸ் குடாவில் அவரது கப்பல் கரைதட்டியது. அங்கு பழங்குடிர்கள் வாழ்ந்தார்கள். கொலம்பஸ் பலரிடம் உதவி கோரினார். கொலம்பஸ் குழுவினருக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. கொலம்பஸ் சந்திரகிரகணம் பற்றி அறிந்திருந்தார். அவர் கேத்திரகணித முறையில் சந்திரகிரகணம் எப்போது ஏற்படும் என்று அறிந்திருந்தார்.

பழங்குடி மக்களுக்குச் சந்திர கிரகணம் ஏற்படுவது பற்றித் தெரியாது. கொலம்பஸுக்கு மறுநாள் அதவாவது 1504ம் ஆண்டு பெப்ருவரி 29ல் சந்திரகிரகணம் நிகழவிருப்பதை அறிந்திருந்தார்.

மக்களிடம் உணவு தருமாறு உதவி கேட்டார். அவர்கள் மறுத்தார்கள். எங்களுக்கு உணவு தராவிட்டால் கடவுள் உங்களைத் தண்டிப்பார். நாளை இரவு சந்திரன் வானத்தில் வரும். திடீரென சந்திரன் மறையும். உலகத்தை இருள் மூடிக்கொள்ளும். என்றார். அந்நாட்டுப் பழங்குடியினர் சிரித்தார்கள். சிரித்தபடி "பார்ப்போம்" என்றார்கள். கொலம்பஸ் சொன்னதை அவர்கள் நம்பவில்லை. கொலம்பஸ் சொன்னபடியே அடுத்தநாள் 1504ம் ஆண்டு பெப்ருவரி 29 இரவு வந்தது. வானத்தில் சந்திரன் பிரகாசித்து வந்தது. என்ன ஆச்சரியம்? சந்திரன் திடீரென மறைந்தது. சந்திரகிரகணம் நிகழ்ந்தது. செவ்விந்தியர்கள் பயந்துவிட்டார்கள். கொலம்பஸைப் பயத்துடன் சூழ்ந்து கொண்டார்கள். அவர் அம்மக்களுக்கு பயப்பட வேண்டாம் என்று ஆறுதல் கூறினார். மெதுவாக இருள் விலகியது. மக்கள் ஆரவாரித்தனர். கொலம்பஸின் மேல் மதிப்பு ஏற்பட்டது. அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவுவகைகளைக் கொடுத்து உபசரித்தார்கள்.

## இந்துசமயத்தில் கிரகணம்

சூரியனையும், சந்திரனையும் இராகு என்னும் பாம்பு விழுங்குவதாக இந்துசமயப் புராணங்கள் கூறுகின்றன. தேவர்கள் நீடு வாழ்வதற்காக அமிர்தம் வேண்டி நின்றார்கள். அமிர்தம் எங்கே கிடைக்கும். திருப்பாக் கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்கும் என விஷ்ணு கூறினார். தேவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் கடையமுடியாது. ஆதலால் அசுரர்களையும் அழைத்தார்கள். மகாமேரு மலையை மத்தாகப் பயன்படுத்தினார்கள். ஆதிசேஷன் என்ற பாம்பை கயிறாகப் பயன் படுத்தினார்கள். தேவர்கள் ஒரு புறம் நின்றார்கள். அசுரர்கள் மறுபுறம் நின்றார்கள்.

மலையசைந்தது திருப்பாக் கடல் கடையப்பட்டது. ஆதிசேஷனுக்கு வலித்தது. அமிர்தம் உருவாகிக் கொண்டு வந்தது. வலியினால் ஆதிசேஷன் விஷத்தைக் கக்கிவிட்டது. அதனைத் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். அவர் உடனே அந்த விஷத்தைக் கையிலேந்தி விழுங்கினார். அவரது மனைவி உமாதேவியார். அவர் ஓடோடி வந்தார். சிவனாரின் தொண்டையை அழுத்திப் பிடித்தார். விஷம் கீழிறங்க வில்லை. தொண்டைக் குழியோடு நின்றுவிட்டது. சிவனின் தொண்டையில் விஷம் இருந்தது. அதனால் அவரது தொண்டை நீலம்பாரித்துவிட்டது. அவருக்குத் திருநீலகண்டன் என்ற பெயரும் வந்தது.

அமிர்தம் கிடைத்துவிட்டது. தேவர்களுக்கு மட்டும் அமிர்தம் கிடைக்க வேண்டும். அசுரர்களுக்குக் கிடைக்கக் கூடாது. கிடைத்தால் அவர்கள் சாகா வரம் பெற்றுவிடுவார்கள். என்ன செய்வது. தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார்கள். மகாவிஷ்ணு மோகினி வடிவில் வந்தார். அசுரர்கள் அந்த அழகியின் அழகில் மயங்கிக் கொண்டிருந்தார்கள். இராகு என்ற அசுரன் தேவர்கள் போல் மாறுவேஷத்தில் வந்தார். தேவர்களோடு கலந்து கொண்டார். அவரை யாரும் அடையாளம் காணவில்லை. ஆனால் சூரியனும் சந்திரனும் நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர். மெதுவாக விஷ்ணுவிடம் கூறிவிட்டார்கள். தேவர்களுக்கு அமிர்தம் பரிமாறப் பட்டது. இராகுவுக்கும் கொடுபட்டது. அவர் குடிப்பதற்கு முயற்சிக்கையில் மோகினி வடிவிலிருந்த மகாவிஷ்ணு இராகுவின் கழுத்தைத் துண்டம் செய்தார். வாய்க்குள் அமிர்தம் சென்றிருந்தது. அதனால் தலைப்பகுதி உயிரோடிருந்தது. உடல் கேதுவாக மாறியது. இராகுவும் கேதுவும் சேர்ந்து கொண்டன. சூரியனையும் சந்திரனையும் விழுங்கிவிடச் சபதமெடுத்தன. இன்றுவரை அவை சந்திரனையும், சூரியனையும் விழுங்கும் நிகழ்ச்சி காலத்துக்குக் காலம் நடைபெறுகிறது. அதுதான் கிரகணம். என்று புராணம் கூறுகிறது.

## மிகப்பழங் காலத்தில் கிரகணங்கள்

சூரிய கிரகணங்களையிட்டு மக்கள் பயந்தார்கள். போர்களும், இயற்கை அனர்த்தங்களும் ஏற்படுவதற்கான சான்றுகளாகக் கொண்டார்கள். கிரகணங்களின் பதிவுசெய்யப்பட்ட சான்றுகள் வரலாற்றைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. வரலாற்றாசிரியர்கள் கிரகணங்கள் தொடர்பான சில பதிவுகளைச் செய்துள்ளனர். இவை மிகவும் பயனுள்ளனவாக இருக்கின்றன. அவற்றிலிருந்து பல உண்மைகளைக் கண்டறிந்து கொள்ள முடியும். கி.மு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

763 ஜுன் 15ல் ஒரு சூரிய கிரகணம் நிகழ்ந்துள்ளதாக அசிரியர்களது குறிப்புக்கள் உள்ளன. இதனை (Bur Sagale ) பர் சாகலே கிரகண என அழைக்கப்படுகிறது. மிகப்பழமைவாய்ந்த பதிவாக இது உள்ளது. (Bruce Masse) புறுஸ் மாஸ் என்பவர் பல ஆய்வுகளை மேற்கொண்டார். சூரிய கிரகணம் கி.மு 2807 மே 10ல் நிகழ்ந்துள்ளதாகக் குறிப்பிடுவர். பபிலோனியரினதும். சீனர்களினதும் குறிப்பின்படி கி.மு 1312ல் சூரியகிரகணம் நிகழ்ந்துள்ளது.

சாடிஸ் அரசன் கிறீசுக்கெதிரான படையெடுப்பின் போது கி.மு 478 பெப்ருவரி 17ல் சூரியகிரகணம் நிகழ்ந்துள்ளதாக ஹெரோடோரஸ் குறிப்பிடுவர். அதே போல் கி.மு. 477 ஓகஸ்ற் 01ல் தெமோபிலி- சலமிஸ் போரின்பின்னர் சூரியகிரகணம் நிகழ்ந்துள்ளது. ஆயர்லாந்தின் வரலாற்று இதிகாச நூலில் கி.பி.512 ஜுன் 29ல் சூரியகிரகணம் நிகழ்ந்ததற்கான குறிப்புகள் உண்டு. யேசுநாதரை சிலுவையில் அறைந்த நாளிலும் சூரியகிரகணம் தோன்றியதாக குறிப்புகள் உள்ளன. பெரியவெள்ளி என இது அழைக்கப்படுகிறது. இதேபோல் கி.பி. 187[illegible] தென்ஆபிரிக்காவில் பிரித்தானியப் படைகளுக்கும், சுளு வீரர்களுக்கும் போர் நடந்தது. ஜனவரி 22ல் சரியாக பிற்பகல் 2.29க்கு சடுதியாக இருள்சூழ்ந்தது. சூரியகிரகணம் நிகழ்ந்தது. பிரித்தானியப் படைகளைச் சுளு வீரர்கள் கொன்று குவித்து வெற்றி கண்டனர். பிரித்தானிருக்குப் படுதோல்வியேற்பட்டது. கிரகணங்களால் வரலாறுகள் மாற்றமடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் நூல்கள்

1. இன்பக் கனிகள் - சிறுவர் பாடல்கள்
2. பாட்டுப் பாடுவோம் - சிறுவர் பாடல்கள்
3. காகமும் தம்பியும் - சிறுவர் பாடல்கள்
4. பாடி ஆடுவோம் - சிறுவர் பாடல்கள்
5. கடலும் காவேரியும் - சிறுவர் பாடல்கள்
6. சின்னச் சின்னப் பாட்டு - சிறுவர் பாடல்கள்
7. மனதுக்கினிய பாட்டு - சிறுவர் பாடல்கள்
8. ஆனந்தமான பாட்டு - சிறுவர் பாடல்கள்
9. சகோதரராய் வாழ்வோம் - சிறுவர் பாடல்கள்
10. ஆடி மகிழ்வோம் - சிறுவர் செயல் விளையாட்டு
11. பூஞ்சிட்டுக்கள் - சிறுவர் கதைகள்
12. சின்னத்தேவதைகள் -சிறுவர் கதைகள்
13. கண்ணனும் இராமனும். சிறுவர் கதைகள.
14. தங்க மாம்பழம் - சிறுவர் கதைகள்
15. பளிங்குத் தீவு சிறுவர் நாவல்
16. பயங்கொள்ளலாகாது பாப்பா சிறுவர் நாவல்.
17. காட்டில் கலவரம்.- சிறுவர் நாவல்
18. _ல்லாசப் பயணம் - சிறுவர் நாவல்
19. மனதில் உறுதி வேண்டும் - சிறுவர் நாவல்
20. வாக்கினிலே இனிமை வேண்டும் -இளைஞர் நாவல்
21. கேணிப்பித்தன் கவிதைகள் - கவிதைத் தொகுதி.
22. அந்த ஆவணி ஆறு சிறுகதைகள்
23. வம்மிப் பூ - சிறுகதைகள்
24. கேணிப்பித்தன் கதைகள்
25. அற்புதமான வானம் - சிறுவர் கதைகள்
26. சிறகு வைத்த கதைகள் - சிறுவர் கதைகள்.
27. துணிச்சல் மிக்க சுந்தரி சிறுவர் நாவல்
28. சுனாமி தந்த உறவு. சிறுவர் நாவல்.
29. ஏன் வந்தாய் - சிறுகதைகள்
30. அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை
31. கனவு மெய்ப்பட வேண்டும் - நாவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7228

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர்...



கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்கள் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஆலங்கேணிக் கிராமத்தில் பிறந்தவர். நாடறிந்த எழுத்தாளர். சிறுவர்களுக்காகப் பலநூல்களை எழுதி பல சாகித்திய விருதுகளைப் பெற்றவர். ஆசிரியர், அதிபர் கல்விப்பணிப்பாளர் எனச் சேவையாற்றியவர். கவிதை, சிறுகதை, நாவல். கட்டுரை, பத்தியெழுத்து, நாடகம் எனப் பலதுறைகளிலும் ஈடுபட்டுழைப்பவர். முறைசாராக் கல்வியிலும், முன்பள்ளிக் கல்வியிலும் ஆர்வம் கொண்டவர். விளையாட்டலலாத விளையாட்டு என்ற நூலைப் பலவல்லுநர்களுடன் சேர்ந்து எழுதி, அதனைத் தமிழில் அழகாக மொழிமாற்றம் செய்தவர். ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வியில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். கலாபூஷணவிருது, ஆளுநர் விருது. கிழக்குப் பல்கலைக்கழக இலக்கிய முதுமானிப்பட்டம் ஆகியவற்றைப் பெற்றவர். இதுவரை 30 நூல்களை எழுதியுள்ளார். இந்நூல் சிறுவர்களுக்குப் பெருவிருந்தாகும்.

கலாநிதி ச.அருளானந்தம் அவர்களது 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்ற நாவல் 'றுகுணுப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் திரு. தம்மிக ஜயசுந்தர' அவர்களால் சிங்களத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்படுகிறது. இது நமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாகும். தற்போது ஒபர் (சிலோன்) நிறுவனத்தில் ஆலோசகராக கடமையாற்றுகிறார். 'அற்புதமான வானம்' என்ற இந்த சிறுவர் சிந்தனைக் கதைகள் அற்புதமான பல்வேறுபட்ட கதைகளைக் கொண்டது. நாமும் நமது சிறார்களும் அவசியம் படிக்கவேண்டியது. இந்நூல் நம்மை வானில் உலாவரச் செய்கிறது. கிரகங்களின் விபரங்களைக் கூறுகிறது. கிரகணங்களின் தோற்றம் பற்றி எடுத்துரைக்கிறது. அதிசயிக்கத் தக்க கதைகளைத் தருகிறது. நல்ல படிப்பினையை வாசகர்களுக்குத் தருகிறது. கலாநிதி, கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்களது நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்று ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவரது இலக்கியப் பணி தொடர நாமெல்லோரும் சேர்ந்து வாழ்த்துவோம்.

**வலயக்கல்விப் பணிமனை**
**திருகோணமலை**

**ஒ.குலேந்திரன்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்**

ISBN
ATPUTH
21
MISAAN PRINTERS (PVT) LT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org